


# சமபந்தி விருந்து

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளை ஒட்டி 'பாரத ரத்னா காமராஜர் கல்சுரல் அகாடமி' யின் சார்பில் சமபந்தி விருந்து சென்னை கடற்கரையில் உள்ள காமராஜர் சிலையின் முன்பாக 15-7-80-ல் நடைபெற்றது.

ஏறக்குறைய 2000 அரிசன மக்களுக்கு சமபந்தி விருந்து வழங்கப் பெற்றது.

மேதகு ஆளுநர் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களும் அமர்ந்து சாப்பிடுவதற்காகத் தனியாக மேஜைகளும் நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. ஆனால் அவர்கள் அதில் அமராமல் தாழ்த்தப்பட்ட இனத்து மூதாட்டிகள், சிறுமிகள் ஆகியோரின் பக்கத்தில் அமர்ந்து உணவு அருந்தினார்கள்.

தமக்குப் பக்கத்தில் அமர்ந்து உணவருந்திய சுந்தரி, பூபதி என்னும் குழந்தைகளைத் தட்டிக் கொடுத்து நன்றாகச் சாப்பிடுமாறு கூறிய முதல்வர், சிறிது சாதத்தை அவர்கள் வாயில் ஊட்டினார். சுந்தரி என்னும் சிறுமி ஆர்வத்தின் காரணமாக தனக்கு அளித்த உணவினை முதல்வருக்குக் கொடுத்த போது அதை அவர் மகிழ்ச்சியுடன் வாங்கி அருந்திய காட்சி, கண்டோரை ஈர்த்தது; புதிய வரலாற்றைப் படைத்தது. ஒரு குழந்தையின் வாய் ஓரத்தில் காணப்பட்ட உணவுப் பருக்கையை முதல்வர் தமது கையால் துடைத்த நிகழ்ச்சி அனைவரின் உள்ளங்களிலும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி விட்டது.

இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் குறிப்பிட்டார் :

''பறையர், பள்ளர், சக்கிலியர்'' என்று இருந்த பெயர்களை மாற்றி, கடவுளின் குழந்தை என்று சொல்லும் அளவுக்கு 'அரிஜன்' என்று காந்தியடிகள் பெயர் வைத்தார். அதை நான் கருத்து மாறுபாடாகக் கருதவில்லை. ஆனால் 'அரிஜன்' என்றால் அதுவே சமுதாயத்தின் ஒரு பிரிவினரைப் பிரித்து வைத்துப் பார்ப்பதுபோல் ஆகிவிடுகிறது. அது தொடரவேண்டுமா என்பது பற்றிப் பலமுறை சிந்தித்திருக்கிறேன். அதற்கு வேறு ஏதாவது ஒரு மாற்று வழி ஒன்று காணவேண்டும்.

''தாழ்த்தப்பட்டவர்கள் என்று பெயரே தவிர தாழ்ந்தவர்கள் அல்ல; பிற்பட்டவர்கள் அல்ல-பிற்படுத்தப்பட்டவர்கள். ஆகவே பலகீனத்தை எடுத்துக் காட்டும் அளவுக்குப் பெயர் வைக்கக்கூடாது!''

# மக்களுக்கும் அரசுக்கும் தக்கதொரு பாலம்



மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்

**திரு இராம. வீரப்பன்**

[செய்தி-சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் மானியக் கோரிக்கையை 10-7-80 அன்று சட்டப்பேரவையின் முன் வைத்து ஆற்றிய உரையிலிருந்து]

செய்தி—மக்கள் தொடர்புத் துறை, அரசுக்கும் பொது மக்கள் மற்றும் பத்திரிகை உலகுக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்தும் ஒரு பொதுத்தொடர்பு அமைப்பாக இயங்கி வருகிறது. அரசின் கொள்கைகள், திட்டங்கள், செயல்கள், சாதனைகள் ஆகியவை, பத்திரிகைகளுக்கான செய்திக் குறிப்புகள், திரைப்படங்கள், பொருட்காட்சிகள், நாடகம்—கலை நிகழ்ச்சிகள் மற்றும் நூல் வெளியீடுகளாக இத்துறையின் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. பொது மக்களின் குறைகளை, தேவைகளை அரசுக்கும், அரசின் நிர்வாகத் துறைகளுக்கும் எடுத்து விளக்கும் பணியும் இத்துறையினால் மேற்கொள்ளப்படுகிறது.

அரசின் பல்வேறு துறைகளும், அரசின் கீழுள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவைகளும் தருகின்ற விளம்பரங்கள் அனைத்தும், ஓரளவு ஒருமுகப்படுத்தப்பெற்று இந்தத் துறையின் வாயிலாக பத்திரிகைகளுக்கு வழங்கப் படுகின்றன. இத்துடன் செய்தி—மக்கள் தொடர்புத்துறை பல விளம்பரங்களை தானே தயாரித்தும் வெளியிடுகிறது. இந்த விளம்பரங்கள் பொதுவாக அரசின் கொள்கைகளை திட்டங்களைப் பொதுமக்களுக்கு விளக்கும் முறையில் அமைகின்றன.

**விழாக்கள் :**

நாட்டுமக்களுக்கு வரலாற்று நிகழ்ச்சிகளையும் மக்களுக்காகப் பாடுபட்ட தேசத் தலைவர்களின் பெருமைகளையும் எடுத்து விளக்குவதற்காக விழாக்களையும், பெருந் தலைவர்களின் பிறந்த நாள் விழா, நினைவுநாள் நிகழ்ச்சிகளையும் இத்துறை நடத்துகிறது.

1978 ஆம் ஆண்டிலும், பின்னர் 1979–80 ஆம் ஆண்டிலும் திருவள்ளுவர், பாரதியார், பாரதிதாசனார், காயிதேமில்லத், காமராஜ், வ. உ. சிதம்பரனார், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், அண்ணல் காந்தியடிகள், டாக்டர் அம்பேத்கார், முத்துராமலிங்கத் தேவர், ஜவகர்லால் நேரு, இராஜாஜி, நேதாஜி ஆகியோரின் விழாக்கள் கொண்டாடப்பட்டன. குடியரசு நாள், விடுதலை நாள், ஐக்கிய நாடுகள் சபை நாள், ஆகியவையும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.



**தந்தை பெரியார் நூற்றாண்டு விழா :**


தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்களின் தொடர்ச்சியாக அவரது வாழ்க்கையையும் கொள்கைகளையும் விளக்கும் ஒலி—ஒளி அரங்க காட்சிகள் சென்னையிலும் திருச்சிராப்பள்ளியிலும் நடத்தப்பட்டன. இந்த ஒலி—ஒளி அரங்கக் காட்சிகள் பல்லாயிரக்கணக்கான மக்களையும் பல்வேறு அறிஞர் பெருமக்களையும் கவர்ந்து அவர்களின் பாராட்டுகளையும் பெற்றுள்ளது. வரும் மாதங்களில் இக்காட்சியினை, தஞ்சாவூர், மதுரை, ஈரோடு ஆகிய இடங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பெரியாரின் பொன்மொழிகள் அடங்கிய '' பெரியாரின் புரட்சி மொழிகள் '' என்ற புத்தகம் மலிவுப் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்குழுவின் நிபுணர் குழு, '' பெரியார் வாழ்க்கை வரலாறு '' என்ற நூலையும் '' குழந்தைகளுக்கான பெரியாரின் வாழ்க்கைப்பட விளக்கம் '' என்ற நூலையும் தயாரித்து வருகிறது. ''பெரியாரின் வாழ்க்கை வரலாறு '' என்ற நூல் வெளியீட்டுப்பணி முடிவுற்றதும் பிற மொழிகளிலும் இப்புத்தகத்தை வெளியிடும் திட்டத்தை அரசு ஆலோசிக்கும். 1922 ஆம் ஆண்டில் '' வைக்கம் '' என்ற இடத்தில் பெரியார் அவர்கள் தீண்டாமைக்கு எதிராகப் போராடிய வரலாற்றின் நினைவாகக் கேரளத்தில் வைக்கம் என்ற இடத்தில் பெரியாரின் நினைவுச் சின்னம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

சென்னையில் ரூ. 94 லட்சம் செலவில் பெரிய அளவில் அரங்கம் ஒன்றையும், அறிவியல் அருங்காட்சியகம் ஒன்றையும் அமைத்திடவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. பெரியார் சிறைப்பட்டிருந்த சிறைகளில் நினைவுக் கற்பலகைகளை நிறுவிடவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எல்லா மாவட்டங்களிலும் பெரியாரின் பொன்மொழிகளைக் கொண்ட தூண்கள் அமைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**பொருட்காட்சிகள்.**

நமது மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் நடைபெறுகிற பொருட்காட்சிகளில், அரசின் சார்பாக, இத்துறை பங்கு



பெற்று, அரசின் பல்வேறு துறைகளின் செயற்பாடுகளையும் சாதனைகளையும் விளக்கும் பணியினை ஆற்றி வருகிறது. இம்மாநிலத்தில் பொருட்காட்சிகள் நடத்துவது, மற்றும் அப்பொருட்காட்சிகளில் அரசுத்துறைகள் பங்கு கொள்வது பற்றிய அரசின் கொள்கைகளை இத்துறை கவனிக்கிறது. அரசுக்கும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் சொந்தமான பொதுவிடங்களில் தனி நபர்களோ அல்லது தனி நிறுவனங்களோ பொருட்காட்சி நடத்த அனுமதி அளிப்பதில்லை யென்று அரசு முடிவெடுத்துள்ளது. எனினும், அரசின் முன் அனுமதி பெற்று பொது இடங்களில் உள்ளாட்சி நிறுவனங்களும், அங்கீகாரம் பெற்ற தொழில் வர்த்தக, கல்வி நிறுவனங்களும் பொருட்காட்சிகளை நடத்த அனுமதிக்கப்படுகின்றன. அரசின் சார்பில் 1978 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பொருட்காட்சி சேலம் நகரில் மூன்றாவது முறையாக இவ்வாண்டு நடத்தப்படவிருக்கிறது. கோயம்புத்தூரில் 1979 ஆம் ஆண்டு தொடங்கி இரண்டாவது தடவையாக இவ்வாண்டு மார்ச்—மே மாதங்களிலும், மதுரையில் முதல் முறையாக ஏப்ரல்-ஜூன் மாதங்களிலும் இத்துறை பொருட்காட்சிகளை நடத்தியுள்ளது. திருச்சிராப்பள்ளியிலும் இவ்வாண்டு அரசு பொருட்காட்சி நடத்த திட்டமிட்டிருக்கிறது. அரசு நடத்தும் இப்

பொருட்காட்சியின்மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன் அடைவதோடு, பாராட்டுக்களையும் அளித்துவருகின்றனர்.

**செய்தி நிலையங்கள்.**

சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள இத்துறையின் செய்தி நிலையங்கள் பல்வேறு பொருள்கள் குறித்தும், மற்றும் அரசின் கொள்கைகள், சாதனைகள் பற்றியும் செய்திகளையும் விளக்கங்களையும் பொது மக்களுக்கு வழங்குகின்றன. படிப்பகங்களையும் நடத்தி வருகின்றன.

**நினைவுச் சின்னங்கள்.**

சென்னையிலுள்ள வள்ளுவர் கோட்டம் இத்துறையின்கீழ் உள்ளது. மேலும் இதுவரை, நினைவில்லங்களின் பராமரிப்பு பல்வேறு துறைகளின்கீழ் இருந்து வந்தது. தற்பொழுது பொதுப்பணித் துறையின்கீழ் இருந்த சென்னை அறிஞர் அண்ணா சதுக்கம், கிண்டி காமராஜர் நினைவாலயம், கிண்டி இராஜாஜி நினைவாலயம், கன்னியாகுமரி காந்தி மண்டபம், விருதுநகர் காமராஜர் நினைவு இல்லம், ஈரோடு பெரியார் அண்ணா நினைவகம், தொரப்பள்ளி இராஜாஜி நினைவில்லம், சென்னை காமராஜர் நினைவு இல்லம், கல்வித் துறையின்கீழ் இருந்த பாரதியார் நினைவு இல்லம் (எட்டயபுரம்) ஆகியவை செய்தி மக்கள் தொடர்புத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.



சென்னையிலுள்ள வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றியுள்ள பகுதியை, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அழகிய பகுதியாக மாற்ற ரூ. 54.42 லட்சம் மதிப்பீட்டுச் செலவிற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத் திட்டத்தின்கீழ் கடைகள், ஓய்விடங்கள் கட்டுவதுடன் கோட்டத்தைச் சுற்றி அழகிய பூங்காக்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

குமரி முனையின் கடற் பகுதியில் விவேகானந்தர் பாறையை அடுத்துள்ள சிறுபாறையில் ரூ. 90 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், உலகினர் போற்றும் வகையில், திருவள்ளுவர் சிலை ஒன்றை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

காஞ்சீபுரத்தில் அண்ணா வாழ்ந்த இல்லத்தை அரசு விலைக்குப் பெற்றிடுவதற்கான முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது நினைவகமாகப் போற்றப்படும். இந்த இல்லத்தை வாங்க ரூ. 2 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இல்லத்தை அரசு விரைவில் பெறும். மகாகவி பாரதியார் வாழ்ந்த திருவல்லிக்கேணியிலுள்ள இல்லத்தை வாங்கவும் அரசு ஆலோசித்துள்ளது.

**கலைவாணர் அரங்கம், சென்னை, அண்ணா கலையரங்கம், வேலூர்.**

சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தையும், வேலூரிலுள்ள அண்ணா கலையரங்கத்தையும் இத்துறை நிர்வகித்து வருகிறது. வேலூர் அண்ணா கலையரங்கில் கலை நிகழ்ச்சிகளுக்கு அனுமதிப்பதோடு திரைப்படங்களும் காட்டப்படுகின்றன.

குளிர்சாதன வசதியுள்ள கலைவாணர் அரங்கம், அரசாங்க விழாக்கள், பிற விழாக்கள் கலை நிகழ்ச்சிகள் இவற்றுக்கு ஒதுக்கப்படுகிறது. விழாக்கள் நடைபெறாத சமயங்களில் நாளொன்றுக்கு ஒரு காட்சி வீதம் திரைப்படம் நடத்த சில விதிகளின் கீழ் அனுமதிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் பயனாக

சமீப ஆண்டுகளில் இந்த அரங்கின் வருமானம் பெருகியுள்ளது. தனிப்பட்ட அமைப்புகளிடமிருந்து திட்டமிட்டபடி வாடகை பெறப்படுகிறது. ஆனால் அரசுத் துறைகளுக்கு சலுகை யில் அனுமதிக்கப் படுகிறது.

இராஜாஜி மண்டபம், காந்தி இல்லம், சீரணி அரங்கம் ஆகியவையும் இத்துறையின் நிர்வாகத்தில் உள்ளன.

**தமிழரசு**

தமிழரசு இதழ் (தமிழ்—ஆங்கிலம்), இத்துறையினரால் வெளியிடப்படும் இதழாகும். 1970 ஆம் ஆண்டு சூலையில் இந்த இதழ் தமிழில் மாதம் இரு முறை வெளியீடாகவும், ஆங்கிலத்தில் மாதம் ஒரு முறை வெளியீடாகவும் துவக்கப்பட்டது. இந்த இதழ், அரசின் செய்திகளையும் கொள்கைகளையும் பரப்ப முனைவதுடன் அரசின் ஒருங்கிணைந்த திட்டங்களையும் பொது மக்களுக்கு அறிவிக்கிறது. மாதம் இரு முறை வரும் தமிழ் இதழ், சராசரி 45,000 பிரதிகள் வெளியிடப்படுகின்றன. மாதம் ஒரு முறை வரும் ஆங்கில இதழ் சுமார் 3,000 பிரதிகள் வெளியாகின்றன. இத்துறையின் நிர்வாகத்திலுள்ள தமிழரசு அச்சகத்தில் இவை அச்சிடப்படுகின்றன. இந்திய அரசின் வெளியீடான '' திட்டம் '', அறநிலையத்துறையின் '' திருக்கோயில் '' தொழிலாளர் துறையின் '' உழைப்பவர் உலகம் '', தமிழ்நாடு மின்சாரத் துறையின் '' மின் குடும்பம் '', கல்வித் துறையின் '' தமிழ்க் கல்வி '' ஆகிய இதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன' 1980 ஜனவரி முதல், சென்னை உயர்நீதி மன்றத்தின் '' தீர்ப்புத் திரட்டு '' என்ற இதழும், '' குற்ற வழக்குத் தீர்ப்புத் திரட்டு '' என்ற இதழும் இங்கு அச்சிடப்படுகின்றன. இவற்றுடன், அரசின் அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள், சிறுவெளியீடுகள், விண்ணப்பங்கள் முதலியனவும் இந்த அச்சகத்தில் அச்சாகின்றன.



## அரசு அலுவலர் வீடு கட்ட கணவன்-மனைவி இருவருக்கும் கடன்

அரசுப் பணி புரியும் கணவன், மனைவி இருவரும் சேர்ந்து தங்களுக்குச் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ள ஒரே கடனைக் கொடுக்க அரசு உத்தரவிட்டுள்ளது. முன்பு சொந்த வீடு கட்டிக்கொள்ளக் கணவனுக்கோ மனைவிக்கோ இருவரில் ஒருவருக்கு மட்டுமே கடன் வழங்கப்பட்டு வந்தது. இந்தக் கடன் வசதியைப் பெற விரும்பும் அரசுப் பணியில் உள்ள தம்பதியர் தாங்கள் பெற்ற கடனை இருவரும் சேர்ந்தோ தனித் தனியாகவோ திருப்பிச் செலுத்திவிடுவோம் என்று கூட்டாக உத்தரவாதம் அளிக்க வேண்டும். இது தொடர்பாக அரசுப் பணியாளர்கள் சங்கம் முறையிட்டுக் கொண்டதைத் தொடர்ந்து, அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக அரசின் வீட்டு வசதித்துறை செயலாளர் தெரிவித்துள்ளார்.



# தமிழ்நாட்டில் வேளாண்மைச் செயல்பணி


எஸ். ஏ. சுப்பிரமணி,
ஐ.ஏ.எஸ்.,
வேளாண்மைத்துறை இயக்குநர்.


தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறை துவங்கி நூறு ஆண்டுகள் ஆகியுள்ளன. விளைபொருள் உற்பத்தியை அதிகரிப்பதில் ஆராய்ச்சி நிலையங்களுக்கும் உழவர்களுக்கும் இடையே வேளாண்மைத்துறை முக்கிய பங்காற்றிக்கொண்டு வருகிறது. புதிய சாகுபடி முறைகளை வேளாண் பெருமக்களிடையே விளக்கி விதைகள், உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் ஆகிய இடுபொருள்களை வழங்கி, அவற்றின் மூலம் உயர் விளைச்சல் திட்டங்களைச் செயல்படுத்துதலும், நிலம் மற்றும் நீர் பராமரிப்புச் செயல்முறைகளை உழவர்களுக்கு விரிவாக்கப் பணிகள் மூலம் வழங்குதலும் வேளாண்மைத் துறையின் முக்கிய பணிகளாகும்.

1979-80ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சில பகுதிகளில் வெள்ளத்தினால் சேதம் ஏற்பட்டும், மின்சாரத் தட்டுப்பாடு நிலை இருந்தும் கூடத் தமிழ்நாட்டு வேளாண் பெருமக்களின் முயற்சியால் 62.29 இலட்சம் டன் அரிசியும், 19.03 இலட்சம் டன் சிறுதானியங்களும், 2.60 இலட்சம் டன் பயறு வகைகளும் 14.03 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களும், 20.16 இலட்சம் டன் வெல்லமும், 4.69 இலட்சம் பேல் பருத்தியும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. உணவு பொருள்களின் உற்பத்தியில் பற்றாக் குறையாக இருந்த நிலை மாறி தமிழ்நாடு இப்போது இதர மாநிலங்களுக்கும் இதர நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் நிலையை அடைந்து இருப்பது மகிழ்ச்சிக் குரியதாகும்.

1979-80 ஆம் ஆண்டு பெற்ற உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாண்டு 65 இலட்சம் டன் அரிசியும், 21.45 இலட்சம் டன் சிறுதானியங்களும், 3.75 இலட்சம் டன் பயறு வகைகளும், 16.03 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களும், 19.80 இலட்சம் டன் வெல்லமும், 4.60 இலட்சம் பேல்கள் பருத்தியும், தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யத் திட்டமிட்டுச் செயலாற்றப்பட்டு வருகிறது. இந்த அள்வு உற்பத்தியினை அடைய தமிழக வேளாண் பெருமக்கள் தவறாது ஒத்துழைத்து விளைவைப் பெருக்குவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

உழவர் பெருமக்கள் இந்த அளவு உற்பத்தியினைப் பெறச் சாகுபடிச்செலவினைக் குறைத்து அதிக உற்பத்தியைப் பெருக்க நெல் பயிரில் கடந்த ஆண்டு புகுத்தப்பட்ட குறைந்த செலவும், நிறைந்த திறனும் வாய்ந்த தொழில் நுட்பங்கள் இந்த ஆண்டில் வேளாண்மைத் துறை மூலம் தீவிரப்படுத்தப்படும். நெல் பயிருக்கு உரம் உடனே சீராகக் கிடைக்கவும் மற்றும் குருணை வடிவ பூச்சி மருந்துகளையும் இட்டு அவற்றின் திறனை அதிகரிக்க இத்துறையினரால் கிராவிட்டர் அப்ளிகேட்டர் என்ற கருவி திருத்தி அமைக்கப்பட்டு உழவர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. வேளாண்மைத்துறை மூலம் இந்த ஆண்டு 95.00 டன் நெல் விதைகளும் 165 டன் கேழ்வரகு விதைகளும், 170 டன் சோள விதைகளும், 184 டன் வீரிய ஒட்டுச் சோள விதைகளும் ,304 டன் வீரிய ஒட்டுக் கம்பு விதைகளும் 177 டன் மக்காச்சோள விதைகளும் வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

பயறு உற்பத்தியில் தமிழ்நாடு பற்றாக்குறை மாநிலமாக உள்ளது. நமது தேவைக்கு வெளி மாநிலங்களிலிருந்து ஒரளவு எதிர்பார்க்க வேண்டியுள்ளது. இந்தப் பற்றாக்குறையினை 6 ஆண்டுகளில் நீக்கி, தன்னிறைவு பெற ஒரு பெரிய திட்டம் வகுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 22 டன் வீரிய விதைகளும் 220 டன் மூல விதைகளும் மற்றும் 2400 டன் சான்றிதழ் பெற்ற விதைகளும் பயறு வகைகளில் உற்பத்தி செய்து வழங்கப் பெறும். பயறு வகைகள் சாகுபடி செய்யும் பரப்பு 12.5 இலட்சம் எக்டேர்களாக அதிகரிக்கப்படும். தனிப் பயிராகவும் கலப்புப் பயிராகவும் மற்றும் நெல் தரிசு நிலங்களிலும் பயறு வகைகளைப் பயிரிடுவதன் மூலம் கூடுதல் உற்பத்தி செய்ய இயலும்.

உயர் விளைச்சல் வகைகளைப் பயிரில் சமச்சீர் உரமிடுவது, நுண்ணுயிர் கலவை உபயோகிப்பது, மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை அனுசரித்தல்போன்ற தொழில் நுட்பங்களை கடைப்பிடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஒரு ஏக்கர் செயல்விளக்கப்பண்ணைகள்1000 இடங்களில் பயறு வகைகளுக்

கென அமைத்து உழவர் பெரு மக்களுக்கு உற்பத்திப் பெருக்க முறைகள் செய்து காட்டப்படும். டை-அம்மோனியம் பாஸ்பேட் தெளித்தல் 40,000 எக்டேர் நிலப்பரப்பில் பூச்சி மருந்தினை பெரு நிலத்தள தெளிப்பு செய்தல் போன்ற திட்டங்கள் செயல் படுத்தப்படும். டை-அம்மோனியம் பாஸ்பேட் தெளிக்க ஆகும் செலவில், 1 எக்டேருக்கு ரூ. 10-ம் ''பெருநிலத்தள'' தெளிப்பு (அ) தூவுதல் செய்தற்கு ஆகும் செலவில் 1 எக்டேருக்கு ரூ. 7.50ம் மானியமாக வழங்கப்படும் அரசு செலவில் வேளாண் பெரு மக்களை அழைத்துச் சென்று செயல் விளக்கப் பண்ணைகளைக் காட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

உணவுக்குப் பயன்படும் எண்ணெய் வகைகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருவதால் இதனை ஓரளவு நிறைவு செய்யும் வகையில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 4540 டன் நிலக்கடலை விதையும், 50 டன் எள் விதையும், 300 டன் சூரியகாந்தி விதையும், 22.50 இலட்சம் டன் ஆமணக்கு விதையும் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படும்.

இந்த ஆண்டு 1100 டன்கள் நுண்ணூட்டச் சத்தும் மற்றும் 15,000 டன் ஜிப்சம் என்ற கனிக்கல்தூளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிதாக 6500 எக்டேர் பரப்பில் கூடுதலாக தென்னை பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 14 இலட்சம் 'நெட்டை' தென்னங்கன்றுகளும் ,1 இலட்சம் நெட்டை குட்டை வீரிய தென்னங்கன்றுகளும் இத்துறையினரால் வளர்த்து வழங்கப் பெறும்.

கரும்புச் சாகுபடியில் உற்பத்தியினைப் பெருக்கிட தரமான மற்றும் நோய் தாக்காத வீரிய வகைக்கரணைகளை இந்த ஆண்டு கரும்பு பயிரிடப்படும் பகுதியில் மூன்றில்ஒருபாகத்திற்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. விதைக் கரணைகளை வெப்ப நேர்த்தி செய்வதற்கென ஆறு வெப்பக் காற்று நிலையங்களைக் கொண்ட 3 ஆதார விதை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விதை கரணைகளை உற்பத்தி செய்ய பலவித நாற்றங்கால்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. செயல் விளக்கப் பண்ணைகள் அமைத்து, திருந்திய பயிர் உற்பத்தி நுணுக்கங்களை கரும்புச் சாகுபடியாளர்களுக்கு கற்பிப்பதோடு ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளை அவர்கள் கடைப்பிடிக்கவும் வழி வகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



கிராவிட்டர் அப்ளிகேட்டர்

நீண்ட இழைப் பருத்தி வகைகளைப் பயிரிடுவதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டியாக உள்ளது. பருத்தி பயிரிடும் மொத்தப் பரப்பில் நீண்ட இழைப்பருத்தியை அதிக அளவில் பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பருத்தியின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்த சிறந்த வகைகள் பயிரிடுவது, சமச்சீர் உரங்கள் இடுவது, மேம்படுத்தப்பட்ட உழவியல் முறைகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகள் உழவரிடையே பரவலாக்கப்படும்.

பாசனச் சாகுபடியாக பருத்தி பயிரிடப்படும் பரப்பில் 40 விழுக்காடும் மானாவாரி பரப்பில் 20 விழுக்காடும் இத்துறையின் மூலம் பருத்தி விதைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேம்படுத்தப்பட சாகுபடி முறைகளை விளக்கிக் காட்ட உழவர் நிலங்களிலேயே 800 எக்டேர் பரப்பில் செயல் விளக்கப் பண்ணைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தீவிர பருத்தி வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் இந்தத் திட்டம் முனைப்பாக நிறைவேற்றப்படும்.

தமிழ்நாட்டில் மானாவாரி நிலங்கள் பெருமளவில் உள்ளன. மானாவாரி பகுதிகள் பயன் பெறுவதற்காக இத்துறையினரால் உருவாக்கப்பட்ட பல நோக்கு உழவுக் கருவி மூலம் சாகுபடிச் செலவினைக்குறைத்திட இந்தக் கருவியைப் பெருமளவில் வழங்கிட இந்த ஆண்டு திட்டமிடப்பட்டுள்ளது.


மானாவாரியில் எல்லா சீரிய சாகுபடி முறைகளையும் கையாண்டு செயல்விளக்கப் பாத்திகள் சின்னஞ்சிறு நீர்பிடிப்பு பகுதிகள் அடிப்படையில் 1000 ஏக்கர் அளவில் அமைக்கப்படும். இந்தப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் பயிர் மேம்

பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். மேலும் மண்வளப் பாதுகாப்பிற்கான அடிப்படை பணிகளான ஆழ் ஓடை தடுப்புப் பணிகள் மற்றும் கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல் போன்ற சமுதாயப் பணிகள் தீவிரப்படுத்தப்படும்.




ஒருங்கிணைந்த மானாவாரி மேம்பாட்டுத் திட்டங்கள் இந்த ஆண்டும் தொடர்ந்து திருநெல்வேலி மாவட்டத்தில் கோயில்பட்டியிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டையிலும் செயல்படுத்தப்படும். இதன் மூலம், மானாவாரி பயிர்களின் விளைச்சலை அதிகரிக்கவும், பல பயிர் மற்றும் ஊடு பயிர்களில் அதிக கவனம் செலுத்தவும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மானாவாரி உழவர் பெருமக்கள் வாழ்க்கைத் தரம் மேன்மையடையவும் வழிவகை ஏற்படும்.


புதுக்கோட்டை மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட பெரியார் மாவட்டத்தை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் மண் பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மற்றும் ஆடுதுறை, பரமக்குடி, கோயில்பட்டி ஆகிய இடங்களிலும் நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களும் இயங்கி வருகின்றன. கூடுதலாக 9 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 8 இலட்சத்திற்கும் மேற்பட்ட மண் மாதிரிகள் பரிசோதனை செய்யப்படும்.



புதிதாக அமைக்கப்பட்ட பெரியார் மாவட்டத்தைத் தவிர மற்ற எல்லா மாவட்டத்திலும் உழவர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த ஆண்டு பெரியார் மாவட்டத்திலும் உழவர் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்க அரசு அனுமதித்துள்ளது. இந்த நிலையங்களின் மூலம் மாநிலத்தில் ஆண்டுக்கு 30,000 உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். செங்கல்பட்டு மற்றும் வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் 10 தொலைக்காட்சிப் பெட்டிகள் பத்து உழவர் ஆய்வு மன்றங்களுக்கு வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழக உழவர் பெருமக்களுக்கு உதவி செய்ய வேளாண்மைத்துறை எப்பொழுதும் தயாராக உள்ளது. வேளாண் பெருமக்கள் வேளாண்மைத் துறை பரிந்துரைக்கும் புதிய தொழில் நுட்பங்களைக் கடைப்பிடித்து பயன் பெறுவதோடு தங்களுடைய அனுபவங்களையும் வேளாண்மைத்துறை அலுவலர்களோடு பகிர்ந்து கொண்டால் மெத்தவும் நன்மை கிட்டும்.

# படமும் செய்தியும்



தென் பிராந்தியத்தின் புதிய மேஜர் ஜெனரல் திரு ஆர். எஸ். பன்னா, மாண்புமிகு முதல்வர் அவர்களை 5.7.80ல் சந்தித்தார்.




சென்னை நிருவாகப் பயிற்சி நிறுவனம் நடத்தும் 'மனித ஆற்றலை நிர்வாகம் செய்தல்' என்னும் பயிற்சியை 7.7.80ல் கிண்டி தொழிலியல் கல்லூரியில் மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

வியாசர்பாடியில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் வேட்டி, சேலைகள் வழங்கினார்.







சென்னை-கிண்டி புகைவண்டி நிலையம் எதிரில் அண்ணா சாலையில் புதிய சுரங்கப் பாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தலைமையில் 18—7—1980ல் தலைமைக் கொத்தனார் திரு ஏழுமலை திறந்து வைத்தார்.

## ஒரு கடமை!

“ரஷ்ய நாட்டிற்கு நான் சென்றபோது இந்தியத் தூதர் எனக்கு விருந்து அளித்தார். அது முடிந்த பிறகு இரவு 11 மணிக்குத் தூதரகத்தில் இருந்து என்னைத் தங்கி இருந்த இடத்துக்குக் காரில் அழைத்துச் சென்றார். ஒரு வீதியில் இருந்து மற்றொரு வீதிக்கு அழைத்துச் செல்லும் போது கார் வேகமாகத் திரும்பியது.


அப்போது மஞ்சள் கோட்டை கார் சக்கரம் கடந்து விட்டது. உடனே ஒரு போலீஸ்காரர் எங்கள் காரை நிறுத்தி, அனுமதிக்கார்டை வாங்கி கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டார். பின்னர் அந்தக் கார் லைசென்சைப் புதுப்பிக்க முடியாது. தூதுவருக்கே அந்த நிலைமை அங்கே!

ஆனால், இங்கே நிலைமை வேறு. நடை பாதை இருக்கிறது. பக்கத்தில் தடுப்புச் சுவர் இருந்தாலும் ரோட்டில்தான் நடக்கிறார்கள்.

ரோட்டில் நடை பாதைகளுக்காக ஒதுக்கப் பட்ட இடத்தில் கடந்து செல்ல வேண்டும் இவற்றை எல்லாம் ஒரு கடமையாக நாம் கருத வேண்டும்.”

(18.7.80ல் கிண்டி ரெயில் நிலையம் எதிரில் புதிய சுரங்கப் பாதைத் திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர்.






மதுரை மாநகராட்சி தினசரி சந்தைக் கட்டடத்தை மாண்புமிகு முதல்வர் தலைமையில், கொத்தனார் (12-7-'80ல்)திறந்து வைத்தார்.

கொருக்குப்பேட்டையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பெற்ற மக்களுக்கு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் 4.7.80ல் அரிசி, சேலை, வேட்டி ஆகியவற்றை வழங்கினார்கள்.




மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், சென்னை-மெரீனா அயோத்தியா குப்பத்தில் குடிசைப்பகுதி மாற்று வாரிய அலுவலகக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் திரு டி. கே. கபாலியும் உடன் உள்ளார்.






# தருமபுரி மாவட்டத்தில்...



தமிழகத்தின் தலைமைச் செயலர் தலைமையில் இயங்கும் மலைவாழுநர் மேம்பாட்டுக் குழுவின் முடிவிற்கிணங்க மலைவாழுநர்களுக்குப் பல்வேறு திட்டங்களை அமல்படுத்துவதற்காகவும், உதவியினை முறையாகச் செய்யும் வகையில் அடையாள அட்டை நிலப்பட்டாப் புத்தக வடிவில் வழங்க அரசு முடிவு செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழகத்தில் 60,000 மலைவாழுநர் குடும்பத்தைச் சேர்ந்த 3,11,000 பேர் வாழ்கிறார்கள். இந்த 60,000 குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அடையாள அட்டை நிலப்பட்டா வடிவில் தயாரித்து அதில் குடும்பத் தலைவரின் புகைப் படத்தை ஒட்டி வழங்கப்படும்.

அடையாள அட்டை தயாரித்தளிக்கும் பணியை,எழுது பொருள் இயக்குநர் அவர்களும், குடும்பத்தலைவர்களின் உருவத்தைப் படம் பிடித்து அளிக்கும் பொறுப்பை இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு அவர்களும் நிறைவேற்றித் தருவார்கள். இவ் அடையாள அட்டை வழங்கப்பட வேண்டியவர்களின் பெயரைத் தயாரிப்பதும், அடையாள அட்டையை வழங்கும் பணியையும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற் கொள்வார்கள். இவ் அடையாள அட்டையில் மலைவாழுநர் வாழ்விற்கு அளிக்கப்படும் பல்வேறு உதவிகள் பதிவு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் உள்ள சிட்டிலிங்கி, சித்தேரி பகுதிகளில் வாழ்கிற மலைவாழுநருக்கு அடையாள அட்டைகளை, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விரைவில் வழங்கிடவிருக்கிறார்கள்.

**பனைப்பொருள்கள் தயாரிப்பதற்குப் பயிற்சி முகாம்**

பனைப்பொருள்கள் தயாரிப்பது குறித்து பனைமரம் ஏறும் தொழிலாளிக்கும், பெண்களுக்கும், வறட்சிக்கு இலக்காகும் பணித்திட்டத்தின் கீழும, சமூக நலத் துறையின் சார்பிலும் இலவசமாக கதர் வாரியத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

திப்பனூரில் 25 பேருக்கும், களர்பதியில் 25 பேருக்கும் ரூ. 50,000 செலவில் நார்ப்பயிற்சியும், மாதம்பதியில் 20 பேருக்கும், பாரூரில் 20 பேருக்கும், திப்பனூரில் 20 பேருக்கும், ஈச்சங்காட்டில் 20 பேருக்கும், சாமல்பட்டியில் 20 பேருக்கும் ரூ. 75,000 செலவில் தும்புப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

கம்பை நல்லூரில் 20 பேருக்கும், அம்மன் கோவில்பதியில் 20 பேருக்கும், ஆனந்தூரில் 20 பேருக்கும், களர்பதியில் 20 பேருக்கும், சாமல்பட்டியில் 20 பேருக்கும் ரூ. 50,000 செலவில் பனை ஓலைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

களர்பதியில் 20 பேருக்கும், ஈச்சங்காட்டில் 20 பேருக்கும், கம்பைநல்லூரில் 20 பேருக்கும், விளங்காமுடியில் 20 பேருக்கும், அம்மன்கோவில்பதியில் 20 பேருக்கும் ரூ. 95,000 செலவில் நவீன முறையில் வெல்லம் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆக மொத்தம் 350 பேருக்கு, ரூ. 2,70,000 செலவில் 17 பயிற்சி முகாம்கள் வறட்சிக்கு இலக்காகும் பணித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகின்றன.

சமூகநலத்துறையின் உதவியோடு ஒட்டப்பட்டியில் 25 பேருக்கும்,நடுப்பட்டியில் 25 பேருக்கும், புளியம்பட்டியில் 25 பேருக்கும்,மிட்டஅள்ளியில் 25 பேருக்கும், பன்னந்தூரில் 25 பேருக்கும் ரூ. 42,000 செலவில் தும்புப் பயிற்சியும், எட்டிப்பட்டியில் 25 பேருக்கும், ஈச்சங்காட்டில் 25 பேருக்கும், பாரூரில் 25 பேருக்கும், திப்பனூரில் 25 பேருக்கும், மாதம்பதியில் 25 பேருக்கும் ரூ. 42,000 செலவில் பனை ஓலைப் பயிற்சியும் ஆகமொத்தம் 250 பெண்களுக்கு ரூ. 84,000 செலவில் கதர் வாரியம் 10 பயிற்சி முகாம்களை நடத்தி வருகின்றது.




**பெ**ருந்தலைவர் காமராஜரின் 78-வது பிறந்தநாள் விழாவை ஜூலை 15-ஆம் நாள் அன்று சென்னை கலைவாணர் அரங்கில் தமிழக அரசு சிறப்பாகக் கொண்டாடியது.

அன்று காலை 9.30 மணியளவில்-நாயன இசையுடன் விழா துவக்கமாகியது!

விழாவுக்கு வந்திருந்தோரை செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எம். எஸ். கோபால் அவர்கள் வரவேற்றார்கள். வரவேற்புரையில் அவர் குறிப்பிட்டதாவது:

''தியாகத் தலைவரின் நினைவைப் போற்றுவது மட்டுமல்ல-அவர் நாட்டுக்கு ஆற்றிய நற்பணிகளை நினைவு கொள்ளவும், விட்டுச் சென்ற கடமைகளை நிறைவேற்றவும் உறுதி எடுக்கும் வகையில் இந்த விழா கொண்டாடப்படுகிறது.

''தமிழகத்திற்கு மட்டுமல்ல இந்தியத் துணைக் கண்டத்திற்கே பெருமை கிடைக்கும்படி அவர் உள்ளத்தாலும்-உணர்வாலும், செயலாலும் பல அரிய காரியங்களைச் செய்ததை நினைத்துப் பார்க்கிறோம்; அவரது வாழ்வு நமக்கு வழிகாட்டியாக—பாடப் புத்தகமாக் விளங்குகிறது.''

விழாவினைத் தொடக்கிவைத்த மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''நமது நாட்டில் போற்ற வேண்டியவர்களைப் போற்றவில்லை - ஒரு காலத்தில்! ஜாதியின் காரணமாக மதங்களின் காரணமாக - கட்சியின் காரணமாக இந்த நிலை இருந்துவந்தது. ஆனால் தற்போது அந்த நிலை மாறி வருகிறது. தமிழக அரசு அனைத்துக் கட்சித் தலைவர்களின் பிறந்த நாளையும் கொண்டாடி வருகிறது.

''நாடு சுதந்தரம் பெறுவது மட்டுமல்ல் - பெற்ற சுதந்தரம் எப்படி இருக்கவேண்டும் என்பது குறித்தும் காமராஜர் நினைத்தார்

''தேசபக்தி என்பதைச் சிறப்பாகக் கொண்டிருந்தார். 30 கோடி மக்களில் தானும் ஒருவர் என்ற எண்ணத்துடன் நாட்டுக்காக விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு விடுதலை கண்டார்; பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற காலத்தில் சிறப்பாக ஆட்சி புரிந்தார்.

''ஆதிக்க சக்தியை எதிர்ப்பதில் கொஞ்சம்கூட பயப்படவில்லை அவர். அந்தச் சக்தியைக் கரைக்க குறைக்க - அடியெடுத்துக் கொடுத்தவர் அவர்.

''இந்தியா ஒரே நாடு என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அதனை ஒற்றுமைப்படுத்தும் சக்திதான் காமராஜரின் வரலாறு.''

திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்றார்கள். அப்போது அவர் குறிப்பிட்டார் :

''எல்லா ஜாதியினருக்கும் இலவசக் கல்வி தர வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தவர் அவர். நமது சமுதாயத்தில் ஆசிரியர்கள் பட்ட அவதியைப் போக்கியவர் அவர். அவர்களுக்குப் பென்ஷன் திட்டத்தை அறிமுகம் செய்தவர் அவர்தான். இந்தியாவிலேயே முதன் முதலாக ஆசிரியர்களுக்குப் பென்ஷன் கொடுக்கப்பட்டது அவரது காலத்தில்தான்.

'ஏழை பங்காளர்' என்ற தலைப்பில் உரையாற்றிய திரு ப. சிதம்பரம் குறிப்பிட்டார் :

''ஏழை மக்களுக்கு நன்மை தரும் வகையில் மின்சக்தி-கல்வி ஆகிய இரண்டையும் தொலை நோக்கு உணர்வுடன் திட்டமிட்டு வந்தார் காமராஜர். ஒரு மாநிலத்தை வாழ வைப்பது இந்த இரண்டும்தான் என்பதில் அவர் நம்பிக்கை வைத்திருந்தார்.

''வறட்சிச் சிந்தனைகளில் மாட்டிக் கொள்ளாமல் - வறட்டுத்தனமான பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளாமல் நடைமுறையில் சாத்தியமானவைகளை நடத்தி வெற்றி நடை போட்டு ஒளிமயமான எதிர்காலத்தைத் தமிழ்நாட்டுக்கு உருவாக்கிச் சென்றிருக்கிறார் அவர்.''

'கொள்கைவீரர்' என்ற தலைப்பில் உரையாற்றிய திருமதி ராஜேஸ்வரி நடராஜன் குறிப்பிட்டார் :

''காமராஜர் விடுதலைப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். விடுதலை வேள்வியில் தம்மை ஆகுதியாக ஆக்கிக் கொண்டவர். விடுதலை வேட்கை - நல்ல கொள்கை வீரராக அவரை மாற்றியது.

''விடுதலைக்கு முன்னர் — நாட்டு விடுதலை ஒன்றே அவரது கொள்கையாக இருந்தது. விடுதலைக்குப் பின்னர் நாட்டு மக்களின் நல்வாழ்வே அவரது குறிக்கோளாக விளங்கியது.

''குறைந்த அளவு பேச்சுக்களைப் பேசி நிறைந்த அளவு செயல்களைச் செய்தவர் - மக்களின் நல்வாழ்வு ஒன்றே அவரது நோக்கமாக இருந்தது.''

'அரசியல் மேதை' என்ற தலைப்பில் உரையாற்றிய திரு

அகிலன் குறிப்பிட்டார் :

''ஏட்டுச் சுரைக்காய் அரசியல் மேதை அல்ல அவர் - அவருக்கு ஒரு சிறந்த கணிப்பு உண்டு; மக்களின் பிரச்சினை என்ன என்பது பற்றி - அவர் தெரிந்து வைத்திருந்தார். எந்தெந்த ஊருக்கு என்னென்ன தேவை, எந்தெந்த மாவட்டத்துக்கு என்ன என்ன தேவை என்பதை அவர் உணர்ந்திருந்தார்-மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆய்ந்து வைத்திருந்தார்.

''மற்ற மாநிலத்தவர் ஏக்கம் உறும் அளவுக்குப் பெரும் அரசியல் மேதையாகத் திகழ்ந்தார் அவர்.''

'சுதந்தரச் சிற்பி' என்ற தலைப்பில் உரையாற்றிய பேராசிரியர் நா.பாண்டுரங்கன் உரையாற்றும் போது குறிப்பிட்டார் :

''நாட்டுக்குச் சுதந்தரம் ஏற்படும் வாய்ப்பு உருவாவதற்குப் பெருந்தொண்டு புரிந்தவர் காமராஜர். அவர் பள்ளியிலோ - கல்லூரியிலோ படிக்காதவர். ஆனால் இன்று ஒரு பல்கலைக் கழகம் அவரது பெயரால் அழைக்கப்படுகிறது.

''அவர் பாடம் படிக்காதவர்- இன்று பள்ளி மாணவர்களுக்கு அவர் பாடமாகி உள்ளார்.

''அவரது முயற்சியால் - நாடு பெற்ற விடுதலை இன்று முழுமையாக உருவாக்கம் பெற்றிருக்கிறது.

'தியாகச் செம்மல்' என்ற தலைப்பில் உரையாற்றிய திரு. ஏ. பி. ஜனார்த்தனம் எம். பி., குறிப்பிட்டார்

''உயர்ஜாதியின்றி - பட்டம், பணம் இன்றி - மூன்று ஊனங்களைக் கொண்டு, தொண்டராக வாழ்க்கையைத் தொடங்கிய காமராஜர், 20 ஆண்டுகளில் தலைவராக மாறினார்.

''பதவிமீது அவருக்கு நாட்டம் கிடையாது. பதவியை அலட்சியம் செய்து வீசியவர் அவர். பதவி வரும் - போகும் : நாட்டுக்குப் பணிபுரிவதே மேலானது என முடிவு செய்து - 'பதவியை உதறும் திட்டத்தை' உருவாக்கி- அதற்குக் களபலியாகத் தம்மையே ஆக்கிக் கொண்டவர்.

'சமதர்மவாதி' என்ற தலைப்பில் உரையாற்றிய திரு டி. கே. சீனிவாசன், தமது உரையில் குறிப்பிட்டார்.;

''காமராஜர், இதயத்திலிருந்து [illegible]ர்த்தைகளைப் பேசினார். [illegible]லிருந்து பேசவில்லை. நன்மைகளைச் செய்வது என்பதைவிட கெடுதல்களை ஒழிப்பது கடினமான பணி -பெரிய விஷயம். அந்தப் பணியில் ஈடுபட்டார் காமராஜர்.

''தலைவர்கள் சமுதாயத்தின் நலனுக்காகத் தங்களை ஒப்படைத்துக் கொள்ள வேண்டும். அப்புறம் தான் சமதர்மம் மலர முடியும்; அதற்கு வித்திட்டவர் காமராஜர்.

'பாட்டாளிகளின் நண்பர்' என்ற தலைப்பில் உரையாற்றிய திருக்குறளார் வி. முனுசாமி குறிப்பிட்டார் :

''1946-ல் காங்கிரஸ் இயக்கத்தில் தொழிலாளர் பகுதி என்று ஒரு பிரிவைத் துவக்கியவர் காமராஜர்.

''தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வந்தார் அவர். Labour Contract Society என்ற குழுவை அவர் அறிமுகம் செய்தார். தொழிலாளர் வேலை நிறுத்தங்களை தமது



சாமர்த்தியமான அணுகு முறையினைக் கொண்டு எளிதில் தீர்த்தவர் அவர். சென்னையில் உள்ள சர்மா நகர் - திரு. வி. க. நகர் ஆகிய தொழிலாளர் தலைவர்களின் பெயரால் நகர்கள் அவரது முயற்சியினால்தான் உருவாகின.''

காலை நிகழ்ச்சி பிற்பகல் 2 மணியளவில் முடிவுற்றது. பிற்பகல் நிகழ்ச்சி 5.30 மணிக்கு-குலதெய்வம் ராஜகோபால் குழுவினரின் வில்லிசையுடன் தொடங்கியது.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்களின் தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

தலைமையுரையில் அவர் குறிப்பிட்டார் :

''தமிழகம் உள்ளவரை பெருந்தலைவர் காமராஜ் அவர்களை யாரும் மறக்க முடியாது. தந்தை பெரியார் அவர்களால் பச்சைத் தமிழர் என்று அழைக்கப்பட்டவர் அவர் ஒருவர்தான்.

''காமராஜர் வாழ்க்கை தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கையல்ல- அது ஒரு சகாப்தம்.

''எந்தநேரமும், நாடு, நாடு, நாடு என்று வாழ்ந்த ஒரு பெருந்தலைவர் அவர். பதவி பற்றி- சொத்துப் பற்றி அவர் கவலைப்பட்டதில்லை. தனக்கென வாழாதவர் அவர்; தன்னைப் பற்றி அவர் கவலைப்பட்டதும் கிடையாது.''

அடுத்துப் பேசிய திரு. வலம்புரி ஜான் (கிறிஸ்துவ ஜனநாயக முன்னணி) தமது உரையில் குறிப்பிட்டார்:

''கல்லில் பூத்த கறுப்பு மலராக- கண்ணீர்த் துளிகளின் காவல் தெய்வமாக - தொண்டருக்கெல்லாம் தொண்டராக - தலைவருக்கெல்லாம் தலைவராக - இருந்தவர் காமராஜர்.

''சிலரது வாழ்க்கை மரணத்துக்குப் பிறகு முற்றுப்புள்ளி பெற்றுவிடுகிறது ; சிலரது வாழ்க்கை நாடகத்தில் மரணம் இடைவேளையாகத்தான் வருகிறது; மரணத்திற்குப் பிறகும் அவர்கள் வாழ்கிறார்கள். அப்படி வாழ்ந்த தலைவர்களில் காமராஜர் குறிப்பிடத்தக்கவர்.''

அடுத்துப் பேசிய ஜி. மூர்த்தி (குடியரசுக் கட்சி -கவாய் தலைமையிலானது) தமது உரையில் குறிப்பிட்டார் :

''பள்ளி செல்லும் மாணவர்கள் வீட்டுக்குத் திரும்பிவரும் போது சோர்ந்து வருகிறார்களே அதற்குக் காரணம் என்ன என்று ஆய்ந்து, அதனைக் கண்டுபிடித்த ஒரே தலைவர் காமராஜர். மதிய உணவுத் திட்டத்தை அவர் அறிமுகம் செய்தார்.



''அம்பேத்கார் - தாழ்த்தப்பட்ட இனத்து மக்களுக்காகப் போராடி - அவர்களுக்குச் சலுகைகள் வாங்கித் தந்ததுபோல, காமராஜர், பிற்படுத்தப்பட்ட ஏழை - எளிய மக்களுக்குப் பல சலுகைகளைச் செய்தார்.

அடுத்து உரையாற்றிய திரு செங்கம் ஜப்பார் (அகில இந்திய முஸ்லீம்லீக்) குறிப்பிட்டார்:

''வியாபாரம் செய்யும் குடும்பத்தில் பிறந்த காமராஜர்-வியாபாரத்தை மறந்துவிட்டு நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார். தமிழை - தமிழனை-இந்தியாவை நெஞ்சு நிமிரச் செய்தவர் காமராஜர்.

''சுதந்தரத்திற்காகப் பாடுபட்ட தலைவர் அவர்; பயிர் வளர்வதற்காக விவசாயிகள் வயலில் நீர் பாய்ச்சுவது போல- நாடு விடுதலை பெறுவதற்காக இரத்தம் சிந்தியவர் காமராஜர் ஆவார்.''

அடுத்து உரையாற்றிய திரு என். சங்கரய்யா (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்) குறிப்பிட்டார் :

''காமராஜர் எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். தேசத்தை - தேசத்தின் ஐக்கியத்தை அவர் நேசித்தார் : அனைத்துக் கட்சியினரையும் அவர் நேசித்தார்.

''அவரது கொள்கையை - இலட்சியத்தை நாம் எல்லாம் பின்பற்ற வேண்டும் ; சுதந்தரம் பெற்ற நமது தேசத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் நாம் பணியாற்ற வேண்டும்.''

அடுத்து உரையாற்றிய திரு வாரூர் திரு. தங்கராசு (திராவிடர் கழகம்) குறிப்பிட்டார்.

''காமராஜரது வாழ்க்கை வரலாறு, இலக்கணம் போல் அமைந்திருந்தது. இலட்சியத்தை அவர் ஒரு போதும் விட்டுக் கொடுத்தது கிடையாது.

''ஏழையாகப் பிறந்தார்;ஏழையாக மறைந்தார்; இந்த நாட்டு மக்கள் அனைவரின் நெஞ்சங்களிலும் நிறைந்தார்.

''ஒரு மாநிலம் தன்னிகரற்று விளங்க - மாநிலத்தின் உரிமையைக் காக்க - காமராஜரைப் போன்ற தலைவர்கள் தேவை''

பின்னர் உரையாற்றிய திரு ஏ.ஆர். பெருமாள்(அகில இந்திய பார்வர்டு பிளாக்)குறிப்பிட்டார்.

''விடுதலைப் போரில் ஈடுபட்ட அரும்பெருந் தலைவர் காமராஜர். அவரது தொண்டு தமிழகத்துக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே தனிப்பெருமையை ஏற்படுத்தியிருக்கிறது. அவரது தொண்டு ஈடற்றது - இணையற்றது.''

பின்னர் உரையாற்றியதிருமதி டி. என். அனந்தநாயகி (அர்ஸ் காங்கிரஸ்) குறிப்பிட்டார்:

''ஏழை மக்களின் பிரச்சினையை அலசி ஆராய்ந்து பார்த்தார் காமராஜர். அவரது இலட்சியங்கள் - கொள்கைகள் மகத்தானவை.

''What is Kamaraj Policy?'' என்பது குறித்து ஆய்வு செய்ய பல்கலைக் கழகத்தில் ஓர் அறக்கட்டளை (Chair) உருவாக்கலாம்.

''அவர், நடைமுறை அரசியல்வாதி. எல்லோருக்கும் கல்வி கொடுத்தால்தான் நாட்டில் சமதர்மம் நிறைவேறும் என்பதைத் தெரிந்து கொண்டுதான் அவர், கல்வி வழங்கும் பணியில் முனைப்பாக ஈடுபட்டார்.''


அடுத்து உரையாற்றிய திரு ஜி. கருப்பையா மூப்பனார் (இந்திரா காங்கிரஸ்) குறிப்பிட்டார்:

''சாதாரணக் குடும்பத்திற் பிறந்து சாதாரணத் தொண்டராக வாழ்ந்து - பெருந்தலைவராக உயர்ந்தவர் காமராஜர்.

''தமிழகத்தில் அந்நாளில் நல்ல காரியங்கள் பல நடைபெற்றிருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் காமராஜர் பின்னணியாக இருந்திருக்கிறார்.''

அடுத்து உரையாற்றிய திரு அழகர்சாமி (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) குறிப்பிட்டார்:

''கிராமங்களுக்குச் சென்று அங்கு வாழ்ந்து வந்த சாதாரண மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றியவர் காமராஜர்.




''அவரது முயற்சியால்தான் தமிழகத்தில் பல தொழிற்சாலைகள் ஏற்பட்டன.

பின்னர் உரையாற்றிய திரு ப. நெடுமாறன் (காமராஜ் தேசிய காங்கிரஸ்) குறிப்பிட்டார்:

''காமராஜர் இறுதிவரை தமக்கென்று சொந்த வீடு இல்லாத வகையில் வாழ்க்கை நடத்தி வந்தார். அவர் வசித்த வீட்டை விலைக்கு வாங்கி அவருக்குத் தர வேண்டும் என்று அவரது தொண்டர்களில் பலர் நினைத்து அந்த முயற்சியில் இறங்கினோம். அது நிறைவேறவில்லை; நிறைவேறியிருந்தால் சொந்த வீட்டில் மறைந்தார் என்ற பெயர் கூட ஏற்பட்டிருக்கும்; நல்லவேளையாக அம்முயற்சி நிறைவேறாததால்- அவர் சாதாரண பிரஜையாகவே மறைந்தார்.''

அடுத்துப் பேசிய திரு குமரி அனந்தன் (காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்) குறிப்பிட்டார்:

''சில மனிதர்கள் பிறப்பதனால் அவர்களது ஊரே பெருமை பெறுகிறது. காமராஜர் பிறந்ததனால் அவரது ஊரான விருதுபட்டி- விருதுநகராகியது. அகலமில்லாத வீதியில் ஒரு வீட்டில் பிறந்த அவரின் புகழ் இன்று அகிலமெல்லாம் பறந்து செல்கிறது. கனடா நாட்டுப் பல்கலைக் கழகத்தில் அவரது வரலாறு ஆய்வுப் பட்டத்துக்கு உரிய பாடமாக வைக்கப் பெற்றுள்ளது

''அவர் பிறந்த இனம் ஒரு காலத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டதாக இருந்தது. அந்தச் சமுதாயத்தில் தனி நடைபோட்டு சிங்கம் போலச் சிலிர்த்து எழுந்தவர் - பயில்வான் போல் நிமிர்ந்தவர் காமராஜர்.

''அவர், மதி தந்தார் - மதிய

உணவு தந்தார்; அவர் உணர்வு மட்டும் தரவில்லை - உணவையும் தந்தார்.

''வாழ்நாள் முழுதும் தியாகம் தியாகம்... தியாகம். என்றே வாழ்ந்தவர் காமராஜர்.''

அடுத்து உரையாற்றிய திரு பா. ராமச்சந்திரன் (தமிழக ஜனதாக் கட்சி) குறிப்பிட்டார்:

''தனக்குப் பிடித்தமான கொள்கைகளை எவ்வளவு சிறப்பாக நிறைவேற்ற வேண்டுமோ அதற்குரிய வகையில் வாழ்நாள் முழுதும் பாடுபட்டார் காமராஜர். எதையும் சொல்வதற்கு அவர் தயங்கியது கிடையாது; அஞ்சியது கிடையாது

''தம்முடைய சிந்தனைகளை எளிய முறையில் சொல்லி மற்றவர்களைச் சிந்திக்க வைத்த தலைவர் அவர்.





''தமிழ்நாடு-மற்ற மாநிலங்களைப் போலச் சிறப்படைய வேண்டும் என்பதற்காகத்தான் கல்வி வழங்குவதில் கருத்தாக இருந்தார்.''

பின்னர், சிறப்புரையாற்றிய மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார் :

''தமிழகத்தில் உள்ள குறைபாடு எது என்பதனை அறிந்து, அதைப் போக்குவதற்காகப் பாடுபட்டார் காமராஜர்.

''நமது நாட்டில் எல்லாச் செல்வங்களும் உண்டு; ஆனால் அறிவுச் செல்வம் இல்லை; அதனால் தான் நமது நாடு உலகின் ஏனைய நாடுகளைப்போல வளர முடியவில்லை.

''அறிவைத் தருவது கல்வி. எனவே அதனை அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று காமராஜர் முனைந்தார்.

''நுணுக்கமான அறிவு அவரிடம் இருந்தது. மக்களுக்காகத்தான் சட்டமே தவிர - சட்டங்களுக்காக மக்கள் இல்லை என்று அவர் தெளிவாகச் சொன்னார்.

''அவர் நினைத்ததைச் சொன்னார்; சொன்னதைச் செய்தார். மக்கள் எல்லாரையும் பாராட்டுவார்கள், ஆனால் இதயத்தில் வைத்துப்போற்றுவது கிடையாது. இதயத்தில் வைத்துப் போற்றப் பட்ட தலைவர்களில் காமராஜர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.''

பின்னர், மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள், விழா நிறைவுச்சொற்பொழிவை ஆற்றினார். தமது உரையில் அவர் குறிப்பிட்டார் :

''குலக்கல்வித் திட்டம், தமிழகத்தில் ஒரு பிரச்சினையை உருவாக்கியபோது காமராஜர் அந்தப் பிரச்சினையை முன்னிட்டு தமிழ் நாட்டின் முதல்வராகப் பொறுப் பேற்றார். குலக்கல்வித் திட்டத்தை அமலுக்கு எந்தக் கல்வியமைச்சர் சி. சுப்ரமணியம் அவர்கள் கொண்டு வந்தார்களோ, அவரைக் கொண்டே அந்தத் திட்டத்தைத் திரும்பப் பெற வைத்தார். இதுதான் காமராஜரது ராஜதந்திரம்.

''நாடகத் தடைச் சட்டம் வந்தபோது அதன் கொடுமையைக் குறித்து அவரிடம் நாங்கள் எடுத்துரைத்தபோது அவர் — ஆவன செய்வதாகச் சொல்லியதுடன், ''நாடகத்தில் நீங்கள் சொல்லி வருகின்ற கருத்துக்களை பிறர் மனம் புண்படாமல் சொல்லுங்கள்' என்ற அறிவுரையையும் கூறினார்.

''இந்தியத் துணைக் கண்டத்தில் மாபெரும் சக்தி வடநாட்டில் இருந்தபோது, தமிழகத்தில் தனித்தன்மையுடன் காங்கிரஸ் இயக்கத்தை காமராஜர் வைத்திருந்தார். அவர் ஒரு போதும் தலை வணங்கியதில்லை யாரும் தலை வணங்கி நடப்பதை அவர் விரும்பியதும் இல்லை.

''யாருக்கும் அடிபணியாமல்-அதே நேரத்தில் தம்முடைய கொள்கையையும் விட்டுக் கொடுக்காமல் அவர், தனித் தன்மையைக் காப்பாற்றியது போல இப்போதும் தனித் தன்மை காக்கப்பட்டால்தான் இந்தியத் துணைக் கண்டம் காப் பாற்றப்படும்.

''காமராஜர் நுணுக்கமாகப் பிரச்சினைகளை அறிந்து ஆராய்ந்து வைத்திருந்தார். அவரைப் போல நாமும் ஒழுங்கான வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் - அவரைப் பின்பற்ற வேண்டும் என்பதை நினைவு கூர்வதற்குத் தான் இந்தப் பிறந்த நாள் விழாவை நடத்துகிறோம்.'

முதலவரின், விழா நிறைவுச் சொற்பொழிவுக்குப் பின்னர் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எம்.எஸ். கோபால் அவர்கள் நன்றியுரை கூற-விழா இனிது நிறைவேறியது. பெருந்தலைவரின் பிறந்தநாள் விழா வரலாற்றுச் சிறப்புமிக்கதாகத் திகழ்ந்து-அனைவரின் இதயங்களிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

—நிகழ்ச்சித் தொகுப்பு
தமிழ்ப்பித்தன்.

# தமிழகத்தின் கிராமப்புறக் கலைகள்

டாக்டர் ஏ. என். பெருமாள்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
அடையாறு, சென்னை.

தேவராட்டம் மதுரை மாவட்டத்தில் குறிப்பிட்ட சில குழுவினரால் மிகச் சிறப்பாக இன்றும் நடத்தப்பெற்று வருகிறது. இது விஜய நகரத்தைச் சேர்ந்த, கம்பளத்தைச் சேர்ந்த நாயக்கர்களால் ஆடப்படுகிறது. திருமணச் சடங்குகளில் தேவராட்டம் பெருவாரியாக நடைபெறுகிறது. இக்குழுவினர் ஜக்கம்மா தேவியை வழிபட்டே ஆட்டத்தைத் தொடங்குவர். கண்ணன் கோவர்த்தன கிரியைத் தாங்கிய கதை அடிப்படையில் இவர்களுடைய முன்னோர் வந்ததாகக் கூறுவர். தங்களது பாரம்பரிய பெருமையை ஆட்டத்தின் இடை நடுவே கூறி மகிழ்வர்.

ஆண்கள் மட்டுமே இந்த ஆட்டத்தில் கலந்து கொள்வர். பாரதக் கதைகளை அதிகமாக நடித்துக் காட்டுவர். வரிசையாகப் பல வேடங்கள் புனைந்து ஆடிப் பாடுவார்கள். வெற்றுடம்புடன் அரையில் மாத்திரம் ஆடை கட்டியிருப்பர். தலையில் ஒரு மினுமினுப்பான துண்டைக்கட்டிக் கொள்வர்.

ஒரு நீண்ட புல்லாங்குழல், உறுமி மேளம் ஆகியவற்றை இசைக் கருவிகளாகப் பயன்படுத்துவர். சமயச் சார்பான இதிகாச நிகழ்ச்சிகளை விளக்கி ஆடுவதனால் தேவராட்டத்தை மக்கள் அதிகம் விரும்பிப் பார்ப்பர்.

திருச்சி, கோவை, மதுரை, போன்ற மாவட்டங்களில் ஒயிலாட்டம் இன்றும் திருவிழாக் காலங்களில் மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. இதில் பன்னிரண்டு முதல் இருபது வரை ஆண்கள் பங்கு கொண்டு ஆடுவர். இவர்கள் பல வண்ணச் சட்டைகள் அணிந்திருப்பர். கழுத்துப் பட்டை அகன்று இருக்கும். கால் சட்டைகளும் கட்டி இருப்பர். விதவிதமான அணிகலன்களைப் பூண்டு காணப்படுவர். கால்லில் சலங்கை கட்டப்பட்டு இருக்கும். கையில் ஆளுக்கு ஒரு கைக்குட்டை வைத்திருப்பர். ஆடும்போது கைக்குட்டையை ஆட்டி ஆட்டிப் பாடுவர்.

இவர்களுக்குத் தலைவராக ஒரு வாத்தியார் உண்டு. ஆடுவோர் ஒரு கோட்டிலோ அல்லது இணைக் கோட்டிலோ நிற்பர். அப்பொழுது வாத்தியார் வரிசையின் முன்பக்கமோ அல்லது இணைக்கோட்டின் இடைப் பகுதியிலோ நின்று பாடுவார். மற்றவர்கள் அவரைப் பின்பற்றிப் பாடிக்கொண்டே ஆடுவார்கள்.

டோலக், ஜால்ரா ஆகிய இசைக் கருவிகள் பயன்படுத்தப்படும். ஆட்டம் திறந்த வெளியில்தான் நடைபெறும். இடையிடையே உரையாடல்கள் உரை நடையிலும் பேசப்படும்.

புராணக் கதைகள், உள்ளூர் வீரர்களின் வரலாறுகள் இந்த ஆடல் மூலம் நடித்துக் காட்டப்படும். கோவையில் முருகன் வள்ளி கதையும், மதுரையில் மதுரைவீரன் கதையும் சிறப்பிடம் பெறும். காத்தவராயன் கதை ஒயிலாட்டம் மூலம் நடத்தப்பெறும் சுவையான கதைகளில் ஒன்று. இராமாயண பாரதக்கதைகள் பல இரவுகள் தொடர்ந்து ஒயிலாட்டத்தில் ஆடிக் காட்டப்படுவதும் உண்டு.



கைச் சிலம்பாட்டம்

சில இடங்களில் இந்த ஆட்டத்தை 'ஒயில் கும்மி' என்று கூறுகிறார்கள்.

### சக்கையாட்டம்

சக்கையாட்டம் முதன்முதலில் தஞ்சையில் தொடங்கிப் புகழ் பெற்று பின்னர் திருச்சி மாவட்டத்தில் பரவிச். சிறந்துள்ளது. தேக்கு மரத் துண்டுகள் நான்கினை, ஒரு கயிற்றால் இணைத்து நான்கு விரலிடைக்குள் வைத்து ஒலியெழுப்பி ஆடுவதனால் இந்த ஆட்டத்துக்குச் சக்கையாட்டம் என்ற பெயர் கொடுக்கப்பெற்றுள்ளது. சக்கை என்பது மரத் துண்டுகள் என்ற பொருளைத் தருவது. ஒவ்வொரு மரத்துண்டும் 7 அங்குலம் நீளம் $\frac{3}{4}$ அங்குலம் அகலம் உடையதாக இருக்கும்.

எட்டு முதல் பன்னிரண்டு பேர் வட்டமாகவோ இணை கோட்டு வரிசையாகவோ நின்று இந்த ஆட்டத்தை ஆடுவர். அனைவரும் ஒரே மாதிரி உடை உடுத்திருப்பர். ஒரு அரைக்கால் சட்டையும் தோளில் ஒரு சதுரமான துண்டும் அணிந்து வருவர். தலையில் ஒரு கைக்குட்டை கட்டப்பெற்றிருக்கும். சதுரத் துண்டில் சிறிய மணிகள் அழகான குஞ்சங்கள் தொங்கிப் பொலிவூட்டும், ஜால்ரா போன்ற இசைக் கருவிகள் பயன்படுத்தப்படும்.

பொதுவாக, மாரியம்மன், முருகன் கோயில் ஊர்வலத்தில் இந்த ஆட்டம் நடைபெறும். அந்தந்த தெய்வக் கதைகளைப் பாடி ஆடுவர். தற்பொழுது தேசியப் பாடல்கள், வீர வரலாற்றுக் கதைகள், நீதி விளக்கக் கதைகள் சமுதாய நிகழ்ச்சிக் கூறுகள் ஆகியவற்றைப் பாடி ஆடுவதும் உண்டு. மக்களை மகிழ்விப்பதோடு அவர்களுக்கு அறிவுரை கூறி நெறிப்படுத்த வேண்டும் என்ற நிலைக்குச் சக்கையாட்டம் வளர்ந்துள்ளதாகக் கூறலாம்.

ஆட்டம் தொடங்கும்போது மக்களைப் பார்த்து அவர்கள் பாடும் பாட்டு ஒரு அன்பான வேண்டுதல் போன்றும் தூண்டுதல் போன்றும் இருக்கும்.

'பாருங்கள் பாருங்கள்
பாருங்களே - பாலர்
ஆடும் விதத்தைப் பாருங்களே
பார்புகழும் இந்தச் சக்கையாட்டத்தைப்
பாரெங்கும் போற்றிட
ஆடும் விநோதத்தைப்
—பாருங்கள்'

பாடலில் வரும் 'பாலர்' என்ற சொல் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. முன்பு சிறுவர்கள் இதில் பங்கு கொண்டு ஆடி இருப்பார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. இப்பொழுதுஇளைஞர்கள், நடுத்தர வயதினர் ஆடுவதைக் காணலாம்.

### கோயில் பணியாளர்களுக்குக் குடும்ப நலத்திட்டம்

**தமிழ்நாட்டில் இந்து சமய அறக்கட்டளைத்துறை பொறுப்பின் கீழ் வருகிற இந்து சமய அறநிலைய அதிகாரிகள், பணியாளர்கள் அனைவரும் பயனடையும் பொருட்டு, அரசு குடும்ப நலத்திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.**

**இந்து சமய அறக்கட்டளை நிறுவனங்களில் 25 வயதடைந்த ஆனால் 55 வயதுக்கு மேற்படாத பணியாளர்கள், அதிகாரிகள் அனைவரும் இத்திட்டத்தில் சேரத் தகுதியுடையவர்களாவர்.**

**இத்திட்டத்தின் கீழ், இந்து சமய அறக்கட்டளை நிலைய அதிகாரிகளும், பணியாளர்களும் தங்களது சம்பள விகிதத்தின்படி ரூ.2.50 முதல் ரூ.7.50 வரையில் அமைக்கப்பட்ட 'குடும்ப நல நிதி'க்குச் செலுத்த வேண்டும்.**

**தொகை செலுத்துகிற பணியாளர்/அதிகாரி ஓய்வு பெறுகையில் அல்லது அலுவலகத்தை விட்டு விலகிச் செல்கையில் அல்லது பணியிலிருந்து நீக்கப்படுகையில் பணியாளர்/அதிகாரி, அவர் எவ்வளவு தொகை செலுத்தியுள்ளாரோ, அத்தொகையை நிதியின் நிர்வாகியாகிய இந்து சமய அறக்கட்டளை ஆணையாளர், நிர்ணயிக்கக் கூடிய தொகையுடன் சேர்த்துப் பெறுவார்.**

### வைந்தனை ஆட்டம்

வைந்தனை ஆட்டம் வட ஆர்க்காடு ,தென் ஆர்க்காடு போன்ற வட மாவட்டங்களில் ஆடப்படுகிறது. இதைச் சில இடங்களில் வளந்தனை ஆட்டம் என்று கூறுகிறார்கள். இது ஆண்கள் ஆடுகிற ஒரு வகையான கோலாட்டம். ஆடுவோர் காலில் சலங்கை கட்டியிருப்பர். டோலக், தாளம் முதலிய கருவிகளைக் கையாண்டு, தாளக்கட்டுடன் ஆட்டத்தை நடத்துகிறார்கள். வள்ளி திருமணம் போன்ற கதைகளை ஆடிக் காட்டுகிறார்கள். பாடல்கள் பெரும்பாலும் காவடிச் சிந்து அமைப்பிலும் இசையிலும் உள்ளன. விழாக் காலங்களில் பெருவாரியாக நடைபெறுகிறது.

### கைச் சிலம்பு ஆட்டம்

ஆட்டக்காரன் கைகளில் சிலம்புகளை வைத்து ஆடுவதனால் கைச்சிலம்பு ஆட்டம் இந்தப் பெயரைப் பெற்றுள்ளது. இந்த ஆட்டத்தில் நாலு ஆட்டக்காரர், இரண்டு பாடகர் இடம் பெறுவர். ஆடுவோர் கால்களில் சலங்கை கட்டியிருப்பர். பெரும்பாலும் இந்த ஆட்டம் காஞ்சிபுரத்தில் பெருவழக்காக நடைபெறுகிறது. சென்னையைச் சுற்றியுள்ள ஊர்களிலும் இந்த ஆட்டம் நடக்கிறது. பொதுவாகக் கைச்சிலம்புஆட்டம்செங்கல்பட்டு மாவட்டத்துக்கு உரியதாகத் தோன்றுகிறது. பல்லவ மன்னர்களின் பேராதரவு இதற்கு, முன்பு இருந்ததாகக் கூறப்படுகிறது.

சில கிளைக்கதைகள் பாடலாக விளக்கப் படுவதை கைச்சிலம்பு ஆட்டத்தில் காணலாம். முக்கியமாகப் 'பொம்மி கல்யாணம்' கதை உருவில் மிக அழகாக ஆடிக் காட்டப்படும். கதைப்பாடலைக் குழுவின் தலைவன் முதலில் பாடியதும் மற்றவர்கள் அதைத் தொடர்ந்து பின் பாட்டாகப் பாடுவர். கதைகளின் நிகழ்ச்சியமைப்பும் உணர்ச்சிக் கூறுகளும் சுவைபடப் புலப்படுத்தப் பெறும். மக்கள் அவற்றைக் கேட்டுச் சுவைத்து மகிழ்வது இந்த ஆட்டத்தின் சிறப்பைப் புலப்படுத்தும்.

அம்மன் விழா, நவராத்திரி விழா ஆகியவை நடைபெறும் போது இரவு வேளையில் கைச் சிலம்பு ஆட்டம் களின் சிறப்பு டன் நடக்கும். முன்பு உடுக்கு, பம்பை முதலிய கருவிகளைப் பயன் படுத்தியுள்ளனர். இப் பொழுது மிருதங்கம், தபேலா, கடம், டோலக் போன்ற தாளக் கருவிகளை அடித்து ஆட்டத்தை நடத்துகின்றனர். கையிலிருக் கும் சிலம்புகளையும் ஆட்டி யசைத்து ஒலி எழுப்புகின்றனர்.

## களியலாட்டம்

கன்னியாகுமரி, திருநெல்வேலி முதலிய தென்மாவட்டங்களில் களியலாட்டம் இன்றும் சிறப்பு டன் நடக்கிறது. இதனை ஒரு வகைக் கோலாட்டம என்றே கூறலாம். 'களி' என்ற சொல் லுக்கு 'ஆட்டம்' என்ற பொருள் உள்ளது. மலையாள மொழியில் 'களி' என்றுதான் ஆட்டத்தை இன்றும் குறிப்பிடுகிறார்கள். ஆட் டம் தரும் களிப்பிலிருந்து இந்தச் சொல்லை ஆட்டம் பெற்றிருக்க வேண்டும்.

இரண்டு குச்சிகளை ஒன்றுடன் ஒன்று மோதித் தாளவொலி எழுப்பி அதற்குத் தக்கவாறு ஆடுவதை இந்த ஆட்டத்தில் சிறப்பாகக் காணலாம். குச்சி கள் குட்டையாகவே இருக்கும். அதில் பிடிக்கும் பகுதி பருத்தும், அடிக்கும் பகுதி சிறுத்தும் காணப் படும்.

ஆட்டத்தில் கலந்துகொள் வோர் ஒற்றை வட்டமாகவோ, இரட்டை வட்டமாகவோ நின்று ஆடுவர். ஒரு பாடகர் வட்டத் தின் மத்தியில் நின்று பாடுவார். இரண்டு தாளமும், மிருதங்கமும் துணைக்கருவிகளாக அமைந்து ஆட்டத்தின் வேகத்தைப் பெருக் கும். களியல் அடிப்போர் பாடு வது இல்லை. அவர்கள் காலில் சலங்கை கட்டப்பட்டிருக்கும்.

பாட்டின் தாளத்துக்குத் தக்க வாறு குச்சிகளை ஒன்றுடன் ஒன்றை மோதிச் சுற்றுச் சுற்றி வருவர். சில சமயம் அடுத்தவர் கையிலிருக்கும் குச்சியிலும் அடிப் பர். குனிந்தும் நிமிர்ந்தும், முன் னும் பின்னும் திரும்பியும் குச்சி களை அடித்தவாறு சுற்றிச் சுற்றி வருவது நல்ல காட்சியாகும்.

விழா நேரங்களைவிட மற்ற சமூகக் கொண்டாட்டங்களில் இந்த ஆட்டம் பெரும்பான்மை யாக ஆடப்படும். அறுவடை பற்றிய செய்திகளும், வரலாற்று நிகழ்ச்சிகளும், புராண இதிகாசக் கதைகளும் பாடலாக விளக்கப் படும். தற்பொழுது கிறிஸ்தவ பண்டிகை, பள்ளி விழாக்கள் ஆகியவற்றில் களியலாட்டம் மிகச் சிறப்பாக நடத்தப் படுகி றது. நாட்டுப்புற மக்கள் நல்ல கலையாக இதை மதிக்கிறார் கள்.

## கோலாட்டம்

கோலாட்டம் தமிழ்நாட்டில் பல பகுதிகளில் மிகவும் கோலா கலமாக ஆடப் பெற்றுவரும் ஆட் டமாகும். இது களியலாட்டத்தை விடச் சிறிது மாறுபட்டது. இதில் பயன்படுத்தப் படும் கம்புகள் பெரிதாக இருக்கும் களியலில் களிக்கும் கோலாட்டத்தில் கோலுக்கும் சிறப்பிருப்பதைப் பெயர்களிலிருந்தே அறியலாம்.

பெண்களும் கோலாட்டத்தில் கலந்து ஆடுகின்றனர். காஞ்சிப் புராணத்தில் 'செவ்வாச்சியர் கோலாட்டம்' என்று குறிப்பிடப் பெற்றிருப்பது சிந்தனைக்கு உரிய இடமாகும். இந்தியாவில் வேறு இடங்களிலும் கோலாட்டம் சிறு சிறு மாறுபாடுகளுடன் நடை பெற்றுவருவதை அறியலாம். வடமொழியில் இந்த ஆட்டத்தை 'தண்டலாஸ்யா' என்று கூறுவர். ராஜஸ்தானில் 'தண்டியராஸ்' என்ற பெயரில் இந்த ஆட்டம் இன்றும் நடைபெறுகிறது. 'தண் டம்' என்றால் நீண்டு பருத்த கம்பு என்று பொருள்படும். 'தண்டியராஸ்' ஆட்டத்தில் பயன்படுத்தப்பெறும் கம்பு நீண் டதாகவும் பருமனுடையதாகவும் காணப்படுகிறது. தமிழ்நாட்டில் கோலாட்டத்திற்குப் பயன்படுத் தும் கம்புகள் குட்டையாகவும் சிறுத்தும் உள்ளன.

கோலாட்டத்துக்குரிய கம்பு கள் இரு வண்ணமுடையனவாகக் காணப்படும். பெண்கள் பெரும் பாலும் இந்த ஆட்டத்தை ஆடு வர். தீபாவளி நாளை அடுத்து வரும் அமாவாசை அன்று கோலாட்ட விழா தொடங்கும். தொடர்ந்து பத்து நாட்கள் நடக்கும். வீட்டுக்கு வீடு பெண் கள் சென்று கோலாட்டம் ஆடு வர். ஆட்டம், வீட்டு முற்றத்தில் நடைபெறும்.

பெண்கள் வட்டமாக நின்று இந்த ஆட்டத்தை ஆடுவர். பெண்கள் ஆட்டத்தில் கலந்து கொள்ள வந்தவாறு இருப்பர். அவர்கள் வரவர வட்டம் பெரி தாகிக் கொண்டே இருக்கும். பாடல்களைப் பாடிக் கொண்டி ருக்கும்போதே கோல்களை அடித்து ஆடுவார்கள். முன்னும் பின்னும் திரும்பி அடிப்பர். சில சமயம் குனிந்தும் நிமிர்ந்தும் கோல்களை மோதுவர். அடுத்த வர்களுடைய கோல்களில் அடித் தும் ஒலி எழுப்புவர். வட்டத்தில் சுற்றியவாறே ஆடிக்களிப்பர். பெரும்பாலும் கோலாட்டத்தில் கிருஷ்ணனைப் பற்றிய பாடல் களே பாடப்படும். மற்றவகைப் பாடல்களையும் சில சமயம் கேட்கலாம்.

கோலாட்டத்துக்கும் ஒரு புரா ணக் கதைக்கும் தொடர்பு இருப் பதாகக் கூறப்படுகிறது. பந்தா சுரனை எதிர்த்து ஒரு கடும் போர் நடக்கிறது. போரின் போக்கை மாற்ற பார்வதி தேவி ஒன்பது நாட்கள் கடும் தவம் செய்கிறாள். தவத்தின் கடுமை யால் அன்னையின் முகம் பொலி விழந்து விடுகிறது. சிவபெருமா னாலும் அவளை நோக்க முடி யாத அளவுக்கும் கோரமாகிவிட் டது. அதைத் தாங்க முடியாத தோழியர் நந்திதேவரின்முன்னால் நின்று கோலாட்டம் ஆடுகின்ற னர். ஆட்டம் நடக்க நடக்க பார் வதியின் முகம் களின் பெறத் தொடங்குகிறது. கோலாட்டத் தின் சிறப்பை விளக்குவதற்காக இக்கதை கற்பனை செய்யப் பெற்றதாகக் கருதலாம்.

இப்பொழுது அம்மன் 'சாத் திரை' (விழா) நடைபெறும் போது பஸவன் (நந்தி) முன்பு முதலில்கோலாட்டம் நடப்பதைக் கண்டு மகிழலாம். இப்படி ஆடும்

## அரிசனக் குடியிருப்புக் கோயில்கள்

**அரிசனக் குடியிருப்புகளில் உள்ள 110 சிறுகோயில்களைப் பழுதுபார்த்துப் புதுப்பிப்ப தற்காக இதுவரையில் ரூ. 1,17,000 அனுமதிக் கப்பட்டுள்ளது.**

**அரிசனக் குடியிருப்புகளிலுள்ள கோயில் களின் பழுது பார்ப்புப் பணிக்கும், புதுப்பிக்கும் திருப்பணிக்கும் மட்டும் 1980-81ல் ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யக் கருதப்பட்டுள் ளது.**

பொழுது நந்திக்கு களிமண்ணால் ஓர் உருவம் செய்து வைப்பர். முளைப்பாலிகை கொண்டு வருவர். ஒரு சிறுவனை நந்திதேவனாகக் கற்பனை செய்து அவனுக்குப் படையல் செய்வர். விழா முடிந்ததும் களிமண் நந்தியையும் முளைப்பாலிகையையும் ஆற்றிலோ குளத்திலோ விட்டு வாழ்த்துவர்.

கோயில் ஊர்வலத்தின்பொழுது நூற்கயிற்றுப் பின்னலுக்கு இடையில் நின்று கோலாட்டமாடி பின்னல் அவிழ்த்துக் காட்டும் ஆட்டமும் உண்டு. அதற்கு பின்னல் கோலாட்டம் என்று பெயர்.

## கும்மி

தமிழ்நாட்டு ஆடல்களில் கும்மி மிகச்சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. ஆந்திர நாட்டுக் கொப்பிக்கும் கேரளநாட்டுக் கைகொட்டிக் களிக்கும் மிக நெருக்கமான தொடர்பு உண்டு. மக்களின் வாழ்க்கையில் நடக்கும் சிறுசிறு நிகழ்ச்சிகளும் கும்மியில் இடம் பெறுவதனால் அதற்கு மிகச் சிறப்பு கொடுக்கப்படுகிறது.

ஆண்கள் கலந்துகொள்ளும் கும்மி பெண்களுக்குரிய கும்மி ஆகிய இரண்டும் தமிழ்நாட்டில் நடைபெறுகிறது. ஆயினும் பெண்கள் அடிக்கும் கும்மிக்கே நல்ல வரவேற்பு உள்ளது. பெண்கள் வட்டமாக ஒரு விளக்கைச் சுற்றி நின்று கும்மியடித்துப் பாடுவது கண்ணுக்கும் காதுக்கும் சிறந்த விருந்தாக இருக்கும்.

மாரியம்மன், முத்தாலம்மன், பகவதியம்மன் ஆகிய பெண் தெய்வங்களின் கொடைவிழா நடக்கும்பொழுது பத்து நாட்கள் தொடர்ந்து கும்மி, பெண்களால் அடித்து ஆடப்படுவதைத் தமிழ்நாட்டில் பல இடங்களில் காணலாம். பூப்பெய்திய பெண்களின் வீடுகளிலும் சில நாட்கள் பக்கத்து விட்டுச் சிறுமிகள் கூடிக் கும்மியடித்துப் பாடும் பழக்கம் இருந்தது. ஆனால் அது இப்பொழுது வழக்கிழந்து வருகிறது.

பொங்கலுக்கு மறுநாளுக்கு அடுத்த நாளைக் காட்டுப்பொங்கலாகவும் காணும் பொங்கலாகவும் பல இடங்களில் இன்னும் கொண்டாடி வருவதைக் காணலாம். அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் சில ஊர்மக்கள் ஒன்று கூடிப் பக்கத்திலிருக்கும் மலைப் பகுதிக்குச் செல்வர். அங்கு விருந்து நடக்கும். அப்பொழுது பெண்கள் கூடிக் கும்மியடித்து அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவர். பாவநாசத்துக்கு அண்மையிலிருக்கும் மாவடி என்ற ஊர்மக்கள் இவ்விழாவினை ஆண்டுதோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்குத் தவறுவதே இல்லை. அவர்கள் பாடும் பாடல்களும் நல்ல சுவையாக இருக்கும்.

> நம்பிக்கை மூலமாக மனிதன் மலையைக்கூட அசைக்க முடியும்.
>
> —மகாத்மா காந்தி
>
> தீமையாய்த் தோன்றுகின்ற அனைத்திலிருந்தும் உங்களை நீங்களே விலக்கிக் கொள்ளுங்கள்.
>
> —இயேசு

அம்மன் கோயில் திருவிழாக்களின் பொழுதும் 'முளைப்பாரி' என்ற ஒரு சிறப்பு நடத்தப்படும். மக்கள் 18 வகை தானியங்களை முளைக்க வைப்பர். அது பத்து நாள் முளைப் பருவம் அடைந்ததும் கோயிலுக்கு எடுத்து வருவர். புனிதமாக அதைக் கருதி விழா நடக்கும் இடத்தில் ஒரு வெளிப் பகுதியில் அதனை வைப்பர். முதல் 9 நாட்கள் அதைச் சுற்றிப் பெண்கள் கும்மியடித்துப் பாடுவர். அவர்களுடைய பாடல் இனிமையாகவும் பொருள் சுவையுடையதாகவும் இருக்கும்.

'ஒண்ணாங் கிழமை யன்னிக்கு
ஓரிலையாம்—முளைப்பாரி
இரண்டாங் கிழமை யன்னிக்கி
இரண்டிலை—முளைப்பாரி
யாம்'

இவ்வாறு பத்துக் கிழமைக்கும் பாடி இறுதியாகப் 'பத்தாம் கிழமையன்னிக்கி பதமே யடைந்திடுமே' என்று முடிப்பர். பாடல் மெட்டு 'தானானே தானானே' என்ற அமைப்பில் இருக்கும். பத்தாம் நாள் விழா நடக்கும்போது அனைவரும் முளைப் பாலிகையை எடுத்து ஆற்றில் அல்லது குளத்தில் விட்டு விடுவர்.

கும்மியடிக்கும் போது பாட்டின் முதல் அடியை தலைவி பாடுவாள். மற்றவர்கள் அதனைத் தொடர்ந்து பாடுவர். சில சமயம் எதிர்ப்பாட்டுப் பாடப் படுவதும் உண்டு. கதைப் பாடல்கள் குறிப்பிட்ட தெய்வ வரலாறுகளை விளக்கும் தரமாக இருக்கும். தனிப்பட்ட பாடல்களைப் பாடிக் கும்மியடிப்பதே மிகுதி. கதைகளில் வரும் பாத்திரங்களுக்குத் தக்கவாறு வேடமிட்டு ஆடை அணிகளை அணிந்து கும்மியடிப்பதையும் காணலாம்.

ஆடும்போது. வட்டமாகச் சுற்றி நின்று கைகளைக் கொட்டியவாறு பாடுவர். கையடியில் விரல்களின் தட்டு, உள்ளங்கைத் தட்டு, அஞ்சலித் தட்டு, முழுக் கைத்தட்டு என்று பல வகை உண்டு. கால்கள் சலங்கை ஒலியுடன் தாளங்களை மாற்றி மாற்றி உதைக்கும். அதில் முழுப்பாதம் தரையில் படல், கட்டை விரல் மாத்திரம் படல், முன்னங் கால் படல் என்று பலவகை உண்டு. ஆடும்போது மேலும் கீழும், இடமும் வலமும் இடையுமாக கையை நீட்டிக் கும்மியடிப்பர். அவர்கள் குனிந்து நிமிர்ந்து திரும்பி வளைந்து ஆடுவது மிகவும் கவர்ச்சியாக இருக்கும். சில சமயம் குதித்து ஆடுவதையும் காணலாம்.

கும்மிப் பாட்டு தமிழில் ஒரு தனி இலக்கியமாகவே வளர்ந்துள்ளது. அரிச்சந்திரன் கும்மி' சிறுத்தொண்ட நாயனார் சரித்திரக் கும்மி, வள்ளியம்மன் கும்மி. பஞ்சபாண்டவர் வைகுந்தர்கும்மி என்று பல கும்மிப் பாடல் நூல்கள் உள்ளன. இவை மாத்திரமன்றி நபியுல்லாக் காரணக் கும்மி, ஞானோபதேசப்பேரின்பக் கும்மி போன்ற இஸ்லாமிய,கிருஸ்தவக் கும்மி நூல்கள் சிலவும் உருவாயின. சமூகத்தைச் சித்திரித்துக் காட்டும் விலைமாதர் கும்மியும் ஆட்சி செய்வோரையும் பாராட்டுந்தரமாக இண்டியா சக்கரவர்த்தினி விக்டோரியா இராஜாத்தியின் திருமுடி ஜூபிலித் திருநாள் கும்மியும் எழுதப் பெற்றுள்ளன. இத்தகைய கும்மி நூல்களைக் கும்மியாகிய நாட்டுப் புறக்கலையிலிருந்து கிளைத் தெழுந்த இலக்கிய செல்வங்களாகக் கருதலாம்.

கும்மிப் பாட்டு பெண்களுக்கே உரியது என்பதைக் காட்டும் சான்றுகள் பல உள்ளன.

**'வாருங்கடி தோழிப் பெண்களா
மகிழ்ந்து கும்மி யடித்தாடச்
சேருங்கடி பெண்க ளெல்லாம்'**

என்ற பாடலில் பெண்களைக் கும்மியடிக்க அழைப்பதைக் காணலாம்.

**'சித்த மகிழ்ந்திந்த சரிதை
கேட்டிருந்த
தேவிமார் வாழத் தினம் வாழி'**

என்ற பாட்டில் பெண்களே கும்மிப் பாடலைக் கேட்டுச் சுவைத்த குறிப்பு உள்ளது.

'கண்டைக் கும்மி' என்ற ஒரு வகைக் கும்மி காணப்படுகிறது. இது இன்பமூட்டிப் பெண்களுக்கு உடற்பயிற்சி முறைகளை சுவையாக அறிவிப்பதாகும்

—(தொடரும்)



### தமிழ் வளர்த்த பெரியார்கள் :

# சி.வை.தாமோதரம் பிள்ளை

—சிறுவை நச்சினார்க்கினியன்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகச் சிறந்தபுலமை நலம் வாய்ந்த தமிழ் அறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள். இவர் பல பாடல்களையும் உரைநடை நூல்களையும் இயற்றியுள்ளார். இவர்களின் பாடல்களும் உரைநடைகளும் சொற்செறிவும், இனிமையும் பொருந்தி விளங்கின என்பர் அறிஞர்கள். தமிழ் மொழியினிடத்தும், இலக்கியத்திலும் கொண்டிருந்த பக்தியாலும் காதலாலும் ஓலைச்சுவடிகளாய் இருந்த பழைய தமிழ் இலக்கண இலக்கிய ஏடுகளைத் தேடிக் கண்டு பிடித்துப் பெருமுயற்சியுடன் அவைகளைப் படித்து, ஆய்ந்து, ஒப்பு நோக்கி, பாடவேறுபாட்டுடன் வெளியிட்டுள்ளார்கள். இந்த அரிய தொண்டினைத் தமிழ் மக்களால் என்றும் மறக்க இயலாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இராமநுசக் கவிராயர், ஆறுமுக நாவலர், மயிலை சண்முகம் பிள்ளை, வீராசாமிச் செட்டியார் முதலானோர் போன்றோர் சிறப்புமிக்க பதிப்பாசிரியராய் விளங்கினார்கள். பதிப்புத்துறையில் நாம் அனைவரும் செல்லமாக அழைக்கும் தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்களுக்கு முன்னோடியாக இவர்கள் விளங்கினார்கள். இவர்களின் அரும் முயற்சியால், நீதிநெறி விளக்கவுரை, வீரசோழியம் (1181); இறையனார் அகப்பொருள், தணிகைப் புராணம் (1883); தொல்காப்பியம் பொருளதிகாரம் (1885); வீரசோழியம், கலித்தொகை (1887) தொல்காப்பியம் சேனாவரையம்; தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர், இலக்கண விளக்கம், சூளாமணி (1889) முதலிய நூல்களை முதன் முதல் பதிப்பித்தார்கள். இவர்கள் எழுதி வெளியிட்டவை சூளாமணி வசனம், நட்சத்திர மாலை, ஆதியாகம கீர்த்தனம் முதலியன குறிப்பிடத்தக்கவை. இவர்கள் பதிப்பித்த நூல்களின் பதிப்புரைகளில் எல்லாம் தம் தமிழாசிரியரை வாழ்த்தியுள்ளார்கள்.

கலித்தொகை, இலக்கண விளக்கம் ஆகிய நூற்களுக்குத் திரு பிள்ளை அவர்கள் எழுதிய முன்னுரை மிகச் சிறந்த ஆராய்ச்சிக் குறிப்புகளை உடையன. பதினெண் கீழ்க்கணக்குப் பற்றிக் கூறும் ஒரு பாடலில் வரும் முப்பால் என்பது திருக்குறள் அல்ல என்றும், கோவை என்பது வேறு எனவும் அது மாணிக்கவாசக சுவாமிகள் இயற்றிய திருச்சிற்றம்பலக் கோவை அல்ல என்றும் ஆராய்கிறார். திருக்குறளும், கோவையும், தமிழர்களுக்கு வேதம் போன்றவை; அவைகளைக் கீழ்க்கணக்கில் சேர்ப்பது தக்கதல்ல என அறிவுறுத்துகிறார்கள் திரு பிள்ளை அவர்கள்.

தமிழ்ச் சுவடிகளைத் தேடி அவைகளைப் பதிப்பித்துத் தந்த போது அக் காலத்தில் பாராட்டுதலுக்குப் பதில் வசவுகள் கிடைத்தன. ஆங்கிலம் கற்ற தமிழர்களோ உதாசீனப்படுத்தினர். தமிழ் கற்றவர்களோ பொறாமை அடைந்தனர். நூல்களைப் பதிப்பிக்கும்போது விளங்காத இடங்களுக்கு விளக்கம் கேட்டுக் கடிதங்கள் எழுதினால் உரிய விடைகள் கிடைக்காது வருந்திய நாட்கள் பல.

இவர்கள் ஏடுகளைப் பார்வையிட்டு ஆய்ந்து பதிப்பித்தபோது, ஏட்டுச் சுவடிகளின் நிலைமைகளைக் கீழ்க்கண்டவாறு தாம் பதிப்பித்த கலித்தொகைப் பதிப்புரையில் கூறுகின்றார்.

''என் சிறு பிராயத்தில் என் தந்தையார் எனக்குக் கற்பித்த சில நூல்கள் இப்போது தமிழ்நாடெங்கும் தேடியும் அகப்படவில்லை. ஓட்டித் தப்பியிருக்கும் புத்தகங்களும் கெட்டுச் சிதைந்து கிடக்கும் நிலைமையைத் தொட்டுப் பார்த்தவர்க்கன்றோ தெரிய வரும்! ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது. ஏட்டைப் புரட்டும் போது துண்டு துண்டாகப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ வென்றால் வாலுந் தலையுமின்றி நாலுபுறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது''

அக்காலத்தில் ஏட்டுச் சுவடிகளை நீருக்கும் நெருப்புக்கும் இரையானது போக எஞ்சியவை செல்லினால் அரிக்கப்பட்டும் பாழாயின. அப்படித் தப்பிய நூல்களே 19ஆம் நூற்றாண்டில் சிலரால் பதிப்பிக்கப்பெற்றன. ஒருவேளை 16ம் நூற்றாண்டிலேயே ஏட்டுச்சுவடிகளைப் பதிப்பித்திருந்தால் மேலும் பல நூல்கள் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கும். 16லிருந்து 19ஆம் நூற்றாண்டுவரை உள்ள இந்த இடைக் காலத்தில் தான் பல நூல்கள் மறைந்துபோயின என்பர் அறிஞர்கள். ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனியும் இக் கருத்தே கொள்கிறார்.

பாடலாசிரியராய் ,உரைநடை நூலாசிரியராய், ஆராய்ச்சியாளராய் விளங்கிய இவர் யாழ்ப்பாணத்து ஏழாலை எனும் ஊரினர். 1832 செப்டம்பர் 12ம் நாள் வைரவநாதப் பிள்ளைக்கும் பெருந்தேவி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இளமையில் யாழ்ப்பாணத்தில் சிறந்த புலமைநலம் வாய்க்கப்பெற்ற சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயர் அவர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். அக்காலத்தில் இவர் இருந்த சூழ்நிலையில் அங்கிருந்த கிறித்துவ சங்கம் மூலமாகவே கல்வி கற்க ஏதுவாயிற்று. ஆகவே கிறித்துவ சங்கச் சார்புடையவராகவே இருந்து கல்வி பயிலலானார். பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரி ஒன்றில் சேர்ந்து பயின்றார். 1852-ல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியரானார். பிறகு சென்னையில் குடியேறினார்கள். ''தின வர்த்தமானி'' எனும் வார இதழுக்கு 1855ல் ஆசிரியரானார். இவ்விதழினைப் பெர்சிவல் பாதிரியார் அவர்கள் நடத்தி வந்தார்கள். அவருக்குப் பின் பிள்ளை அவர்கள் ஆசிரியரானார்கள். அக்காலத்தில் முதன் முதலாகச் செய்திகளை வெளியிட்ட இதழ் இதுவேயாகும். செய்திகள், இலக்கியம், அறிவியல் பற்றிய கட்டுரைகள் இதில்







Grant. 61.TM

**தாவர உணவுச் சத்துக்கள் சிலேடேட் வடிவில் அடங்கியிருப்பதனால் எக்ரோமின் பயிர் விளைச்சலைச் சிக்கனமான முறையில் 20% அல்லது அதற்கு மேலும் உயர்த்துகிறது.**

இந்தியாவின் முதல் தாவர உணவு இலைத் தெளிப்பான எக்ரோமின் பயிர் விளைச்சலின் தரத்தையும் அளவையும் மேம்படுத்துகிறது. ஈரப்படுத்தவும், பரப்ப உதவும் ஊக்கி கிரகிப்புத் தன்மையை மேலும் அதிகரிக்கிறது. மற்ற தண்ணீர்த் தெளிப்பு எக்ரோ கெமிக்கல்களுடன் எக்ரோமினை உபயோகிக்கலாம்

எக்ரோமின் சிலேட் செய்யப்பட்டுள்ளது. சிலேஷன், நியூட்ரியண்டுகள் படிப்படியாக முழுவதும் கிரகிக்கப்படுவதையும் சிறந்த மகசூலையும் உறுதி செய்கிறது.



நிரூபணம் இதோ:
''பருத்தி... எக்ரோமின் மூலம் விளைச்சல் 20% அதிகரித்தது.''– மணிலாணி பாமுலேயா எட்டக்குராபோடு, சதினபள்ளி தாலுக்கா, குண்டூர் ஜில்லா, ஆந்திரப் பிரதேசம்.

அதிகப்படி விவரங்களுக்கு இந்த முகவரிக்கு எழுதவும்:
**ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்.**
தபால் பெட்டி எண் 9417, பம்பாய் 400 093

எல்லாப் பயிர்களுக்கும் பயன்படும் தாவர உணவு இலைத் தெளிப்பான் எக்ரோமின் 10 கிலோ கொண்ட பைகளிலும் கிடைக்கிறது.

கிளை : 227–227–1 பொள்ளாச்சி ரோடு, கோயம்புத்தூர்–641 021

இடம் பெற்று விளங்கின. இவ்விதழுக்குத் திரு பெர்சிவெல் பாதிரியார் ஆசிரியராய் இருக்கும் வரை அரசினர் ரூ. 200- மானியம் வழங்கி வந்தனர். பின்பு சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் ஆசிரியரானார்.

1857ல் சென்னைப் பல்கலைக் கழகம் தோன்றியபோது இவர் முதன் முதலாக ''பி.ஏ'' தேர்வில் வெற்றி பெற்றார். இவர் சென்னை அரசு வரவு செலவு கணக்கு நிலையத்தில் சேர்ந்தார். அங்கு மறைத் தலைவரால் பெரிதும் பாராட்டப் பெற்றார். 1871ல் சட்டம் பயின்று ''பி.எல்.'' பட்டம் பெற்றார். 1882ல் அரசுப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இவர் 1887 முதல் 1890 வரை புதுக்கோட்டை சமஸ்தானத்தில் நீதிபதியாக இருந்து அறநிலை பிறழாது பணி செய்தார்.

இங்ஙனம் புகழ் வாய்ந்த இவர் 1891ல் சென்னைப் பல்கலைக் கழகக்குழு உறுப்பினரானார். தமிழ்ப் பாடத்திட்டக் குழுவின் தலைவராகவும் விளங்கினார்கள். இங்ஙனம் பண்பாலும் அறிவாலும் உயர்நிலை அடைந்த இவருக்கு அக்கால அரசு 1895ஆம் ஆண்டில் ''ராவ் பகதூர்'' பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

திரு தாமோதரர் அவர்கள் அக்காலத்தில் சிறந்த தமிழ்ப் புலமைநலம் பெற்று விளங்கிய சபாபதி நாவலர், அம்பிகை பாகர், கைலாசம் பிள்ளை, கார்த்திகேயப் புலவர், டாக்டர் உ.வே. சாமிநாதையர், வேதநாயகம் பிள்ளை, பூண்டி. அரங்கநாத முதலியார் ஆகியோர்களிடம் பெரு நட்புடையவராய் விளங்கினார். திரு.வி.க. அவர்கள், இவர்களிடம் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். ஒரு முறை கடலூர் நாராயணசாமி அவர்கள், சங்க இலக்கியத்தையும், சீவகசிந்தாமணியையும் அடக்க விலைப் பதிப்பாகக் கொண்டு வந்து அப் பதிப்பினை திரு.வி.க. அவர்கள் நினைவுக்கு உரியதாக்க நினைத்தார். ஆனால் திரு.வி.க. அவர்கள் அக்குறிப்பினை மறுத்து, திரு. நாராயணசாமி அவர்களின் தந்தையாரின் நினைவுக்கோ, சி. வை. தாமோதரனார் நினைவுக்கோ அர்ப்பணஞ் செய்யுமாறு கூறினார்கள். அதனால் முதன் முதலில் வந்த மலிவுப் பதிப்பினை ஒரு சிறந்த பதிப்பாசிரியரின் நினைவாகக் கொண்டு வருதல் வேண்டும் என்ற துடிப்பும் நன்றி உணர்வும் பளிச்சிட்டதை நாம் உணர முடிகிறது. திரு.வி.க.வின் உள்ளப் பண்பினை வியந்து மகிழ்தற்கு உரியது.

திரு தாமோதரனாரின் தமிழ்க் காதலுக்கு மற்றொரு சான்று, கல்லூரியில் தமிழெடுத்துப் படிப்போருக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் தேர்வு நடத்தித் தேர்வு பெற்றவர்களுக்குப் பரிசு தருவர். இவர், அப் பரிசு பெற்றோரை வரவழைத்துப் பாராட்டி மகிழ்வதுண்டு. அவ்வாறு பாராட்டப் பெற்றவர் பரிதிமாற் கலைஞர் என்னும் திரு.வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார். இவருக்கு ''திராவிட சாஸ்திரி'' என்ற பட்டம் வழங்கி ஊக்குவித்தார்கள் திரு பிள்ளை அவர்கள்.

தமிழ் இலக்கியத் துறையில் பெரும் தொண்டு புரிந்த இவர் 1—1—1901-ல் சென்னையில் இயற்கை எய்தினார்.

## தொப்பையாறு நீர்த்தேக்கத் திட்டம்!

தொப்பையாறு அல்லது வேப்படியாறு என அழைக்கப்படும் இந்த ஆறு கடல் மட்டத்திலிருந்து 1,620 மீட்டர் உயரத்தில் உள்ள சேர்வராயன் மலையிலிருந்து உற்பத்தியாகி, சேலம், தருமபுரி மாவட்டத்தில் உள்ள தொப்பூர், வெள்ளாறு, மல்லிக்குண்டம் ஆகிய கிராமங்களின் வழியாக ஓடி, மேட்டூருக்கு மேலே 16 கி. மீ. தொலைவில் குரும்பைச்சேரியூர் கிராமத்தில் உள்ள ஸ்டான்லி நீர்த் தேக்கத்தில் கலக்கிறது.

தொப்பையாறு நீர்த்தேக்கம் தொப்பூரிலிருந்து 8.5 கி.மீட்டர் தொலைவில் சென்னை-கள்ளிக்கோட்டை தேசிய நெடுஞ்சாலைக்குக் கிழக்குப் பகுதியில் அமைக்கப்பட இருக்கிறது.

இந் நீர்த்தேக்கத்தைக் கட்டி முடிக்க ரூ. 332 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப் பட்டுள்ளது. இத் தேக்கம் கட்டுவதற்கான இடம் ரூ. 6 இலட்சம் செலவில் கையகம் செய்யப்படவிருக்கிறது. இத்திட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம் சேலம், தருமபுரி மாவட்டத்தில் 5,330 ஏக்கர் நிலம் இருபோகச் சாகுபடிக்குக் கொண்டு வரப்படும். தருமபுரி வட்டத்தில் 2,050 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இத் திட்டத்தினால் 4,100 டன் நெல் உற்பத்தி அதிகரிக்கும்.

இந் நீர்த்தேக்கத் திட்டத்தைக் கட்டி முடிக்க ஆகும் செலவு ரூ. 332 இலட்சத்திற்கும் அரசு நிதி ஒதுக்கீடு செய்து, ஆணை பிறப்பித்துள்ளது.

# உழவே தலை!

பண்குளிரும் இசைநயத்தால்! ஐப்பசியில், தீபம்
படைவரிசை போலமையும் கார்த்திகையில் இந்த
மண்குளிரும் பெருமழையால்! அணைகளில்நீர் தேங்கும்!
மடைநனையும் ஆனி,ஆடி ஆற்றுநீரில்! பொன்போல்
கண்குளிரும் படிமின்னும் குறுவைநெல்லைச் சேற்றுக்
கழனியிலே விதைத்ததனை முப்பதாம்நா ளின்பின்
பண்பட்ட வயல்வெளியில் பறிந்துநட்டே நல்ல
பலன்காண்பார் ஐப்பசியில்! இதுமட்டு மல்ல!

புரட்டாசி, ஐப்பசியில் சம்பாவை நட்டுப்
பனிதுவங்கும் மார்கழியில், தையில் அறுப் பார்கள்!
வரப்பினிலே தெளிக்கின்ற பயி(று)உளுந்து யாவும்
மாசியிலே! ஆவணியில் தாளடியாம்! நீண்டு
திரண்டபுடலை, அவரை, கொத்தவ்ரை எல்லாம்
தோதுபட்க் கார்த்திகையில் பலன்கொடுக்கும்! பொங்கல்
கரும்புயரும் தையினிலே! தித்திக்கும் சீனிக்
கரும்புமாசி பங்குனியில் முழுவளர்ச்சி காணும்!





நெல்முற்றித் தலைசாய்க்க மூன்றுமாதம் ஆகும்!
நடுவதற்கும் அறுப்பதற்கும் குறித்தமாதம் உண்டு!
நல்வாழைக் கன்றுக்கோ எல்லாமே மாதம்!
நீள்காம்பு மாங்கனியோ ஆனியிலே! மேனி
எல்லாம்முள் முள்ளான பலாப்பழமோ வாய்க்கும்
இனிப்போடு காய்க்கும்வை காசியிலே! வெய்யில்
கொல்லுகின்ற கோடைகாலம் சித்திரைவை காசி
குடைமிளகாய், சிறுமிளகாய் வருகைதரும் மாதம்!

பன்னிரண்டு திங்களும்இவ் வாறுவிவ சாயி
படும்பாட்டி னாலேதான் கண்டுமுத லெல்லாம்
நன்றாகும்! அவராலே நகருயரும்! இந்த
நாடுயரும்! தன்னிறைவு வாய்க்கும்துறை தோறும்!
என்பதனை உணர்த்திடவே வள்ளுவரும் கூட
இன்குறளில் 'சுழன்றும்ஏர்ப் பின்னதுல' கென்றார்!
அன்னவரை, நித்தநித்தம் நம்மைவாழ் விக்கும்
அன்பினரை, வேளாண்மை யாளரைநாம் காப்போம்!



—பட்டுக்கோட்டை இராசேந்திரன்—

# படிக்கப் பழகுவோம்!

வே. தில்லைநாயகம்,
பொது நூலக இயக்குநர்.



புத்தகங்களைப் படிக்கின்ற தன்மை என்பது தமிழகத்தில் குறைந்துபோயிருப்பது நமக்கெல்லாம் வேதனை தருவதாக இருக்கின்றது.

வாங்கிப் படிக்கும் வசதிக் குறைவே இதற்கெல்லாம் காரணம் என்று யாராவது கூறினால் அது தவறாகும். அப்படியொரு குறை கூடாது என்பதனால் தானே நூலகங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன!

**மாறத்தக்க நிலை!**

கடந்த முப்பதாண்டுக் காலமாக நாம் நூலகப் பணியை நடத்திவந்தும் படிப்போர் கணக்கைப் பார்க்கும்போது எல்லாரும் நூலகம்வந்து படிக்கவில்லை; சிலரே-மிகச் சிலரே வருகிறார்கள் என்று அறிய முடிகிறது. இந்த நிலை மாறவேண்டும். மாற்றப்படவேண்டும்.

இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

மக்கள் தானாக நூலகம் வருவர் என்று இருந்து விடாமல் எல்லோரும் நூலகம் வருவதற்குத் திட்டமிட வேண்டும். நவம்பரில் தேசிய நூலக வாரம் கொண்டாடுவதோடு நின்று விடாமல்-நூல்களை அறிமுகப் படுத்துவதோடு நின்று விடாமல் மக்கள் தேவை என்ன என்று அறிய வீடு வீடாகச் சென்று அள்வீடு (House Survey) நடத்த வேண்டும்.

இதை அடிப்படை வேலையாகக் கொண்டு நூலகப் பணியாளர் ஒவ்வொருவரும் -அவசியமானால் வாசகர், நூலார்வளர், சமூகத் தொண்டர்கள் துணைகொண்டு - படித்தவர் ஒவ்வொருவரும் நூலகம் வர ஒரு இயக்கமே நடத்தலாம். படித்த ஒவ்வொருவரும் நூலகம் வந்து படிக்கச் செய்ய வேண்டும்.

**புதிய ஏற்பாடு**

இது மட்டும் போதாது. நம்மில் இன்னும் நூற்றுக்கு அறுபது பேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் படிக்க ஆசையுள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே நூலகத்தில் தினந்தோறும் கொஞ்ச நேரம் படித்துக் காட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

நூலகத்திற்கு வரும் ஒவ்வொருவரோடும் பேசி, 'வேண்டியதைத் தந்து, படிப்பை ஊக்க வேண்டும். அவர்கள் தொடர்ந்து வீட்டிலும் படிக்க ஏதுவாக உறுப்பினராகஉதவிசெய்ய் வேண்டும்.

இம்முறையிலே முயன்றால் தான், நிறைந்த மக்களுக்காக, குறைந்த செலவில் சிறந்த படிப்புத் (Best reading for the Greatest number at the least cost) திட்டமிட்டபடி ஆளுக்கு ஒரு நூல் கிடைக்க வழி பிறக்கும்.

எனவே அறிவின் முன்னோடிகளாகிய நாம் - நூலகர்கள், நூலக ஆர்வலர்கள், கல்வியாளர்கள், சமூக உணர்வாளர்கள் எல்லாம் - ஒருங்கிணைந்து நூல் உணர்வு வளர, நூலக உணர்வு பரவ அயராது உழைக்க வேண்டும்; ஒன்றாக உழைக்க வேண்டும்; நன்றாக உழைக்க வேண்டும். இதற்காக நாம் நம்மை நூலகப் பணிக்காக அர்ப்பணிப்போம்.






அறிவு, ஒழுக்கம், உழைப்பு ஆகிய மூன்று குணங்களும் உடையவன் மனிதத் தன்மை உடையவனாகிறான். அவன் தான் மனிதன். இதில் ஒன்று குறைந்தாலும் அவன் மனிதனாகான்!

—காந்தியடிகள்

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச்சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

## டான்சி

### தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை–600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41–7496 TNSI

# பழைய பேப்பர்

—பி. வி. கிரி

ஏழை குமாஸ்தா இப்ராகிம். அவருடைய ஒரே மகன் சலீம். ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான் அவன். அவனை நல்ல முறையில் வளர்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் அவன் தந்தைக்கு.

சலீம் படிப்பில் கெட்டிக்காரன். அன்றாடம் நடக்கும் பாடத்தை அன்று இரவே மனப்பாடம் செய்துவிடுவான். வீட்டிலும் சரி, வகுப்பிலும் சரி வம்புச் சண்டைக்குப் போக மாட்டான். அதனால் அவனை எல்லாரும் நல்ல பையன் என்று பாராட்டினார்கள்.

ஒரு நாள் அவன் வீட்டில் சாப்பாட்டுக்கே வழி இல்லை. அன்று காலை டிபன் கூட இல்லாமல், சலீம் பள்ளிக்குப் போக வேண்டியிருந்தது.

சலீம் பெற்றோர்களுக்கு, அவனை வெறுங்கையுடன் அனுப்புவது வருத்தமாகவே இருந்தது.

உடனே சலீமின் அம்மா மும்தாஜ், அலமாரியிலிருந்த பழைய பேப்பரையெல்லாம் பொறுக்கி எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

''இதை மளிகைக் கடையில் கொடுத்து, காசு வாங்கிச் சாப்பிடு!'' என்றாள்.

சலீம் அந்தப் பழைய பேப்பரை நன்றாக அடுக்கி எடுத்துக் கொண்டு பள்ளிக்குச் சென்றான்.

போகிற வழியில் மளிகைக் கடை ஒன்று இருந்தது. அங்கே கூட்டம் அதிகமாக இருந்தது. அந்தக் கூட்டத்துக்கு நடுவே புகுந்து சலீம், காகிதக் கட்டை நீட்டினான். வியாபார மும்முரத்தில் ஈடுபட்டிருந்த கடைக்காரன் சலீமைக் கவனிக்கவில்லை. பள்ளிக்கூடத்துக்கு வேறு நேரம் ஆகிக் கொண்டிருந்தது. வீட்டிலிருந்து 4 பர்லாங் தூரத்தில் இருந்தது பள்ளிக்கூடம்.

கூட்டம் எல்லாம் குறைந்தது. கடைசியில் சலீமைப் பார்த்தான் கடைக்காரன். சலீம் காகிதக் கட்டை அவனிடம் நீட்டினான். கடைக்காரன் அதை இப்படியும் அப்படியுமாகப் பார்த்துவிட்டு, ''இந்தா.... இதை நீயே வைச்சிக்கோ.....'' என்று திருப்பிக் கொடுத்துவிட்டான்.

சலீமுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பசியோ வயிற்றைக் கிள்ளியது. பள்ளிக்கோ நேரமாகிக் கொண்டிருந்தது. மத்தியானமோ சாப்பாடு இல்லை. இதையெல்லாம் நினைத்துக் கொண்டே சலீமுக்கு அழுகையே வரும் போலிருந்தது.

''இதெல்லாம் நல்ல காகிதம் தான்....இதை வைச்சிக்கிட்டு எவ்வளவு வேணும்னாலும்தாங்க...'' சலீம் கடைக்காரனிடம் கெஞ்சிக் கேட்டான்.

''இந்தப் பேப்பரை சும்மா கொடுத்தாக்கூட எனக்கு வேண்டாம். தினசரிப் பத்திரிகையா இருந்தா கொண்டா....'' என்று கடைக்காரன் சொல்லி விட்டு, வியாபாரத்தைக் கவனிக்கலானான்.

சலீமுக்கு மயக்கமே வரும் போலிருந்தது. உடனே அந்தக் காகிதக்கட்டை எடுத்துக் கொண்டு திரும்பினான்.


அப்போது—

''தம்பி! இந்தக் காகிதங்களை நான் வாங்கிக் கொள்கிறேன்.... இந்தா காசு!'' என்று ஸ்கூட்டரிலிருந்து இறங்கி வந்த ஒருவர் அவனிடம் ஐந்து ரூபாயை நீட்டினார்.

''என்ன, ஐந்து ரூபாயா? கடைக்காரன் வேணாம்னு திருப்பிக் கொடுத்த காகிதத்துக்கா ஐந்து ரூபாய்?'' சலீம் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தான்.

''தம்பி, பயப்படாதே! இந்தா இதை வைச்சிக்கோ!'' ரூபாய் நோட்டை அவர் நீட்டிக் கொண்டே இருந்தார்.

''இதை எங்கப்பா பார்த்தா திட்டுவாரு...'' என்றான் சலீம்.



''தம்பி! உங்க அப்பாவை எனக்கு நல்லாத் தெரியும். ஏன், உன்னைக்கூட எனக்குத் தெரியுமே!'' என்ற அவர், ''வந்து.... நீ ராமுவோட சிநேகிதன் தானே?'' என்று கேட்டார்.

''ஆமா, ராமுவும் நானும் எப்போதும் ஒண்ணாவே இருப்போம்....''

''அந்த ராமுவோட அப்பா தான் நான்!''

''அப்படியா?''

''ஆமா. கூச்சப்படாம இதைச் செலவுக்கு வைச்சிக்கோ..இந்தப் பழைய காகிதங்கள் எனக்குத் தேவைப்படுது....'' என்று ஐந்து ரூபாயை சலீமின் கையில் வைத்துத் திணித்தார்.

சலீம் சென்றான். அவனைப் பார்த்துக் கொண்டே நின்றார், ராமுவின் அப்பா. அவர் மனம் நிம்மதியுடன் பெருமூச்சு விட்டது.

''வீட்டிலோ இன்றைக்குப் பட்டினி. சாப்பாடு இல்லை. கிடைத்த ஐந்து ரூபாயில், தான் மட்டும் சாப்பிட்டா, அம்மா, அப்பா என்னாவது?'' சலீமின் மனம் பேசியிருக்க வேண்டும். அதனால் தான் அவன் ஓட்டமும் நடையுமாக வீடுநோக்கிச் சென்றான் போலும்!

''அப்பா..அப்பா..இந்தாங்க!'' என்று ஐந்து ரூபாயை அவரிடம் நீட்டினான் சலீம்.

''ஐந்து ரூபாயா? யார் கொடுத்தது?'' என்று கேட்டார் இப்ராகிம்.

''பழைய பேப்பருக்கா ஐந்து ரூபா கொடுத்தாங்க..'' அவன் தாய் மும்தாஜ் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''அம்மா! இந்த ரூபாயைக் கடைக்காரன் கொடுக்கலே. ராமுவோட அப்பாதான் கொடுத்தார்.''

''யாரு? ராமுவோட அப்பாவா? ஸ்கூட்டரிலே வருவாரே. சிவப்பா, உயரமா இருப்பாரே.''

''ஆமாம்பா... அவரேதான்!''

''அவருக்கு ஏன் இந்தப் பழைய பேப்பர்? ஊம்... ஐந்து ரூபா அவர் ஏன் கொடுக்கணும்?'' இப்ராகிம் யோசனை செய்தார்.

''அப்பா! எனக்கு நேரமாகுது'' சலீம் பள்ளிக்குப் போகத் துடித்தான். இப்ராகிம், வீட்டுக்குப் பக்கத்திலிருந்த ஒரு பெட்டிக் கடையில், சில்லறை மாற்றி அவனிடம் ஒரு ரூபாய் கொடுத்து அனுப்பினார்.

உள்ளே வந்த இப்ராகிமிடம் அவன் மனைவி, ''ஆமா, அவருக்கு ஏன் இந்தப் பழைய பேப்பர்?'' மும்தாஜ் கேட்டாள்

''இப்பத்தான் எனக்கு எல்லாமே நினைவுக்கு வருது....ஒரு சமயம், சலீம் வகுப்பிலே மாணவர்களெல்லாம் கலாட்டா பண்ணினாங்களாம். அப்போ, 'போர்டு' கீழே விழுந்து உடைஞ்சிட்டுத்தாம். ஆசிரியர் வந்து விசாரிக்கிறப்போ எல்லாரும் ஒண்ணுந் தெரியாதவங்க போல 'கம்' முனு இருந்தாங்களாம்..''

''போர்டை யாரு உடைச்சது?''

''ராமுதான்!''



## உங்களுக்குத் தெரியுமா ?

1. தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார் ?
2. மத்திய கட்டட ஆராய்ச்சி நிலையம் ( CBRI ) எங்கு அமைக்கப்பட்டிருக்கிறது?
3. எந்த அதிர்வு எண்களையுடைய ஒலி அலைகளுக்கு நமது செவியின் உணர்திறன் மிகவும் அதிகமாக இருக்கிறது?
4. உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) தலைமையகம் அமைந்திருக்கும் இடம் எது?
5. பூமி எத்திசையில் தனது அச்சில் சுற்றுகிறது ?
6. தாவரங்கள் பச்சை நிறமாகத் தோற்றமளிப்பதற்குக் காரணமான பொருளின் பெயர் என்ன ?
7. சூரியனின் கோணவிட்டம் (Angular diameter) பூமியிலிருந்து காணும் பொழுது எவ்வளவு?
8. எந்தத் தீர்க்க ரேகைக்குச் சர்வதேச தேதிக்கோடு என்று பெயர்?
9. சூரியனைச் சுற்றிவரும் கோள்கள் மொத்தம் எத்தனை?
10. முதன் முதலாக டிரான்சிஸ்டரை எந்த ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்தது? (விடை அடுத்த பக்கம்)

''அப்படீன்னா ராமுவைத் தானே தண்டிக்கணும்?''

''ராமுதான் போர்டை உடைச்சான்னு எல்லாருக்கும் தெரியும். ஏன், நம்ம சலீமுக்குக் கூட தெரியும். அப்படிச்சொன்னா ராமுவை ஆசிரியர் அடிப்பாரேன்னு தான் எல்லாரும் மௌனம் சாதிச்சங்களாம்...''

''அப்புறம் என்னாச்சு?''

''அந்தப் போர்டை உடைச்சவன் நான்தான்னு நம்ம சலீம் சொன்னானாம்.....!''

''என்ன? நம்ம சலீம் ஏன் அப்படிச் சொல்லணும்? ராமு செய்த தப்பை, தன்மேல் ஏன் போட்டுக் கொள்ளணும்?''

''ராமு அவனோட நெருங்கிய நண்பன் இல்லையா? அதனாலே அவன் அடிபடறதிலே இருந்து அவனைக் காப்பாத்தி இருக்கான்''

''அப்படீன்னா?''

''அடியை, நம்ம சலீம் வாங்கிக் கிட்டானாம்....!''

''ஆமா, இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''ஒரு நாள் ராத்திரி மழையிலே நான் பஸ் ஸ்டாண்டிலே நிக்கறப்போ, ராமுவோட அப்பா ஸ்கூட்டரிலே வந்து என்னை ஏத்திக்கிட்டு வந்தாரு இல்லே.... வர்ற வழியிலே இந்தக் கதையை எல்லாம் சொன்னாரு..'' என்றார் இப்ராகிம்.

அதைக்கேட்ட அவர் மனைவி மும்தாஜ், ''அது சரி. அதுக்கும் அஞ்சு ரூபாய்க்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டாள்.

''ராமுவோட அப்பாவுக்கு நாம ஏழைங்கிறது நல்லாத் தெரியும். நம்ம பையன் சலீம் நல்ல பையனா, கெட்டிக்காரனா இருக்கிறதை ராமு மூலமா தெரிஞ்சிக் கிட்டிருக்காரு. தன்னோட மகன் செய்த தப்புக்காக, தான் தண்டனையை ஏத்துக்கிட்ட சலீமோட பெருந்தன்மையை-உண்மையான நட்பை அவர் உணர்ந்திருக்காரு. ஸ்கூட்டரிலே என்னை அழைச்சிகிட்டு வர்றப்போகூட, 'உங்க மகன் செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போறேன்'னு ஆனந்தக் கண்ணீர் வடிச்சாரு...''

''சலீம் செய்த அந்த உதவிக்குக் கைம்மாறாகத்தான் அஞ்சுரூபாய் கொடுத்தாரா?''

''சேச்சே... நான் அப்படி நினைக்கலே. அவர் உயர்ந்த மனிதர். அந்தச் சந்தர்ப்பத்திலே சலீமோட நிலையை அவர் உணர்ந்திருக்கணும். அதை அவர் 'மனுஷத் தன்மை'யோடப் பார்த்திருக்கிறாரு... இல்லேன்னா அவருக்கு ஏன் அந்தப் பழைய பேப்பர்? இவனுக்கு ஏன் அந்த அஞ்சு ரூபா...?''

## கிளிகளே! கிளிகளே!




உலகில் ஏறத்தாழ 316 வகைக் கிளி இனங்கள் உள்ளன.

இலங்கையில் உள்ள ஒரு வகைக் கிளி ( Pasittacula eupatria ) மலர்களின் இதழ்களை அலகால் வெட்டியெறிந்து உள்ளே இருக்கும் பூந்தேனை உறிஞ்சும். தேன் உறிஞ்சுவதற்கு ஏற்ற வகையில் இதன் நாக்கு அமைந்திருக்கும்.

ஆஸ்திரேலியாவில் கியா (Kea Nestar net abilis) என்ற கொடூரமான கிளிகள் வாழ்கின்றன. இவை ஊன் உண்பவை! மேய்ந்து கொண்டிருக்கும் ஆட்டின் மேல் திடீரென்று பாய்ந்து அதன் முதுகைக் கிழித்துச் சிறுநீரகங்களை உண்ணும். நியூசிலாந்தில் ஆந்தையைப் போன்ற தோற்றமுடைய கிளிகள் வாழ்கின்றன. இவற்றால் பறக்க முடியாது!

## விந்தைச் செய்திகள் :




1. ஒட்டகத்தின் முதுகு பார்ப்பதற்கு வளைந்திருப்பது போலத் தெரிகிறது. ஆனால், அதன் முதுகெலும்பு நேராகதான் உள்ளது. சதைதான் கோணலாக உள்ளது.

2. உலகில் இதுவரை 8,40,000த்துக்கும் மேல் விலங்குகள் வாழ்கின்றன எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



3. உலகில் மிகப் பெரிய தாவரம் சிமிகயா. உயரம் 117 மீட்டர்.

4. மரங்கொத்திப் பறவை எத்தகைய கடினமான மரத்தையும் தனது அலகினால் கொத்தித் தொளைத்து விடும். எப்படி என்றால் அதன் மண்டை ஓடும், அலகும் ஒரே எலும்பால் ஆனவை.



5. விலங்குகள் கண்களை மூடிக்கொண்டு தூங்கும். ஆனால், முதலை கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு தான் தூங்கும்.

## விடைகள் :



1. அலெக்சாண்டர் கிரகாம் பெல்.
2. ரூர்க்கி (Roorkee)
3. 1000 — 4000 Hz
4. ஜெனீவா
5. மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி
6. குளோரோபில் (Chlorophyl)
7. 32 நிமிடம் (32' 35''—31' 30'')
8. 180° தீர்க்கரேகை.
9. 9
10. பெல் தொலைபேசி ஆராய்ச்சிக் கூடங்கள் (U.S.A.).

நன்றி : 'கலைககதிர்'



# நூல் நயம்

**சின்ன மகிபன் குளுவ நாடகம்**

(பதிப்பாசிரியர் டாக்டர் ஏ. என். பெருமாள். வெளியிட்டோர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-600020 விலை ரூ. 5).

முத்தாண்டிப் புலவர் படைத்த 'சின்ன மகிபன் குளுவ நாடகம்' இதுவரை ஏட்டுச் சுவடியிலேயே இருந்தது. அதை அச்சு ஏற்றி ஆய்வுரை எழுதி பதிப்பித்துள்ளார் டாக்டர் ஏ. என். பெருமாள் அவர்கள்.

பள்ளு, குறவஞ்சி, நொண்டி போன்ற நாடக இனங்களைச் சேர்ந்த ஒரு நாடக வகையாகும். தமிழ்நாட்டில் பதினேழாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்துள்ள நாடக வகையில் குளுவ நாடகமும் ஒன்றாகும்.

காப்பு, தோடையம், மங்களம், தலைவன் புகழ்பாடியவாறு குளுவன் தோன்றல், குளுவன் வருதல், சித்து வித்தை கூறுதல், சிங்கன் வருதல், பறவைகள் வருதல், வேட்டையாடல், பறவைகளைப்பங்கிடல், பரிசுகள் பெறல், சிங்கன், சிங்கி சந்திப்பு, வாழி ஆகிய பன்னிரண்டு பகுதிகளைக் கொண்டு குளுவ நாடகம் அமைக்கப்படுகிறது.

ஒரு காலத்தில் சோழ நாட்டில் ஒரு பகுதியாக விளங்கி பின்னர் கோனாடு என்று அழைக்கப்பட்ட நாட்டை மிதுலை நகரிலிருந்து ஆண்ட சின்ன மகிபன் என்பவன் பேரில் அமைத்தது இந்தக் குளுவ நாடகம். வரலாற்று உண்மைகள், சமயக் கருத்துக்கள், சமுதாய அமைப்பு முறை, அரசியல் செய்திகள் நிறைந்துள்ளன. அனைத்துக்கும் மேலாக இலக்கிய நயமும், கவிதைச் சிறப்பும் பொலிந்துள்ளன.

இந்நூலின் சிறப்பு ஆங்கிலத்திலும் 14 பக்கங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. இஃது ஆராய்ச்சியாளர்களுக்குப் பெருந் துணையாக அமையும்.

சின்ன மகிபன் குளுவ நாடகத்தை இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்களின் தமிழ்த் தொண்டு பாராட்டுதலுக்கு உரியது.

—மாமூலன்

**சிந்து பாடும் சிற்றாறு :**

(ஆசிரியர்: கவிஞர் மணிமொழி, வெளியிட்டவர் : ஜெயலட்சுமி பதிப்பகம், 17/9, பீட்டர்ஸ் காலனி, சென்னை-14. விலை : ரூ. 5.00)

பன்னீர்ப் பூக்கள், கண்ணீர்ப் பூக்கள், நெஞ்சப் பூக்கள், நெருப்புப் பூக்கள், கதம்பப் பூக்கள் ஆகிய பகுதிகளின் கீழே அழகு தமிழ்க் கவிதைகள் அணிவகுக்கும் நூலிது. சமுதாயத்திற்குத் தேவையான பல்வேறுபிரச்னைகள் இதில் இனிய கவிதைகளாலே நெருடப்படுகின்றன.

சிற்றாறு அல்ல; இந்நூல், செந்தமிழின் நலம்பாடும் பேராறு ஆகும்.

—பி.எல்.ஆர்.



## சாக்ரட்டீஸ் அளித்த பதில்

சாகரட்டீஸ் தெருவில் சென்று கொண்டிருக்கும்போது ஒருவன் அவரிடம் வந்து, ''சாக்ரட்டீஸ் வீட்டிற்குச் செல்ல வழி சொல்லுங்கள்'' என்று கேட்டான்.

''இப்படியே தான் செல்ல வேண்டும்'' என்று வழியைக் காட்டினார் சாக்ரட்டீஸ்.

அந்த மனிதன் அவர் கூறிய வழியில் சென்று அங்கு போய், சாக்ரட்டீஸைப் பற்றிக் கேட்டான்.

''சாக்ரட்டீஸ் வெளியே சென்றிருக்கிறார்'' என்று கூறியதும், கொஞ்ச நேரம் காத்திருந்தார். சிறிது நேரம் கழிதது சாகரட்டீஸ் திரும்பி வந்தார். முன்பார்த்தவரே மீண்டும் வருவதைக் கண்டதும் அவன் கோபம் கொண்டான்.

''வழியிலே நான் உங்களைச் சந்தித்தேன். ஏன் நான்தான் சாக்ரட்டீஸ் என்று சொல்லவில்லை?'' என்று கேட்டான்.

''நீ சாக்ரட்டீஸைப் பற்றிக் கேட்கவில்லையே! அவர் வீட்டைப் பற்றித் தானே கேட்டாய்? நான் உன் கேள்விக்குத் தக்க பதில் தான் சொன்னேன்'' என்றார் சாக்ரட்டீஸ்.

—பி.எம். இப்ராஹிம், இலப்பவிளை.

சிகரெட் குடித்தல் உடல் நலத்திற்குத் தீங்கானது

STATUTORY WARNING: CIGARETTE SMOKING IS INJURIOUS TO HEALTH




# சிகரெட்: நம் வாழ்நாளைக் குறைக்கிறது!

''ஒரு சிகரெட் பிடிப்பதால், அதைக் குடிப்பவரின் வாழ்நாளில் 14 நிமிடங்கள் குறைகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கின்றனர்'' என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் திரு எச்.வி.ஹண்டே அவர்கள் தெரிவித்துள்ளார்.

உலக நல்வாழ்வு நாளையொட்டி, சென்னை மருத்துவக் கல்லூரியின் சமூக மருத்துவப் பிரிவு மற்றும் மத்திய அரசு கள விளம்பரப் பிரிவின் தமிழ்நாட்டுப் பிரிவு ஆகியவை சேர்ந்து ஏற்பாடு செய்திருந்த ''புகை பிடித்தலா? அல்லது உடல் நலமா?'' என்ற கருத்தரங்கு ஜூன் 30ஆம் நாள் நடந்தது.

சென்னை அரசினர் பொது மருத்துவமனை, சதாசிவம் அரங்கில் நடந்த இக்கருத்தரங்கிற்கு, மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எஸ். ஞானதேசிகன் அவர்கள் தலைமை வகித்தார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

**தீவிரப் பிரச்சாரம்**

''நுரையீரலில் புற்றுநோய் வந்து மரணமடைபவர்களில் 90 சதவீதம் பேரும், கடும் ஆஸ்த்மா, மூச்சுத் திணறல் போன்ற நோய்களால் இறப்பவர்களில் 75 சதவீதம் பேரும் புகைபிடிப்பவர்கள் என்பதைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஆகவே, புகைபிடித்தலால் ஏற்படும் கேடுகள் பற்றி மக்களிடம் தீவிர பிரச்சாரம் செய்யப்பட்டு, அப்பழக்கத்தை அவர்கள் தாங்களாகக் கைவிடும்படிச் செய்ய வேண்டும்.



''ஒருவருக்கு ஏற்படும் மன உளைச்சல், சஞ்சலம் ஆகியவை புகைபிடிப்பதால் குறைகிறது என்று, புகைபிடிப்பவர்கள் கூறுவது உண்மைதானா என்பதை மருத்துவ நிபுணர்கள் ஆராய்ந்து அதுபற்றிய உண்மையைப் பொது மக்களுக்குக் கூற வேண்டும்.

**14 நிமிடங்கள்:**

''ஒரு சிகரெட் பிடிப்பதால், அதைக் குடிப்பவரின் வாழ்நாளில் 14 நிமிடங்கள் குறைகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கின்றனர். இதை மக்களிடம் பிரச்சாரம் செய்து அவர்கள் நிறைய புகைப்பிடிப்பதைக் குறைக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

''புகை பிடிப்பதை முழுவதும் நிறுத்த முடியாதவர்கள், சிகரெட்டை கடைசி வரையில் குடிக்காமல், பாதியிலேயே தூக்கி எறிவதன் மூலம் உடலில் 'நிகோடின்' போன்ற விஷச்சத்து சேருவதைக் குறைக்க முடியும்.

**மதுவை விட.....**

''சிகரெட்டிலுள்ள புகையிலையுடன், அதைச் சுற்றியுள்ள காகிதத்தின் மூலம் ஏற்படும் கெடுதல்களும் மனிதனின் உடல் நலத்தைப் பாதிக்கிறது.

''மது அருந்துவதை விட, புகை பிடிப்பது அதிகக் கெடுதல்கள் உண்டாக்குவதை மக்கள் உணரும்படி செய்ய வேண்டும். அதற்கு இது போன்ற கருத்தரங்குகள் பெரிதும் உதவும்.''

**பீடிகளின் மீதும்.....**

கருத்தரங்கில் சிறப்புரை ஆற்றிய தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன (சிப்காட்) தலைவரும், முன்னாள் சுகாதாரத்துறைச் செயலாளருமான திரு பி. முராரி அவர்கள், ''சிகரெட் பாக்கெட்டுகளில் போடப்படும் எச்சரிக்கை, பீடிகள் மீது இல்லை'' என்பதைச் சுட்டிக்காட்டினார்.

**மாவட்டந்தோறும்....**

புகைபிடித்தலால் ஏற்படும் தீங்குகள் குறித்து, மாவட்ட அளவில் பிரச்சாரம் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

—பி. வி. கிரி.

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

■ **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**

இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.

■ **கிராம ஏற்புத் திட்டம்:**

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.

■ **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**

விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.

■ **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**

நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111

# குடிசைக்கொரு மின் விளக்கு

அட்டைப் படக் கட்டுரை

**டி.கே.ஏ. திவான் முகமது, ஐ.ஏ.எஸ்.,**
**செயலாளர்,**
**தமிழ்நாடு மின்சார வாரியம்.**

மின்சக்தி உற்பத்தியிலும், மின் வழங்கு முறைகளிலும் புதிய முயற்சிகளை மேற்கொண்டு மற்ற மாநில மின்சார வாரியங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்ற பெருமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உண்டு.

சோதனைத் திட்டங்கள் பல இங்கு உருவாக்கப்பட்டு செயல் முறைக்கு வந்துள்ளன. கிராமப்புற மின் மயமாக்கும் திட்டம், தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கு திட்டம், தரையடி நீரைவெளிக்கொணர்ந்து பசுமைப் புரட்சிக்கு அடித்தளம் அமைத்த திட்டம், வேளாண்மை விசையேற்றங்களுக்கு முன்னுரிமை ஈந்து நாட்டில் பட்டினிப் பேயை விரட்டியடிக்க அடிகோலிய திட்டம், சிறு தொழில் முயற்சியாளருக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சக்தி வழங்கிய திட்டம் போன்ற எண்ணிலடங்கா முன்னோடித் திட்டங்களைத் தமிழ்நாடு மின்வாரியம் உருவாக்கிச் செயல்படுத்துவதில் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. இவை அத்தனையும் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியையும், வேளாண்மைத் துறையில் நமது மாநிலத்தைத் தன்னிறைவு பெறச் செய்யவும் பெருமளவுக்கு உதவியுள்ளன என்பதை யாராலும் மறுக்க முடியாது.

மின்சக்தி உற்பத்தியிலும் தமிழ்நாடு நீர்வளம் அனைத்தையும் முழுமையாகப் பயன்படுத்திவிட்ட மாநிலம் என்ற பெருமையைப் பெற்றுவிட்டது. ஆகவே, அனல் மின் நிலையங்களை அமைக்கும் முயற்சியில் தமிழ்நாடு மின்சார வாரியம் தற்பொழுது தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன் முறையாக நமது மாநிலத்தில் தான் கடல் நீரிலிருந்து கதிரவனின் ஆற்றலைக் கொர்ண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதும் தமிழக மின்சார வாரியத்திற்குக் கிடைக்கவிருக்கிற மற்றொரு தனிச் சிறப்பாகும்.

## எட்டாக் கனி

இத்தனைத் திட்டங்களும், முயற்சிகளும், தமிழகத்தைத் தொழில் மயமாக்கவும், உணவு உற்பத்தித் துறையில் தன்னிறைவு பெறச் செய்யவும் பேருதவி புரிந்துள்ளன. ஆனால், இத்தனை முன்னேற்றத் திட்டங்கள் செயலாக்கப்பட்ட பிறகும், நமது நாடு விடுதலை பெற்று முப்பதாண்டுகளுக்கு மேலாகியும், குடிசைவாழ் மக்களிடையே மின்சாரத்தைப் பயன்படுத்துவதில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

தமிழகத்தில் இன்றைக்குச் சற்றேறக்குறைய எழுபத்தியோராண்டுகட்கு முன்னர் 1908ஆம் ஆண்டில் உதகை மலை மேல் மின்சார உற்பத்தி துவங்கிற்று என்பது வரலாறு. மலை மேல் உயரத்தில் உற்பத்தியாவதாலோ என்னவோ அன்றுதொட்டு இன்றைக்குச் சில திங்கள் முன்வரை வாழ்க்கையில் உயர் மட்டத்திலிருப்போர்க்கே மின்சாரம் பயன்பட்டு வந்ததேயன்றி எளிய குடிசைவாழ் மக்கட்கு அது எட்டாக் கனியாகவே இருந்து வந்ததை யாரும் மறுத்திட இயலாது.

இருபதாம் நூற்றாண்டில் மனித இனத்தின் மூச்சாக மாறிவிட்ட மின்சாரத்தின் பயன்களை ஏழை எளிய மக்கள் நன்கு புரிந்து கொண்டுவிட்டனர். மின்சக்தியின் பயன்களை ஏழை எளிய கிராமப்புற மக்கள் துய்க்க முடியாத அவலநிலை இருந்து வந்தது. அவர்கள் சக்திக்கு எட்டாத உயரத்தில் மின்சக்தி இருந்து வந்தது. மின் இணைப்புப் பெற சாதாரணமாக ஆகும் செலவு குடிசைவாழ் ஏழை எளிய மக்களால் தாங்கக்கூடியதல்ல. எனவே, பொருட்செலவிற்கு அஞ்சி மண்ணெண்ணெய் நிரப்பிய காடா விளக்கின் குறையொளியிலேயே, குறைந்த ஒளி கண்ணுக்கும் கருத்துக்கும் கேடு விளைவிக்கும் என்பதையும் பொருட்படுத்தாது கிராமப்புற ஏழை எளிய மக்கள் தம் வாழ்வையும் தம் பரம்பரையின் வாழ்வையும் முடக்கியே வாழ்ந்து வர வேண்டியதாயிற்று. மின்சாரத்தின் அதிக அளவு உற்பத்தியால், நாட்டில் பெருகிய தொழில் வளம் குடிசைவாழ் மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தந்ததுடன் நின்றுவிட்டது. ஆனால், மின்சாரத்தினைத் தங்கள் இல்லங்களிலே பயன்படுத்தும் அளவுக்கு அவர்களுடைய பொருளாதார நிலை வளரவும் இல்லை. தங்கள் குடிசைக்கு ஒளி வெள்ளம் வழங்கக்கூடிய மின்கம்பித் தொடர் தங்கள் குடிசைகளுக்கு மேல் ஓடிக்கொண்டிருந்த போதும், தங்கள் குடிசைகள் இன்னும் இருண்டே கிடக்கின்றனவே என்று அண்ணாந்து



நாம் சுதந்திரம் பெற்றது டன் ஒரு பயணம் முடிந்தது. ஆனால் மற்றொரு பயணம் தொடங்கி விட்டது. வறுமையை ஒழிப்பதற்காகவும், நல்வாழ்வுக்கு உகந்த சமூக, பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்காகவும் தொடங்கியுள்ள பயணமே இது. இதில் நாம் வெற்றி கண்டாக வேண்டும்!

—நேரு.

பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த ஏழைகள் வாழ்வில் மின்சாரம் எட்டாப்பொருளாகவே இருந்து வந்தது!

குடிசைவாழ் மக்களின் இந்த இரங்கத் தக்க நிலைக்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. குடிசைக்குள் மின்சாரம் வர வேண்டுமானால் 'ஒயரிங்'குக்கு ஆகும் செலவு, மாதா மாதம் செலுத்த வேண்டிய மின்கட்டணம், எல்லாவற்றிற்கும் மேல் மின்சாரத்தைப் பெற நடைமுறையில் உள்ள சில சிக்கல்கள் இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து கிராமப்புற குடிசைவாழ் ஏழைகளைப் பொறுத்தவரை மின்சாரம் என்பதை எட்டாக் கனியாகவே இருக்க வைத்து அவர்களை ஏங்க வைத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாகக் கல்வியறிவைப் பெறவேண்டும் என்ற ஆவலும், ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி உழைத்துப் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பும், உலக அறிவைப் பெருக்கிக் கொள்ள நாளேடுகளையும் அறிவியல் நூல்களையும் படிக்க வேண்டும் என்ற ஆவலும்கிராமப்புற இளைஞர்களிடையேயும், ஊரிலிருந்து கடிதம் வந்தால் படிக்கும்அளவுக்காகவாவதுகல்வியறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் முதியோர்களிடையேயும் உருவாகி வருகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆயினும், கதிரவன் மறைந்ததும் குடிசைக்குள் சூழ்ந்துவிடும் இருட்களம் அவர்களைச் செயலற்றவர்களாகவே இருக்க வைத்து, முன்னேறத் துடிக்கும் அவர்களுக்கு ஒரு முட்டுக்கட்டையாக இருந்து வந்துள்ளது.

**குடிசைக்கோர் மின்விளக்கு!**

நாடு விடுதலைப் பெற்று முப்பதாண்டுகளுக்கு மேலாகியும், ஐந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகும் மின்சார உற்பத்தி பல மடங்காகப் பெருகியும் கூட, குடிசைவாழ் மக்களைப் பொறுத்தவரை மின் சக்தி என்பது எட்டாக்கனியாகவே இருக்கின்ற இரங்கத்தக்க நிலை நீடித்து நமது சாதனைகளுக்கு ஒரு பெரும் எதிர் சவாலாகவே இருந்து வந்துள்ளது.

இவ்வாறு இரங்கத்தக்க வாழ்வினை நடத்தி வரும் கிராமப்புற ஏழை எளிய குடிசைவாழ் மக்கள் நல்வாழ்வுக்காக, அவர்களுக்கும் மின்சாரத்திற்கும் இடையே உள்ள பொருள்முடைத்தடையை மோதியெறிந்து அவர்களுடைய பொருளாதார வீச்சிற்குள் மின்சாரத்தை எட்டவைக்கும் நோக்குடன் அறிமுகப்படுத்தியுள்ள அவர்களுடைய இல்லங்களில் மட்டுமல்லாமல் - இதயங்களிலும் ஒளிவிளக்கேற்றி வைத்துள்ள திட்டமே ''குடிசைக்கொரு மின் விளக்கு'' எனும் திட்டம்!

மீட்டர் இல்லாமல் கிராமங்களில் குடிசைகளுக்கும் மின் இணைப்பு வழங்குவதாக 1979-80ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. 1979 ஆகஸ்ட் திங்கள் முதற் கொண்டே இத்திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி 200 சதுர அடி பரப்பளவிற்கு மேற்படாத வாழிடம் கொண்ட மண் சுவரான கூரைவேய்ந்த கிராமப்புற எளிய குடிசைகள் பயனடையும். தற்போதைய புள்ளி விவரப்படி, ஏறத்தாழ 22 இலட்சம் குடிசைகள் தமிழகத்தில் மேற்சொன்ன விதிகளின்படி மின்சாரம் பெறத் தகுதி பெற்றவையாகின்றன. தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தின்கீழ், இது வரையில் சுமார் இரண்டு இலட்சம் குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

ஒரு குடிசைக்கு மின் இணைப்புத் தர தமிழ்நாடு மின்வாரியத்திற்குச் சராசரியாக ரூ. 200 செலவானாலும், குடிசைவாசிகளிடம் ரூ. 10 மட்டுமே குடிசையில் செய்யப்படும் ஒயரிங்கிற்காகவும், ரூ. 2.50 பயன்படுத்தப் போகும் மின்சாரத்திற்குப் பிணைத் தொகையாகவும், இரண்டும் சேர்ந்து ரூ. 12.50 மட்டுமே வசூலிக்கப்படும். குறிப்பிட்ட மனுவுடன் மேற்கூறிய கட்டணம் ரூ. 12.50 செலுத்தி விண்ணப்பம் செய்தால் மின் வாரியமே குடிசையில் ஒயரிங் செய்து, ஒரு சுவிட்சும், ஒரு பல்பும் (40 வாட்டு) பொருத்தித் தந்து மின் இணைப்பு வழங்கும். முதல் பல்பு மின்வாரியத்தால் இலவசமாக அளிக்கப்படும்.

சாதாரணமாக மின்வாரியம் எந்த மின் இணைப்பிலும் பயன் படுத்தப்படும் மின்சாரத்தின் அளவு தெரிய ஒரு மீட்டரைப் பொருத்தி மீட்டர் பதிவுப்படி அந்தந்த மின் இணைப்பிற்கேற்ற மின் கட்டண விகிதப்படி மின் கட்டணம் வசூலிக்கும். இதுதான் நடைமுறை. ஆயின் குடிசைகட்கு அளிக்கும் மின் இணைப்பில் மீட்டர்கள் பொருத்தப்படுவதில்லை. பதிலாக, மாதந்தோறும் 5-ஆம் தேதிக்குள் முன் பணமாக ரூ. 2.50ஐ மட்டுமே மின் கட்டணமாக குடிசை வாசி செலுத்தினால் போதுமானது.

**கற்பகத்தரு!**

''குடிசைக்கோர் மின் விளக்கு' திட்டம் எண்ணற்ற குடிசைவாழ் மக்களின் வாழ்வில் நல்லதொரு ஏற்றத்தினை நிச்சயம் ஏற்படுத்தித் தரும். அவர்களின் வாழ்க்கையை வளப்படுத்தி இரவில் கிடைக்கும் ஓய்வு நேரத்தைப் படிப்பதிலும் எழுதுவதிலும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று துடிக்கும் குடிசை வாழ் மக்களுக்கு இந்தத் திட்டம் ஒரு கற்பகத் தரு! பத்திரிகை படித்து நாட்டு வளப்பத்தையும் உலக அறிவையும் பெற ஆவலாக இருப்பவர்களுக்கு இது நல்ல வாய்ப்பு. நல்ல நூல்களைப் படித்து அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பம். தையல், இசை மற்றும் வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய தொழிலியல் கலைகள் போன்றவற்றைக் கற்றுக் கொண்டுவாழ்க்கையில்முன்னேற வேண்டும் என்று துடிப்பவர்கள் தங்கள் வேட்கையைத் தீர்த்துக் கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு. இன்னும் அதிகமாக உழைத்துத் தங்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று கனவு காண்கின்ற கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு குடிசைக்கோர் மின் விளக்குத் திட்டம்ஒரு சிறந்த சமய சஞ்சீவி!

மின்விளக்கு வெளிச்சத்தையே பார்க்க முடியாத குடிசைகளில் மின் விளக்கை ஏற்றி வைத்து, சமுதாயத்தில் அடிமட்டத்தில் உழன்று கொண்டிருக்கும் மக்களின் வாழ்வில் ஒளியேற்ற, தமிழக அரசினால் உருவாக்கப்பட்ட திட்டமே, குடிசைகளுக்கு மின் வசதித் திட்டம்!

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

[6-7-1980 முதல் 20-7-1980 முடிய]

## 6—7—80

தமிழகத்தில் உள்ள எல்லா பாலி டெக்னிக் பள்ளிகளிலும் பகுதி நேர டிப்ளமா வகுப்புகளை ஆரம்பிப்பது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் மேலவையில் அறிவித்தார்.

## 7—7—80

60 வயது முடிந்த கிராம அதிகாரிகளை மறுபடியும் வேலைக்கு எடுத்துக் கொள்வது, மறு உத்தரவுவரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

## 8—7—80

திண்டிவனம் அருகே லாரி விபத்தினால் குளோரின் சிலிண்டர் வெடித்து இறந்த 14 பேரின் குடும்பத்தினருக்குத் தலா ஆயிரம் ரூபாய், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

## 9—7—80

சரக்குகளை ஏற்றிச் செல்லும் லாரிகளில் பயணிகளை ஏற்றிச் செல்வதைத் தடுக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்கும் வகையில், போக்குவரத்துக் கட்டுப்பாடு விதிகளைச் செம்மையாக அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்.

## 10—7—80

அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்க வேண்டும் என்னும் நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய நெறிமுறைக் கோட்பாட்டுக்கிணங்க ஒரு சமூகச் சீர்திருத்த நடவடிக்கையாக, இந்து சமயத்தைச் சேர்ந்தோரில் தகுதி வாய்ந்தோரைச் சமய உட்பிரிவு அல்லது இனம் ஆகியவற்றைக் கருதிப் பாராமல் இந்து சமய நிறுவனங்களில் அர்ச்சகர்களாக, பூசாரிகளாக அல்லது ஏனைய உள்துறைப் பணியாளர்களாக நியமிக்க அரசு விழைகிறது.

இந்து கோயில்களில் அர்ச்சகர்களை நியமிப்பது தொடர்பாக உச்ச நீதிமன்றக் குறிப்புரைகளைக் கருத்தில் கொண்டு மேற்சொன்ன நோக்கத்தைச் செயல்படுத்துவதற்குரிய வழிவகைகளைக் காணும்வகையில் வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள் முதலியனவற்றில் நன்கு புலமையுள்ள வல்லுநர் குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது என மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

குமரிமுனையில் ரூ. 90 இலட்சம் செலவில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகவும், ரூ. 94 இலட்சம் செலவில் தந்தை பெரியார் பெயரில் பெரிய அரங்கமும், அறிவியல் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கவும், காஞ்சியில் பேரறிஞர் அண்ணாவின் இல்லத்தை நினைவகமாக்கவும் அரசு முடிவெடுத்துள்ளது என்று மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் சட்ட மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

## 11—7—80

வனத்துறை ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்கப்படுகிறது. 400 தொழிலாளர்கள் நிரந்தர ஊழியர்கள் ஆக்கப்படுகிறார்கள் என்று மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

தனி நஞ்சைத் தீர்வை, தனி தண்ணீர் மேல்வரி ஆகியவற்றை அரசு ரத்து செய்துள்ளது. 1976 ஜூலை முதற் கொண்டு இந்த ரத்து அமலுக்கு வருகிறது.

## 12—7--80

தமிழகத்திலுள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளைச் சேர்ந்த 95 ஆயிரம் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

1977-78 லிருந்து ஆசிரியர்களின் பிள்ளைகளுக்குத் தொழில் படிப்பு படிக்க படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. பணியிலுள்ள, ஓய்வு பெற்ற மற்றும் இறந்துவிட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இப்படிப்புதவித் தொகைகள் கிட்டும். பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் ஆகிய படிப்புகளுக்கு மொத்தம் ஆண்டுக்கு 80 படிப்புதவித் தொகைகள் புதிதாக அளிக்கப்படுகின்றன என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் சட்ட மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

## 14—7—80

தமிழக விவசாயிகள் பயன் பெற, அவர்களுக்கு 145 கோடி ரூபாய் புதிய கடன் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது என்று மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

## 15—7—80

கிராம வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், வீடு கட்டிக் கொள்ள அரிசனங்களுக்கு ஜூலை 1-ந் தேதி முதல் ஆயிரம் ரூபாய் மான்யம் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

திறந்தவெளிச் சிறைகள், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகெங்கை அருகில் முத்துப்பட்டியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் சிங்கப்பட்டியிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் வேலப்பாக்கம் அரசு விதைப் பண்ணையிலும், செங்கற்பட்டு மாவட்டம் வேங்கட மங்கலத்திலும் அமைத்திட செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன என்று மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் சட்ட மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்களின் மாநாடு 14—7—80 அன்று நடந்தது. மாநாட்டில் மேலும் நூறு ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டத்தை அமல் படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி, பள்ளிக்கூடம், சாலைகள், சுகாதார வசதிகள், வீடுகளுக்கு மின்வசதி இவைகளில் தன்னிறைவு பெறுவதற்கு ஏற்றவாறு திட்டங்களைச் செயல்படுத்துவதாகும் இத் திட்டம். கடந்த ஆண்டில் 69 ஊராட்சி ஒன்றியங்களில் இந்தத் திட்டம் செயல் படுத்தப்பட்டது.

## 16—7—80

தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் சார்பில் தாவர எண்ணெய்த் தொழிற்சாலை, பழங்கள் பக்குவப்படுத்தும் ஆலை, சவ்வரிசி ஆலை போன்ற புதிய தொழிற்சாலைகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசு பணிபுரியும் கணவன், மனைவி இருவரும் சேர்ந்து தங்களுக்குச் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ள ஒரே கடனைக் கொடுக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

## 17—7—80

தமிழ்நாட்டில் மின்சார வெட்டு 17—7—80 முதல் அடியோடு ரத்து செய்யப்படுகிறது என்று மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

கூட்டுறவு அமைப்பின் கீழ் வராத நெசவாளர்களுக்கு நடப்பாண்டில் இரண்டரைக் கோடிரூபாய்கடன் வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

செங்கை மாவட்டம் விழுதமங்கலம் கிராமத்தில் 273 நிலமற்ற ஏழை மக்களுக்கு 194 ஏக்கர் நிலத்திற்கான நிலப் பட்டாக்களை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் வழங்கினார்.

இம்மாவட்டத்திலுள்ள வீராண குன்னம் கிராமத்தில், 150 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. இதற்காக ஒரு நடிசைக்கு 200 ரூபாய் வீதம் 30 ஆயிரம் ரூபாயை அரசுசெலவிட்டுள்ளது.

## 18—7—80

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளைப் பதனிடுவதற்காக பவானி சாகரில் ரூ. 6 கோடி செலவில் ஒரு பதனிடும் ஆலை நிறுவப்படுகிறது.

நாள்தோறும், ஒரு இலட்சம் மீட்டர் துணி இங்குப் பதனிடப்படும் என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ். என். ராஜேந்திரன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

வீட்டுத் தலைவரை இழந்து, வறுமையில் வாடும் குடும்பம் ஒன்றுக்கு ‘முதலமைச்சர் பொது நிவாரண நிதி’யில் இருந்து 5 ஆயிரம் ரூபாய் வழங்க மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

நெசவாளர் இறந்து போனால் அவர்கள் குடும்பம் உதவியின்றித் தவிப்பதைத் தடுக்க தமிழக அரசு திட்டம் வகுத்துள்ளது. இறந்து போகும் நெசவாளர் குடும்பத்துக்கு 3 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். இது 1-3-80 முதல் அமல் நடத்தப்படும் என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ். என். ராஜேந்திரன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

## 19—7—80

1980-81-ம் ஆண்டில் ஈரோடு மற்றும் செங்கல்பட்டு ஆகிய இரு பத்திரப் பதிவு மாவட்டங்களை இரண்டாகப் பிரிப்பதன் மூலம், மேலும் இரண்டு பத்திரப் பதிவு மாவட்டங்களையும், மேலும் கீழ்க்கண்ட 15 இடங்களில் சார் பதிவாளர் அலுவலகங்களையும் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

(1) பேட்டை, (2) விக்கிரமசிங்கபுரம், (3) பேரம்பாக்கம், (4) வாசுதேவநல்லூர், (5) சூலகிரி, (6) திங்களூர், (7) மேட்டூர் (8) ஒடுக்கத்தூர், (9) திருச்சிற்றம்பலம், (10) வடசேரி; (11) அவலூர்ப்பேட்டை, (12) திருவேங்கடம், (13) கடலாடி, (14) உறையூர், (15) தெப்பக்

குளம் என மாண்புமிகு ஊரக-தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார்.

'சென்னை நகரில் உள்ள மொத்தம் 150 வட்டங்களில், வட்ட வாரியாகக் கூட்டுறவு வாடிக்கையாளர் சங்கத்திடம் பால் விநியோகம் ஒப்படைக்கப்படும். இந்த ஏற்பாட்டைப் மேற்பார்வையிட ஒரு தனி அதிகாரி நியமிக்கப்படுவார்.

இந்த விநியோக முறையிலும் ஏதாவது குறைபாடுகள், முறைகேடுகள் ஆகியவை இருந்தால் மாவட்டக் காவல் துறை அலுவலர் தலைமையில் கண்காணிப்புப் பிரிவு ஏற்படுத்துவது பற்றி அரசு முடிவெடுக்கும்.

தமிழகத்தைப் பொறுத்த மட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் 60 சதவிகிதம்பேர் இருக்கிறார்கள். 10 பேருக்கு ஒருவர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்த ஆண்டில் 17 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

கிராமப்புற வேலை வாய்ப்பை உருவாக்குவதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறோம். கடந்த ஆண்டில் 2 இலட்சத்து 33 ஆயிரம் பேருக்கு வேலை அளித்திருக்கிறோம். இந்த ஆண்டில் 2 இலட்சத்து 65 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கத் திட்டமிட்டிருக்கிறோம்.

தமிழகத்தில், மாவட்டத் தொழில் மையங்கள் நல்ல நிலையில் உள்ளதாக, மத்திய அரசின் சிறுதொழில் பிரிவு நடத்தும் ஒரு வெளியீட்டில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.'' என்று மாண்புமிகு ஊரக-தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

**20—7—80**

'நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி நகர்' என்று சென்னை லாயிட்சு காலனிக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதன்படி இனிமேல் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி நகர் என்று இது அழைக்கப்படும்.

'1981-82-ல் நடைபெற உள்ள மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவை ஒட்டி, பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் வகையில் ஒலி-ஒளி காட்சி நடத்தப்படும்' என்று மாண்புமிகு செய்தி — அறநிலைத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தஞ்சையில் அறிவித்தார்கள்.

# நச்சுச் செடியை ஒழிப்போம்!



தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் சில இடங்களிலும், மற்ற நகரங்களிலும், ஆகாயக் குழித்தாமரை என்னும் ஒருவகை நச்சுச் செடி செழிப்பாக வளர்ந்து வருகிறது என்றும், அதனைத் தொட்டால் மக்களுக்குத் தோல் நோய் மற்றும் பலவித எதிர்விளைவுகள் உண்டாகும் என்றும், அரசின் கவனத்திற்குச் செய்தி வந்துள்ளது.

இவ்விதச் செடி எங்கு தென்பட்டாலும் உடனடியாக அதை ஒழிக்க நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கும் தக்க அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. மற்றும் நகராட்சி அலுவலர்கள், வட்டார அலுவலர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள் ஆகியோரின் உதவியைக் கொண்டு இப்பணியை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நச்சுச் செடியை அடையாளம் கண்டுபிடிப்பதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தக்க உதவி புரியும்படி கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தையும் அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

எனவே, இச்செடி எங்கு கண்டுபிடிக்கப்பட்டாலும் அதனைத் தொடாமல் இருக்கும்படி பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அது இருக்கும் இடத்தை உள்ளாட்சி ஆணையர்களுக்கும், சுகாதார அதிகாரிகளுக்கும் தெரிவித்தால் அதை அறவே ஒழிப்பதற்குரிய நடவடிக்கைகளை அவர்கள் உடனடியாக மேற்கொள்வார்கள்.

# கீரையோ கீரை!

திருமதி ஏ. சுசீலா திருமாறன்,
உதவிப் பேராசிரியை,
உணவு நுண்ணியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம், கோவை.



வாழ்வின் பல்வேறு பருவங்களிலும் நிலைகளிலும் உள்ள மக்களின் வயது, தொழில், உடல்நிலை என்பவற்றிற்கேற்ப உணவுச்சத்துக்கள் தேவைப்படும். உணவுகளை . அவற்றின் செயல்களுக்கேற்ப—

1. சக்தி தரும் உணவுகள்: அதாவது கலோரி நிறைந்தவை.

2. உடலைக் கட்டும் உணவுகள்: புரதச்சத்து நிறைந்தவை.

3. பாதுகாப்பும் -கண்காணிப்பும் அளிக்கும் உணவுகள்.

அதாவது கால்சியம், இரும்புச் சத்து போன்ற தாது உப்புக்களையும், வைட்டமின் ஏ.பி. பி.2, சி போன்ற உயிர்ச் சத்துக்களையும் அளிக்கும் உணவுகள் என்று பிரிக்கலாம்.

இப் பாதுகாப்பு உணவுகள், நம்மை நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கும், ஆரோக்கியத்தின் உச்ச நிலையில் வைத்துக் கொள்வதற்கும், உடலின் பல அங்கங்களும் பல பகுதிகளும் தத்தம் தொழில்களைச் சரிவரச் செய்ய கண்காணிப்பதற்குமே உதவுகின்றன.

நமது வயது, தொழில், உடல் நிலை ஆகியவற்றிற்கேற்ப கலோரி, புரதச் சத்துக்களுடன், தாது உப்புக்களான கால்சியம் 1 முதல் 2 கிராமும், இரும்புச் சத்து 10முதல் 30மில்லிகிராமும், உயிர்ச் சத்துக்களான வைட்டமின் 'ஏ' 3000 இண்டர்நேஷனல் யூனிட்டும், பி1, பி2 எனும் உயிர்ச்சத்துக்கள் 0.5 முதல் 2.00 மில்லி கிராமும், உயிர்ச் சத்து 'சி' 30 முதல் 50 மில்லி கிராம் வரையும் தேவைப்படுகிறது.

இத் தாது உப்புக்களையும், உயிர்ச் சத்துக்களையும் அளிக்கக் கூடிய உணவுகள் பலஇருப்பினும், பசுங்கீரைகளில் இவை மிகுந்து காணப்படுகின்றன. முன்பு சொன்ன அளவுகளில் நமக்குத் தேவையான தாது உப்புக்களையும், உயிர்ச் சத்துக்களையும் பெற, 1 முதல் 3 வயது வரை: 50 கிராமும், 4 முதல் 9 வயது வரை: 75 கிராமும், 10 முதல் 18 வயது வரை: 100 லிருந்து 150 கிராம் வரையும், பெரியவர்களுக்கு: 125 கிராமும் தேவை.

ஏதாவது ஒரு கீரையையோ, அல்லது கலவைக் கீரைகளையோ அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். பசுங்கீரைகள் சத்துள்ள உணவு மட்டும் அன்று, சாத்வீகஉணவும்கூட. நம் நாட்டில் கீரைகளுக்குப் பஞ்சமே இல்லை. இக்கீரை வகைகளை நமது அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை சற்று நோக்குவோம்.

தாது உப்புக்களான, கால்சியம் நமது உடலில் எலும்பு, பல் வளர்ச்சிக்கும், இரத்தம் உறைவதற்கும் தேவையாகிறது. இரும்புச்சத்தும் சரியான இரத்த ஓட்டத்திற்கும், இரத்தச் சிவப்பு அணுக்கள், ஹிமோகுளோபின் ஆகியவற்றிற்கும் அவசியமாகிறது. சாதாரணமாக ஒவ்வொரு 100 மில்லி லிட்டர் இரத்தத்திலும் 13 முதல் 14 கிராம் வரை ஹிமோகுளோபின் அடங்கியுள்ளது. ஒருவருக்கு 100 மில்லி லிட்டர் இரத்தத்தில் 11லிருந்து 12 கிராம் அளவிற்கும் முறைவாக ஹிமோகுளோபின் இருந்தால், அந்த மனிதருக்குச்சோகை (அனீமியா) ஏற்பட்டிருக்கிறது எனலாம்.

இரும்புச்சத்து', போலிக் அமிலச் சத்து, வைட்டமின்பி.12, வைட்டமின் 'சி' போன்ற சத்துக்கள் உணவிலிருந்து போதுமான அளவுகளில் கிடைக்காவிடில் நமக்கு இரத்த சோகை ஏற்படுகிறது.

## இரத்த சோகைக்கான சில பொதுவான காரணங்கள்

1. பசுங்கீரைகள், காய்கறிகள் போன்றவை நமக்குப் போதிய அளவு கிடைக்காவிடில் இரத்த சோகை ஏற்படலாம்.

2. பசுங்கீரை வகைகள் மலிவானவை. உயிர்ச் சத்துக்களும், தாது உப்புக்களும் நிறைந்தவை. ஆனால், பலர் இவற்றைச் சாப்பிடுவதில்லை.

இது தவிர வயிற்றில் கொக்கிப் புழுக்கள் இருந்தாலோ, மலேரியாவால் பீடிக்கப்பட்டாலோ, ஒரு தாய்க்கு அடுத்

தடுத்து, குறைவான இடைவெளியில் குழந்தை பிறந்திருந்தாலும், பிரசவத்தின்போது இரத்தத்தை அதிக அளவில் இழந்து விடுவதாலும் இரத்த சோகை ஏற்படுகிறது.

**இரத்த சோகையிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி?**

இரத்த சோகையைத் தடுப்பதற்கு, இரும்புச்சத்து நிறைந்த உணவைச் சாப்பிட வேண்டும். பசுங்கீரைகள், பருப்புகள், காய்கறிகள், உலர்பழங்கள், இறைச்சி, முட்டை, ஈரல் போன்றவற்றில் ஏராளமான இரும்புச்சத்து இருக்கிறது.

ஆனால், பசுங்கீரைகளில் பெருமளவிற்கு இரும்புச்சத்து இருப்பதுடன், மலிவானவையும் கூட. ஆகவே நாம் அதிகமாக பலவிதமானஅதாவது அகத்தி, முருங்கை, சிறுகீரை, பொன்னாங்கன்னி, தண்டுக்கீரை போன்ற கீரைகளையும் உட்கொள்ளவேண்டும். நமது உடலில் இரும்புச்சத்தை உடல் கிரகித்துக் கொள்வதற்கு உயிர்ச்சத்து 'சி' தான் துணைபுரிகிறது. இப் பசுங்கீரைகளில் உயிர்ச்சத்து 'சி'யும் அதிகமாகக் கிடைக்கிறது. குழந்தைக்குப் போதுமான அளவிற்கு இரும்புச்சத்து சேருமாறு ஒரு தாய் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு குழந்தைக்கு 4 அல்லது 6 மாதம் முடிந்தவுடன் தாய்ப்பாலுடன் கூடவே, வேறு கூடுதலான உணவையும் குழந்தைக்குப் புகட்டத் துவங்கலாம். இவற்றில் சிறந்தது ''பசுங்கீரை'' சூப் வகையாகும். இவற்றில் ஏராளமான இரும்புச்சத்து உள்ளது. பசுங்கீரையிலிருந்து சூப் தயாரிக்க 1. பசுங்கீரைகளைச் சுத்தமான தண்ணீரில் கழுவ வேண்டும். 2. கீரையைச் சுத்தமான நீரில் வேகவிட்டு, உப்பு சேர்க்கவும். வேகவிடப்பட்ட கீரையிலிருந்து இறுத்த நீரில் தாது உப்புக்களும், உயிர்ச்சத்துக்களும் மிகுந்துள்ளன. இச்சாறை குழந்தைகளுக்குப் புகட்ட வேண்டும்.

குழந்தைக்கு 5 அல்லது 6 மாதங்கள் நிறைந்தவுடன் கூழ் போன்ற ஆகாரத்தையும் கொடுக்கலாம். குழந்தைகளுக்குத் தயாரிக்கும் கூழில் பசுங்கீரைகளையும்சேர்க்கலாம். இவற்றைக் குழந்தைகளுக்குப் புகட்டினால் குழந்தையின் கண் பார்வை இரத்தம், எலும்புகள் ஆரோக்கியமானவையாக இருக்கும்.

இனி கிச்சடி - தயாரிப்பதற்கான வழிமுறையைப் பார்ப்போம்.

தேவையான பொருட்கள்:

அரிசி 3 மேஜைக் கரண்டி (50 கிராம்)

வறுத்தபாசிப்பருப்பு 2 மே. கரண்டி (25 கிராம்)

முளைக்கீரை 15 கிராம்.

தேவையான அளவு உப்பு.

அரிசியையும், பருப்பையும் சுத்தம் செய்து கழுவி, ஒன்றாகச் சேர்த்து வேக விடவும். கீரையை வேகவைத்து, சுத்தமான ஒரு துணியினால் வடிகட்டிவிடவும். வேகவிட்ட அரிசி பருப்புடன், இந்த வடிகட்டிய கீரைச் சாறையும் சேர்த்து, உப்பு கலந்து, நன்றாகக் கலக்கிக் கொடுக்கவும்.

பசுங்கீரை உணவுகளைத் தயாரிக்கும்போது, அதில் சமையல் சோடாவைச் சேர்ப்பது தவறு. அவ்வாறு சேர்ப்பதால் இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு சத்துப் பொருட்கள் வீணாகின்றன.

**கண்பார்வைக்கும், உடல் வளர்ச்சிக்கும் சத்து நிறைந்த கீரைகள்:**

தாது உப்புக்களைப் போலவே நமது உடல் வளர்ச்சிக்கு உயிர்ச்சத்துக்கள் அவசியமாகின்றன. இவற்றில் உயிர்ச்சத்து 'ஏ' பற்றாக்குறையினால் பொதுவாக கண்ணோய், பி2 பற்றாக்குறையினால் 'மைனாலாய்' எனப்படும் வாய்ப் புண், உயிர்ச்சத்து 'சி' குறைவினால் பல் சம்பந்தப்பட்ட நோய்களும், பல் ஈறுகளில் இரத்தம் கசிதல், உடலுக்குத் தேவையான இரும்புச் சத்தை உறிஞ்சும் தன்மை குறைதல், டைரஸின் பினல் அலனைஸ் போன்ற அமினோ அமிலங்களின் வளர்சிதை மாற்றத்தையும் பாதிக்கிறது.

உதாரணமாக, உயிர்ச்சத்து 'ஏ' பற்றாக்குறையின் விளைவையும், அதனைத் தவிர்க்கும் முறைகளையும் நோக்குவோம்.

**வைட்டமின் 'ஏ' பற்றாக்குறையும், பார்வையிழப்பும் :**

தங்கள் உணவில் போதுமான அளவிற்குவைட்டமின்'ஏ'கிடைக்கப் பெறாத குழந்தைகளுக்குப் பார்வையிழப்பு நேரிடலாம். நம் நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான இளம் குழந்தைகளுக்கு, அவர்களின் உணவில் போதுமான அளவிற்கு வைட்டமின் 'ஏ' கிடைக்காத காரணத்தினால் பார்வை இழப்பு நேரிட்டிருக்கிறது.

ஒரு வயது முதல் ஐந்து வயது வரையான குழந்தைகள்தாம் பெரும்பாலும்வைட்டமின்'ஏ'பற்றாக்குறை காரணமாக பார்வையிழக்க நேரிடுகிறது. அவர்களின் உணவில் போதுமான அளவு வைட்டமின்'ஏ'கிடைப்பதில்லை.



வைட்டமின் 'ஏ' பற்றாக்குறை உள்ள ஒரு குழந்தைக்குத் திடீரென்று பார்வையிழப்பு நேரிடுவதில்லை. மெதுவாக கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் குழந்தைக்குப் பார்வை இழப்பு நேரிடுகிறது.

துவக்கத்திலேயே ஒரு குழந்தையிடம் வைட்டமின் 'ஏ' பற்றாக்குறைக்கான அறிகுறிகள் சிலவற்றை நாம் கவனித்துவிட்டால்

அதைக் குணப்படுத்திவிடலாம்.

மங்கலான வெளிச்சத்தில், ஒரு குழந்தையினால் நன்கு பார்க்க முடியவில்லையென்றால் அந்தக் குழந்தைக்கு மாலைக் கண் நோய் என்னும் நோய் பீடித்திருக்கிறது எனலாம். மாலைக் கண்தான் வைட்டமின் 'ஏ' பற்றாக்குறைக்கான முதலாவது அறிகுறியாகும்.

ஒரு குழந்தையின் வெண்விழிப் படலம் சோர்ந்து சாம்பல் நிறத்தில் புள்ளிபோல் ஆரம்பித்து, சற்று பெரிதாகப் படர்ந்து காணப்படும்.

இதனையறியாதவர், கண்ணில் பூ விழுந்துள்ளது என்று கூறுவார்கள். இது கருவிழியிலும் படர்ந்து, குழந்தை முற்றிலுமாக பார்வையிழந்து விடுகிறது. இத்தகைய பார்வையிழப்பைக் 'கெராடே மலேஷியா' என்று அழைக்கிறார்கள்.

**வைட்டமின் 'ஏ' பற்றாக்குறை காரணமாக நேரிடும் பார்வை யிழப்பைக் குணப்படுத்துவது எப்படி?**

வைட்டமின் 'ஏ'' பற்றாக்குறையை, ஊட்டச்சத்துடைய உணவின் மூலம் குணப்படுத்தி விடலாம். சில உணவுகளில் வைட்டமின் 'ஏ' ஏராளமாக அடங்கியுள்ளது. அத்தகைய உணவுகள் குழந்தைகளுக்குப் புகட்டினால், வைட்டமின் 'ஏ' பற்றாக்குறை காரணமாக நேரிடும் பார்வை யிழப்பு அந்தக் குழந்தைக்கு ஏற்படாது.

பால், முட்டை, நெய், மீன், எண்ணெய்போன்றவற்றில் வைட்டமின் 'ஏ' தாராளமாகக் காணப்படுகிறது. ஆனால், இத்தகைய உணவு வகைகள் விலை உயர்ந்தவை. ஆதலால் சில பெற்றோர்களுக்கு இவைகளை அன்றாட உணவில் சேர்க்க இயலாமல் போகக்கூடும். குறைந்த விலையில் மலிவாக, எளிதில் கிடைக்கக்கூடிய கீரைகள் பலவற்றிலும் கூட உயிர்ச்சத்து 'ஏ' புதைந்து கிடக்கிறது. பாலக்கீரை, வெந்தியக்கீரை, தண்டுக்கீரை, அகத்திக்கீரை, பசலைக்கீரை ஆகிய வற்றில் நிறைய வைட்டமின் 'ஏ' சத்து உள்ளது.

சில சமயங்களில் மக்கள் ஒரு சில கீரை வகைகளைச் சாப்பிடுவதில்லை. இவை தீங்கு விளைவிக்கும் என்று கருதுகிறார்கள். மூட நம்பிக்கையினாலோ, அல்லது அறியாமையினாலோ, பசுங்கீரை - ஒரு சிறந்த உணவு என்பதை மறந்து பலர் இந்த உணவுகளை உட்கொள்வதில்லை. ஆனால், இவை சிறந்த உணவு என்பது நமக்குத் தெரிந்திருப்பதால் குழந்தைகள் இவற்றை உண்ணும்படி நாம் ஊக்குவிக்க வேண்டும்.

மேலும், குழந்தைகளின் உணவில் அன்றாடம் கீரைகளைச் சேர்த்து நடத்திய ஆராய்ச்சியின் பயனாக, அக்குழந்தைகளின், இரத்தசிவப்புஅணுக்கள், ஹிமோகுளோபின், பொதுவான உடல், உள்ள வளர்ச்சி யாவும், காய்கறிகளை மட்டும் உணவில் சேர்த்துக் கொண்ட குழந்தைகளைக் காட்டிலும் மேம்பட்டிருந்தது என்று அறிந்துள்ளோம். குழந்தைகளிடையே ஏற்பட்ட உயிர்ச்சத்து 'ஏ' பற்றாக்குறை நோயும் அன்றாடம், உணவில்கீரைகளைச் சேர்த்துக் கொண்டதன் மூலம் தவிர்க்கப்பட்டுள்ளது.

நாம் பொதுவாக முருங்கைக்காயை உபயோகிக்கும் அளவுக்கு முருங்கைக்கீரையை உணவில் சேர்த்துக் கொள்வதில்லை. ஆனால், இந்த முருங்கைக்கீரையில், பி.1, பி.6, நயசின் என்ற உயிர்ச்சத்துக்களும், புரத நைட்ரஜனும் மிகுந்துகாணப்படுகிறது. பசலைக்கீரையில் சர்க்கரைச் சத்து மிகுந்துள்ளது. கொத்து மல்லிக் கீரையில் தாது உப்புக்கள் மற்ற உயிர்ச்சத்துக்களுடன், நயசின் என்ற உயிர்ச்சத்தும் தேவையான அளவில் கிடைக்கிறது. நீரில் கரையக் கூடிய பி 1, பி 2, நயசின், 'சி' மற்ற உயிர்ச்சத்துக்களும், பருப்பு வகைகளைவிட கீரைவகைகளில் மிகுந்து காணப் படுகின்றன.

பசலைக்கீரை, முள்ளங்கிக் கீரை, வெந்தயக்கீரை ஆகியவற்றில் உடலுக்குத் தேவையான மக்னீஷியம் என்னும் தாதுப் பொருள் மிகுந்து காணப்படுகிறது. மரநெநாச்சி இலைகளில் 100 கிராம் அளவிற்கு 3,204 மில்லி கிராம் அளவில் கால்ஷியம் இருக்கிறது என்றும், உடலில் இந்தக் கால்சியம், தண்டுக் கீரை மூலம் கிடைக்கும் கால்சியத்தைவிட நன்முறையில் உறிஞ்சப்படுகிறது என்றும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்

மேலும், அதிக இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் சக்தியைக் கொண்ட ''அசிடைல் கோலின்'' என்ற இரசாயனப் பொருள், வெந்தியக்கீரை, கொத்துமல்லிக் கீரை முதலியவற்றில் மிகுந்துள்ளது என்றும் அறிந்துள்ளனர்.

அதிக இரத்த அழுத்தத்தைக் குறைப்பதற்கும், சீரான இரத்த ஓட்டத்திற்கும், இந்நோய் உடையவர்கள் உணவில் அன்றாடம் வெந்தியக் கீரைகளையும், கொத்துமல்லிக்கீரைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, பசுங்கீரைகள் மலிவாகக் கிடைக்கும் நம் நாட்டில் அவைகளின், அவசியத்தை உணர்ந்து அன்றாட உணவில் ஏதேனும் ஒருகீரையைச் சேர்த்து, பலவித நோய்களினின்றும், நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.



## பள்ளிச் சிறுவர்களின் எண்ணிக்கை 9 கோடி!

பள்ளிச் சிறுவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவதைப் புள்ளி விவரங்கள் நமக்குத் தெரியப்படுத்துகின்றன.

இந்தியாவில், 1978—79ஆம் ஆண்டில் 6—14 வயதுக்குட்பட்ட பள்ளி செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை 9 கோடியைக் கடந்துள்ளது.

1950-51ஆம் ஆண்டு, முதல் வகுப்பிலிருந்து—எட்டாம் வகுப்பு வரை பள்ளியில் சேர்ந்த சிறுவர்களின் எண்ணிக்கை 222.75 இலட்சமாக இருந்தது.

இப்போது எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள உயர்வோ சுமார் ஏழு கோடியாகும்.


1982-83ஆம் ஆண்டில், மொத்த சிறுவர்களின் எண்ணிக்கை 12 கோடியை எட்டும் என்று குறியீடு வகுக்கப்பட்டுள்ளது.

# அரசு திரைப்படப் பிரிவு

இம்மாநிலத்தில், திரைப்படத் தொழிலை எதிர்நோக்கியுள்ள பல இடர்ப்பாடுகளில், கூடுதலான தயாரிப்புச் செலவு, படங்களின் தரக் குறைவு இவை இரண்டும் அடங்கும். தேசீய அளவில் மக்களின் நன்மையை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களை உள்ளடக்கி தரமான திரைப்படங்கள் உருவாவதை ஊக்குவிப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும், ஐந்து படங்களுக்கு, ஒவ்வொரு இலட்ச ரூபாய் வீதம் அரசு உதவித் தொகை வழங்குகிறது' இத்தகைய திரைப்படங்களைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்படும் குழு, அரசுக்கு ஆலோசனை நல்குகிறது.

**சிறந்த திரைப்படங்கள்—கலைஞர்களுக்குப் பரிசுகள்.**

உயர்ந்த கலை உணர்வு, சிறந்த தொழில் நுணுக்கம் செறிந்த பாராட்டுக்குரிய சிறப்பான படங்கள் தயாரிப்பதை ஊக்கு






திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி

விப்பதற்காக, ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கும் திட்டம் 1978–79 ஆம் நிதி ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் மிகச் சிறந்த திரைப்படங்கள், செய்திப் படங்கள், குழந்தைகளுக்கான படங்கள், நடிக, நடிகையர், தொழில் நுட்பக் கலைஞர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு, ரொக்கப் பரிசும், விருதுகளும் வழங்கப்படுகின்றன. தேர்வுகள் இதற்காக அமைக்கப்படுகிற குழுவினால் நடத்தப்படுகின்றன.


நிதிநிலையற்ற, திறன் வாய்ந்த, திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு நிதி உதவி செய்திட திரைப்பட நிதி உதவிக் கழகம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து, அரசு ஆலோசித்து வருகிறது. தயாரிப்பாளர்கள் தமிழில் மிகத் தரமான திரைப் படங்களை எடுக்க உதவுவதே இக்கழகத்தின் நோக்கம்.


அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களிலும், பொது இடங்களிலும் தனியார் படப்பிடிப்பு நடத்த, அந்தந்த இடங்களை

நிர்வகித்து வந்த பல்வேறு துறையினரை அணுகி, பல்வேறு இடங்களில் அனுமதி பெற்றுத்தான் படம் எடுக்கும் முறை இருந்து வந்தது. இம்முறையினால் திரைப்படத் தொழில் துறையினர் பட்டுவந்த இன்னல்களை மனதிற்கொண்டு இம்முறை மாற்றப்பட வேண்டியது என அரசு தீர்மானித்தது. 1978 ஜூலைத் திங்களிலிந்து இத்தகைய அனுமதி வழங்கும் முறையை மாற்றி, ஒரே துறையின் மூலம் அனுமதி வழங்கலாம் என்ற முடிவின்படி, செய்தி, மக்கள் தொடர்புத் துறை இயக்குநரிடம் அனுமதி பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் படப்பிடிப்புக்கான அனுமதி வழங்கும் முறை திரைப்படத் தொழிலுக்கும், பெரிதும் உதவியாக அமைந்துள்ளது.

**திரைப் படத் தொழில் நுட்பக் கல்லூரி.**

1948 ஆம் ஆண்டில் திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கப்பட்டு கணிசமான வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திரைப் படத் தயாரிப்பு சம்பந்தப்பட்ட எல்லாப் பிரிவுகளிலும் பயிற்சி கொடுத்து தேர்வு நடத்தி, வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ் வழங்குவதுடன், திரைப்படத்திற்குள்ள ஆற்றலை மக்களுக்கு உணர்த்துதல், திரைப்படத்தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஆகியவை இக்கல்லூரியின் குறிக்கோளாகும். அரசு அலுவலர்களையும் திரைப்படத்தொழில் தொடர்புடைய அரசுச் சார்பற்ற தொழில் நுட்ப வல்லுநர்களையும் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று, இக்கல்லூரியின் மேம்பாட்டுக்கான ஆலோசனைகளை நல்குகிறது. படப்பிடிப்பு, ஒலிப்பதிவு, படச்





சுருள் கழுவுதல், திரைப்படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், படத் தொகுப்பு, நடிப்பு ஆகியவற்றில் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது. நடப்புக் கல்வி ஆண்டிலிருந்து திரைப் படத் தொழில் நுட்ப நிலையத்தில் தொலைக் காட்சி சாதனங்களை நிறுவி பயிற்சி அளிக்க அவசியமான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. தற்போதுள்ள நவீன முறைகளை மாணவர்களுக்கு புகட்டிட நவீன கருவிகள் நிறுவப்பட வேண்டியுள்ளன. அண்மையில், இக்கல்லூரிக்கு, சில புதிய படப்பிடிப்புக் கருவி போன்ற சாதனங்கள் வாங்கப்பட்டன. நடப்பு ஆண்டில், படத் தொகுப்பு சாதனங்கள் இரண்டும், வண்ணத் தயாரிப்பு இயந்திரம் ஒன்றும், வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

படப்பிடிப்பு தளங்களும் திரைப்படத் தொழில் நுட்ப கல்லூரியிலுள்ள சாதனங்களும், விரும்புகின்ற தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. இதனால் வருமானம் ஓரளவு கிடைப்பதுடன் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள புகழ் பெற்ற தொழில் நுட்பப் பணியாளர்களின் ஆற்றலை நேரில் கண்டு அவர்களோடு பணிபுரிய மாணவர்களுக்கு வாய்ப்பாகவும் அமைகிறது. படப்பிடிப்பு தளங்களை தனிப்பட்ட தயாரிப்பாளர்கள் முழுதும் பயன்படுத்தத்தக்க விதத்தில் படத் தயாரிப்பாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளைப் பெருக்கிட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இம்மாநிலத்தில் நடைபெறும் அரசின் ஆக்கப்பணிகளை, மக்கள் பங்கேற்கும் பொது நிகழ்ச்சி



களைத் தேர்ந்தெடுத்து படமாக்கி செய்திப் படங்களாக மத்திய அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் வெளியிடுகிறது. இத்துடன் அரசின் பல்வேறு துறைகளின் பணிகளை, மக்களுக்குத் தேவையான செய்திகளை கருத்து விளக்கப் படங்களாக (டாகுமென்டரி) எடுத்து இத்திரைப்படப் பிரிவு வெளியிடுகிறது.

இப்படங்களும் (35 மிலி மீட்டர் அளவில்) திரையரங்கு களுக்கு மத்திய அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் வெளியிடப் படுகின்றன. இப்படங்களின் (16 மிலி மீட்டர் அளவில்) பிரதிகள், கிராமப்புற மக்களுக்கு காட்டிட மாவட்டங்களில் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் பிரிவுகளுக்கு அனுப்பப் படுகின்றன. சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகள், தொழிலாளர் வாழும் குடியிருப்புப் பகுதிகள் ஆகியவற்றில் காட்டுவதற்கு இப்படங்கள் மாநிலச் செய்தி நிலையத்திற்கும் அனுப்பப்படுகின்றன.

**தமிழ்நாடு திரையரங்குக் கழகம், சென்னை.**


**1972**-ம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு திரையரங்குக் கழகம், பொறுப்பு வரையறுக்கப்பட்ட அரசு நிறுவனமாகும். தமிழ்நாட்டில் முழு நிறைவுபெறாத திரையரங்குகளைக் கட்டவும் அவற்றை நிலையான திரையரங்குகளாக மாற்றவும், புதிதாக நிலையான திரையரங்குகள், டூரிங் திரையரங்குகள், திறந்த வெளி திரையரங்குகள் கட்டவும் திரைப்படக் கருவிகள் வாங்கவும் நிதி உதவி செய்வது இக்கழகத்தின் நோக்கமாகும். இந்தக் கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 35 இலட்சம். அரசு அளிக்கும் ரூ. 15 இலட்சம் நீண்ட காலக் கடனுடன் ரூ. 50 இலட்சம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிடமிருந்து மறுநிதி ஒதுக்கம் செய்யும் வசதியும் உள்ளது.

இந்நாள் வரையில் சட்டப்படி செல்லத்தக்க ஒப்பளிப்புகள் 74 ஆகும். இவற்றில் 68 பேர் திரையரங்குகளைக் கட்டி முடித்து திரைப்படக் காட்சிகள் நடத்துகின்றனர். ஒரு திரையரங்கத்திற்கு அதிக பட்சம் அளிக்கும் தொகை ரூ. 1.20 இலட்சம் ஆகும். இக்கழகம் இதுவரை ரூ. 84.83 இலட்சம் கடன் தொகை அளிக்க ஒப்பளித்துள்ளது. இதில் ரூ. 83.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் திரையரங்குகள் கட்டப்பட இக் கழகம் ஊக்குவிப்பதில் வெற்றி கண்டுள்ளது.

**தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) விதிகள் 1957.**

**நிர்வாகம் :**

தமிழ் திரைப்படத்துறை, ஆங்கிலம், இந்தி, மலையாளம், தெலுங்கு, போன்ற மொழிப் படங்களின் கடுமையான போட்டியால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை நலிந்து போன நிலையில் இருந்ததால் அதற்கு வலிவூட்டி வளர்க்க இவ்



வரசு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படுத்தியுள்ளது. இதன் காரணமாக தமிழ்த் திரைப்பட உலகம் புத்துணர்ச்சியும் புது வேகமும் பெற்று வளர்ச்சி அடைந்துள்ளது. இதனால் தமிழ்த் திரைப்படங்களுக்குப் போதிய நல்ல திரையரங்குகள் கிடைக்க வழி செய்யும் நோக்குடன் எப்போதும் பிறமொழிப் படங்களையே திரையிட்டு வரும் திரையரங்குகளில், கட்டாயமாக ஆண்டுக்கு 12 வாரங்கள் தமிழ்ப் படங்களை திரையிட்டாக வேண்டுமென்று விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

தற்போது, தமிழ்த் திரைப்படங்களின் வெளியீட்டு எண்ணிக்கைக்கு ஈடு கொடுக்கப் போதிய அளவு திரையரங்குகள் இல்லாத நிலையைப் போக்க, குறைந்த முதலீட்டில் திறந்த வெளித் திரையரங்குகளும், டூரிங் திரையரங்குகளும், செமி பர்மனன்ட் திரையரங்குகளும் அமைக்க சட்டப்படி அனுமதி வழங்குவதில் உள்ள சிக்கல்களைத் தவிர்த்து, ம்ாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாநகரக் காவல்துறை ஆணையர் ஆகியோர் இதுபோன்ற அனுமதி மனுக்களின் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். திரையரங்குகளுக்கு கட்டிட உறுதிச் சான்றிதழ் ஆகியவைகளை வழங்குவதில் உள்ள கால தாமதங்களையும், சிரமங்களையும் தவிர்க்க நட்வடிக்கை எடுப்பதுடன், நடைமுறை உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட இலாக்காக்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளன. திரையரங்குகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில், 1957-ம் ஆண்டில் தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்கு) விதிகள் நடைமுறைத் தேவைக்கு தக்கவாறு திருத்தப்படுவதுடன் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு திரைப்பட அரங்குக்ள் சுத்தமாகவும், விதிகளில் கண்டவாறு வசதிகளைக் கொண்டதாகவும் இருக்க வேண்டுமென அடிக்கடி சோதனைகள் நடத்தப் பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளன. சென்னை போன்ற நகரங்களில் சில பகுதிகளில் திரையரங்குகள் குவிவதைத் தடுக்கவும், பரவலாகப் பொதுமக்கள் தாங்கள் வாழும் பகுதிகளுக்கு அருகிலேயே திரைப்படங்களைக் காணும் வசதிகளை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில், விஸ்தரிப்புப் பகுதிகளில் வசதிமிக்க சிறிய திரை அரங்குகள் அமைப்பதை அங்கீகரிக்கும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.



தமிழகத் திரைப்படத் தணிக்கை முறையில் சென்னையிலுள்ள தணிக்கைக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் திரைப்படத் துறைப்பற்றி போதிய அறிவும் அனுபவமும் இல்லாதவர்களாக அமையக்கூடாது என்பதைச் சுட்டிக் காட்டி, மாநில அரசைக் கலந்தாலோசித்து அக்குழுவை மாற்றியமைக்க வேண்டும் என மத்திய அரசுக்கு சென்ற ஆண்டு எழுதப்பட்டு அதன் காரணமாக மத்திய அரசு தமிழ்நாடு அரசைக் கலந்து கொள்ளும் முறை உருவாகியுள்ளது.

தமிழ்த் திரைப்படங்களில் வெறுக்கத்தக்க பண்பாடற்ற ஆபாசக் காட்சிகள் இடம் பெற அனுமதிக்கக்கூடாது என்ற வகையில் இவ்வரசின் கருத்து மத்திய அரசுக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சென்னை மற்றும் பிற நகரங்களில் ஆபாசத் திரைப்படச் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடை செய்யவும், திரைப்படச் சுவரொட்டிகளைத் தணிக்கை செய்யவும் சட்டமியற்றும் கருத்து அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

[செய்தி, சுற்றுலா, திரைப்படத்தொழில் நுட்பவியல் மானியக் கோரிக்கையை முன் வைத்து சட்டப்பேரவையில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து]

# பயன்தரும் பல்வேறு வகையான சேமிப்புத் திட்டங்களில் ஒன்றான தேசீய சேமிப்புப் பத்திரத்தில் முதலீடு செய்து பயன்பெறுக

—oOo—

| வ. எண். | முதலீட்டின் வகை | வட்டி விகிதம் | சிறப்பு அம்சங்கள் |
|---|---|---|---|
| 1. | 7–ஆண்டு தேசீய சேமிப்புப் பத்திரம் (இரண்டாவது வெளியீடு) | ஆண்டுக்கு 6.5% கூட்டுவட்டி | *வட்டி முழுவதிற்கும் வரி விலக்கு உண்டு. *ஆண்டுதோறும் வட்டித் தொகை பெறலாம். |
| 2. | 7-ஆண்டு தேசீய சேமிப்புப் பத்திரம் (மூன்றாவது வெளியீடு) | ஆண்டுக்கு 6% | *வட்டி முழுவதிற்கும் வரி விலக்கு உண்டு. |
| 3. | 7-ஆண்டு தேசீய சேமிப்புப் பத்திரம் (நான்காவது வெளியீடு) | ஆண்டுக்கு 10.25% | *ஆண்டுதோறும் வட்டித் தொகை பெறலாம். |
| 4. | 7-ஆண்டு தேசீய சேமிப்புப் பத்திரம் (ஐந்தாவது வெளியீடு) | ஆண்டுக்கு 10.75% கூட்டு வட்டி | *ரூ. 100/- ரூ. 204.50 ஆக ஏழே ஆண்டுகளில் பெருகுகிறது. |

விவரங்களுக்கு :

சிறுசேமிப்பு இயக்குநர்,
143, அண்ணா சாலை,
சென்னை-600 002.

மண்டல தேசீய சேமிப்பு இயக்குநர்,
92, அண்ணா சாலை,
சென்னை-600 002.

ஆணையர், சென்னை மாநகராட்சி,
மற்றும் எல்லா
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
உங்களுக்கு அருகாமையிலுள்ள
அஞ்சல் அலுவலகம்.

# ஒரு குடும்பத்தின் கதை

ஆபீசிலிருந்து வேலாயுதம் வீடு திரும்பும்போது ஆறுமணி ஆகிவிட்டிருந்தது. அவர் கக்கத்திலிருந்த குடையை வாங்கித் தூணில் நீட்டிக்கொண்டிருந்த ஆணியில் மாட்டிவிட்டு, கையிலிருந்த பையை வாங்கினாள் அவருடைய மனைவி ஏகம்பாள்.

''புள்ளைங்கள்லாம் எங்கே?'' அவர் சட்டையைக் கழற்றினார். வியர்வை நாறியது.

''பெரியவன் இன்னம் வேலை முடிஞ்சி வரலே; மத்ததுங்கள்லாம் கூடத்துலதான் படிச்சிகிட்டிருக்கு!'' அவள், சற்றுமுன் வாங்கிய பையைத் துழாவினாள் பார்வையால். ''இன்னிக்கும் வாங்கியாரலியா?''

அவர் தன்னுடைய மனைவியைப் பரிதாபகரமாகப் பார்த்தார். ''இல்லேடி. பணம் கெடைக்கிலே. நானும் விடேன் தொடேன்னு ஏழெட்டுப் பேர் கிட்டே கையேந்திட்டேன். எல்லாம் என்னாட்டமே இருக்கானுங்க!''

''நாளைக்கும் யூனிஃபாரத்தோட வரலைன்னா ஸ்கூலுக்குள்ளேயே விடமாட்டேன்னு சொல்லிட்டாங்களாம். பேபிக்கும், செல்வத்துக்கும் இப்ப என்னங்க சொல்றது ?''

வேலாயுதம், சுவரோடு கிடந்த ஓட்டை நாற்காலியில் உட்கார்ந்தார். அது, அவரைக் கீழே தள்ளுவதுபோல நொடித்துப் பயமுறுத்தி,'ஐயோ பாவம்'என்றோ என்னவோ அமைதியடைந்து உட்கார்த்திக் கொண்டது. சுவரில் தொங்கிய பனைமட்டை விசிறியை எடுத்து வீசிக் கொண்டார். தன் படபடப்பைக் காட்டிக் கொண்டது அது. ''இப்ப என்னை என்னடி பண்ணச் சொல்றே?''

ஏகம்பாளுக்குப் பதில் சொல்லத் தோன்றவில்லை. பைக்குள் கிடந்த கண்ணாடிக் கூட்டையும் பேனாவையும் எடுத்து மேஜை மேல் வைத்தாள். ''எங்க ஊட்டுக்காரரும் கச்சேரிக்குப்போறார்னு தெனசரி நீங்களும் போகத்தான் செய்றீங்க. பிரயோஜனம்? ரெண்டு பசங்களெ ஸ்கூல்ல சேர்க்க முடியலே.......சேர்த்த ரெண்டுக்கு டிரஸ் தைக்க வழியில்லே.....டீச்சர் ட்ரெயினிங் முடிச்சவளுக்கு வேலை வாங்க கதியில்லே....''

''ஏகம்பா..! இதையே நீயும் எத்தனைத் தரம்தாண்டி சொல்லுவே ? கொஞ்சம்கூட வாய் அலுக்காதா ? பொழுது விடிஞ்சி பொழுது போனா எவன்கிட்ட பிச்சையெடுக்கிறதுங்கிறதே எனக்கு யோசனையா போச்சி! மொத தேதியன்னிக்கு...வாங்குன கடனெ குடுத்துட்டு ஊட்டுக்கு வந்து மீதியைத் தந்தா..... பாக்கி என்ன ஆச்சுன்னு பாயறே!'

பெரியவன் வேணு வருவது தெரிந்தது. பேச்சை நிறுத்திக் கொண்டார் வேலாயதம்.

''இந்தாம்மா!'' அரிசிப் பையை அம்மாவிடம் நீட்டினான் அவன்.



ஏகம்பாள் அதை வாங்கிக் கொண்டு உள்ளே போனாள். அந்தப் பையையே குறுகுறுவென்று பார்த்தார் வேலாயுதம்.

''என்னப்பா அப்பிடிப் பார்க்கறீங்க?'' என்றான் வேணு. மேல் துண்டால் தரையைத் தட்டினான். தூணில் சாய்ந்தபடி அமர்ந்தான். காலை நீட்டிக் கொண்டான். ''அப்பாடா....''

''ஏண்டாவேணு, ரெண்டு நாள் கூலியை...நீ.....பணமாவே கொணாந்தின்னா உன் தம்பிக்கும் தங்கச்சிக்கும்....யூனிஃபாரம் வாங்கலாம்னு....''

''அரிசிவேணாம்கிறீங்களாப்பா?''

''ஊகூம். அப்பிடிச் சொல்லலே! அதைக்கூட கடனா வாங்கிறலாம்டா. அதுக்கு எனக்கு ஆளிருக்கு. மாசக் கடைசில தந்துரலாம். டவுன்ல இத்தினி வருஷமா சர்வீஸ் பண்றேனே தவிர..கடனா துணி வாங்கன்னு ஒருத்தனெ புடிச்சிக்காமெ போயிட்டேன். அதான்.'' இரண்டு கால்களையும் ஜாக்கிரதையாக நாற்காலிமேல் எடுத்து மடித்துக் கொண்டார் அவர். நாற்காலி முனகியது.

''நீங்க சொல்றது சரிதாம்பா. ஆனா..நான் வேலை பார்க்கிற எடத்துல..கூலியெ...அரிசியாவே வாங்கிக்கிறேன்னு சொல்லிட்டேனேப்பா. இப்பபோயி பணமா கேட்டா நல்லாருக்குமா ?''

''பி. ஏ. படிச்ச ஒனக்கு இப்பிடியொரு நெலமை வரவேணாம் தான்...ஊம். என்ன பண்றது!'' காலைக்கட்டிக் கொண்டு முழங்காலின் மேல் முகத்தை வைத்தார் வேலாயுதம். ''ஏண்டா வேணு, கேட்டா டவுன்லேதான் வேலைங்கிறே! என்ன வேலைன்னும் சொல்ல மாட்றே, எங்கே வேலைன்னும் சொல்ல மாட்றே. பெத்த அப்பனுக்கு இது கூட வாடா தெரியக்கூடாது?''

தலையைக் கோதிக் கொண்டான் வேணு. ''வேணாம்பா. இப்ப நீங்க அதெ தெரிஞ்சிக்கவே வேணாம். கால நேரம் வரும். அப்ப சொல்றேன்.''

''அப்பா!''... கதவோரத்தில் சியாமளா குரல் கேட்டபோது தான் இருவரும் அவள் வந்ததைக் கவனித்தார்கள்.

''அட! நீ எப்பம்மா வந்தே?'' கால்களை மறுபடி தொங்க விட்டுக் கொண்டார் வேலாயுதம்.

''அண்ணன்கிட்டக்க யூனிஃபார்ம் பத்திப் பேசுனிங்களே? அப்பவே நான் வந்தாச்சுப்பா!'' என்றாள் சியாமளா.

கீழ்ங்கண்ணால் வேணுவைப் பார்த்தார் வேலாயுதம்.

''அடுத்த தெருவுல டியூஷன் பணம் பாக்கியிருந்திச்சில்லே? அந்த ரூவா அம்பதும் வந்துச்சி. அப்பிடியே போயி தங்கச்சிக்கும் தம்பிக்கும் ரெடிமேடுலயே யூனிபாரம் வாங்கியாந்துட்டேன். இத பாருங்க!'' தன் கையிலிருந்த காகிதப் பொட்டலத்தைப் பிரித்துக் காட்டினாள் சியாமளா. ''முப்பது ரூவா ஆச்சு. இந்தாங்கப்பா, பத்து ரூவா! நீங்க அஞ்சி; அண்ணனுக்கு அஞ்சி. மீதி பத்தும் அம்மாவுக்கு!''

அவள் நீட்டிய பணத்தைத் தயக்கத்தோடு வாங்கிக் கொண்டார் அந்தத் தந்தை. தொண்டை முடிச்சு ஏறி இறங்கியது.

''டவுனுக்குப் போறதுக்கு பஸ்சா, மண்ணா ? எங்களுக்கேம்மா பணம்? நீயேவெச்சுக்க!'' என்றான் வேணு.

''பஸ்சு இல்லேங்கிறது சரிண்ணே. தெனமும் நீங்களும் அப்பாவும் ரெண்டு மைல் நடந்து போறீங்களே? அங்கே காபி கீபி குடிக்க ஒதவுமில்லே?'' சியாமளா இன்னொரு பத்தை எக்கில் செருகினாள். ''கை காலெ கழுவிட்டு வாங்க. சாப்பிடலாம்?''

சியாமளா உள்ளே போனாள். வேலாயுதமும் வேணுவும் பின் தொடர்ந்தார்கள்.

உள்ளே—

பாடப் புத்தகத்திலிருந்த பாரதியாரின் ஆத்திசூடியைப் படித்துக் கொண்டிருந்தான் சிறுவன் செல்வம்.

''கிளை பல தாங்கேல்'' என்று படித்துவிட்டு, 'அதிகம் கிளைகள் உண்டானால் மரத்துக்கே ஆபத்து' என்று அவன் சொன்ன அர்த்தம் பிள்ளை குட்டிக்காரனான தனக்காகவே எழுதப் பட்டிருப்பதாகக் கருதினார் வேலாயுதம்.

அதிகாலையிலேயே எழுந்து, சூட்டடுப்பில் ராட்டிகளை அடுக்கினாள் ஏகம்பாள். காலாவைக்கு மேல் புகை கிளம்பியது.

'ஒண்ணாலே பாதியே என் பார்வை கெட்டுப் போச்சுடி!''

ராஜீவ்

என்று கண்களைக் கசக்கியபடியே எழுந்தார் வேலாயுதம்.

''ஸ்டவ்வு அடுப்பு வேணும்னு நானும் கேட்டுக் கேட்டு ஓஞ்சுப் போயிட்டேன்!'' ஏகம்பாள் அவர் வாயை அடக்கினாள்.

'ஸ்டவ் அடுப்பு விலை என்ன கொஞ்சமாவா இருக்கு?' என்றது அவர் மனம். காலையிலேயே பேச்சை வளர்த்த விரும்பாமல் அடங்கினார் அவர். புகை, அவரை இரும வைத்தது.

வேணு மளமளவென்று வெந்நீரில் குளித்து விட்டு வேலைக்குப் புறப்பட்டான்.

அடுத்த வீட்டுக் கடிகாரத்தில் ஏழு அடித்தது.

'இவ்வளவு சீக்கிரமா பொறப்படுறானே! அப்பிடியென்ன வேலையோ தெரியலியே! 'வேலாயுதம் தலையில் அடித்துக்கொண்டார்.

செல்வம், குமார், ஜோதி, பேபி, சியாமளா-எல்லோரும் குளித்து முடித்தாயிற்று. வேலாயுதமும் முடித்தார். காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு ஆபீஸ் புறப்படும் அவசரம். கொடியில் கிடந்த மேல்துண்டைக் காணோம். தேடினார்.

''என்னப்பா தேடறீங்க?'' பரிவோடு கேட்டாள் சியாமளா.

''துண்டும்மா. நேத்துத்தான் அலசிப் போட்டேன்...காணமே'' தாடையைச் சொரிந்தார் வேலாயுதம். ''நீ பார்த்தியா?''

''அது வந்துப்பா... இவ்வளவு வளர்ந்திருக்கே...தாவணி கூடப் போடாமெ வர்றியேடின்னு .... பேபியை அவுங்க டீச்சர் கோவிச்சாங்களாம்..அதான்.'' சியாமளா மென்று விழுங்கினாள்.

''ஓகோ! அந்தத் துண்டு அவளோட தாவணி ஆயிட்டுதாக்கும்?''

''ஆமாப்பா!''

''துக்கினியூண்டு ஸ்கூலை வெச்சிகிட்டு மரத்தடியில பாடம் நடத்துற லட்சணத்துல தாவணி போடாமெ வரப்பிடாதாமோ?''

''அதுக்கு...பேபி என்னப்பா பண்ணுவா?''

மேலே பேசாமல் வெளியே கிளம்பினார் வேலாயுதம். தன்னுடைய அடுத்த மகளும் தாவணி போடும் அளவுக்குத் தயாராகி விட்டது அவர் நெஞ்சைக் கலக்கியது. 'பெரியவளுக்குக் கல்

யாணம் நிச்சயம் ஆனாலே தாலிக்குத் தங்கம் வாங்க வழியில்லே! இதுக்குள்ள அடுத்த வனும்...முருகா! நீதாண்டா என்னெக் காப்பாத்தணும்!'

வழக்கத்திற்கு மாறான அதிகக் களைப்போடு ஆபீசுக்கு வந்து சேர்ந்தார் வேலாயுதம்.

நெற்றி வியர்வை இரண்டு பக்கமுமாக வழிந்து கழுத்தை நனைத்து, நெஞ்சுக்கு இறங்குவது பற்றி யோசித்துக் கொண்டிருந்தது. வாய் கரித்தது.

தோளில் கை வைத்தார். 'ஓ.. துண்டு இல்லியோ!'

மற்றவர்கள் கவனிக்கிறார்களா என்று பார்த்துக் கொண்டு ஆபீஸ் மேஜை துடைக்கத் தந்திருந்த நீலத்துணியை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார் வேலாயுதம்.

ஆபீசில் அன்றைக்கு யாரும் வேலை பார்ப்பதாகத் தெரியவில்லை!

சட்டமன்றத்தில் அன்று சமர்ப்பிக்கப்பட இருந்த அரசாங்க நிதிநிலை அறிக்கை பற்றியே எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

எந்த விவாதத்திலும் கலந்து கொள்ளவில்லை வேலாயுதம். காரணம் - நமக்கேன் வம்பு என்பதல்ல; 'பட்ஜெட் எப்படி வந்தாலும் நம்ப குடும்பத்துக்குப் பெரிசா என்ன வந்து விடப் போவுது!' என்கிற அலட்சியமே அவரை மௌனியாக்கியிருந்தது.

**வே**லாயுதம் விட்டுக்கு வந்த போது, வேணு, சியாமளா உட்பட எல்லோருமேவீட்டிலிருந்தது மட்டுமல்ல; எல்லோருமே சிரித்த முகத்தோடு குதூகலமாகத் தன்னை வரவேற்றது அவருக்கு அதிசயமாக இருந்தது. 'என்னவாயிருக்கும்!...'

செல்வம், குடையைப் பிடுங்கி வைத்தான். குமார், பையைப் பிடுங்கி வைத்தான்.

''இதப் பார்த்திங்களாப்பா?'' என்று, நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவர் கையில், அன்றைய மாலை செய்தித் தாளைக் கொடுத்தாள் சியாமளா.

'தமிழக அரசு பட்ஜெட்இன்று தாக்கல் ! விவசாயிகள் கடன் ரத்து!' என்று கொட்டை எழுத்தில் போடப்பட்டிருந்தது."இதுல நம்ம சந்தோஷப்பட என்னம்மா இருக்கு?'' என்று சலிப்போடு கேட்டார் வேலாயுதம். நீளமாய் ஒரு பெருமூச்சு!

''என்னப்பா இப்பிடிக் கேட்கறீங்களே? உள்ளாற படிச்சுப் பாருங்களேன். புதுசா 2,800 வாத்தியாருங்களுக்கு வேலை தரப் போறாங்களாம், நிச்சியம் அதுல எனக்கு வேலை கெடைச்சுடும்பா! அப்புறம்..நம்ப ஊராட்டம் இருக்கிற கிராமங்களெ இணைக்கிறாப்ல நெறைய புது பஸ் விடப்போறாங்களாம். நீங்களும் அண்ணனும் கூடிய சீக்கிரமே டவுனுக்கு பஸ்லபோவலாம்பா!'' உற்சாகத்தோடு சொன்னாள் சியாமளா. ''மரத்தடி ஸ்கூல்னு பேபி ஸ்கூலை இன்னிக்கி காலேலதானே சொன்னீங்க? கிராமாந்தரப் பள்ளிங்களுக்கெல்லாம்இன்னம்கட்டடம் கட்ட இதுல நிதி ஒதுக்கியிருக்காங்கப்பா !''

''ஓகோ!'' வேலாயுதம் கண்ணாடியை எடுத்து மாட்டியபடி பேப்பரை விரித்தார்.



வாழ்க்கை

வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக் கூடாது; மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.

தந்தை பெரியார்

''இத பாருங்க. ஸ்டவ் அடுப்பு மேல இருந்த விற்பனை வரி இன்னையோட ரத்தாயிருச்சாம், இந்த மாசம் சம்பளத்துலயாச்சும் நீங்க அதுல ஒண்ணு வாங்கியாந்தே தீரணும். அப்புறம் காலேல காலேல கண்ணெ கசக்கிகிட்டே என்னைதிட்டப்புடாது!'' ஏகம்பாள் குறும்பாகப் பேசினாள். ''இன்னொண்ணாச்சே! சியாமளாவுக்கு கல்யாணம் வந்தா தங்கம் விக்கிற வெலேல தாலி எப்பிடி பண்றதுன்னு பொலம்புவீங்களே? அந்தக் கவலையும் இனிமே வேணாம். மலிவு வெலயிலே தாலி கெடைக்குமாம். பேப்பர்ல போட்டிருக்கான்!''

''நீ என்னமோ சொல்லணும்னியேண்ணே?'' என்று வேணுவைக் கிள்ளினாள் ஜோதி.

''ஆமாம்பா! நான் வேலை பார்க்கிறது பத்தி கேட்டுகிட்டே இருந்திங்கள்லே? இப்ப சொல்றேம்பா..'' என்று ஆரம்பித்தான் வேணு.

எல்லோரும் அவனையேபார்த்தனர்.

''வேலைக்கு உணவுதிட்டம்னு ஒண்ணு. ஒரு நாள் முழுதும் வேலை செஞ்சா, அதுக்கான கூலியெ பணமா தராமெ அரிசியா தர்றதுதான் அது....''

''வேலை என்னவாம்?'' என்றாள் பேபி.

''குளம் வெட்றது....ஏரி தூர் வார்றது..ரோடு போடறது...... இதாட்டம்....''

''அப்பிடின்னா நீ பார்த்த வேலை?'' என்று பதற்றத்தோடு கேட்டாள் ஏகம்பாள்.

''நம்ப ஊருக்கு வெளியே இருக்கிற ஏரியில.....''

''அடப்பாவி! பி. ஏ. படிச்சிட்டு மண் அள்ளவா போனே?'' பெற்ற மனம் கலங்கியது.

பிள்ளை மனம்கல்லாகவேஇருந்தது. ''நம்ப வயத்துக்காக நாம உழைக்கிறதுல என்னம்மா தப்பு? உங்களுக்கெல்லாம் தெரிஞ்சா விட மாட்டிங்கன்னுதான் தெரியாமெ போனேன். இதை இப்ப ஏன் நான் சொல்றேன்னா....... கிராமப்புறத்துல என்னாட்டம் இருக்கிற பட்டதாரிங்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு.. தொழிற் பயிற்சி இதெல்லாம் தரப் போறதா பட்ஜெட்ல சொல்லிருக்காங்கப்பா. சீக்கிரமே நமக்கெல்லாம் நல்ல காலம் வந்துரும்' வேணு உச்சரித்த ஒவ்வொரு சொல்லும் உறுதியோடு ஒலித்தது. அவன் உடம்பில் கம்பீரம் தெரிந்தது.

'பட்ஜெட் எப்பிடி வந்தாலும் நம்ப குடும்பத்துக்குப் பெரிசா என்ன வந்துடப்போவுது?' என்று ஆபீசில் இருந்தபோது நினைத்த வேலாயுதத்தின்,மனம் தன் குடும்பத்தை உத்தேசித்தே போடப்பட்டிருப்பது போலிருந்த பட்ஜெட் விஷயங்களால்பரவசத்தில் ஆழ்ந்தது!

சிறுகச் சிறுக நிறைவேற்றப் படவிருந்த அந்தத் திட்டங்களெல்லாம் அப்போதே நிறைவேறி தமது அல்லல் நிலை அடியோடு நீங்கிவிட்டது போல அவருடைய தளர்ந்த மனம் திடகாத்திரமடைந்தது. அந்த மகிழ்ச்சியில், மடியிலிருந்த செய்தித் தாள் கீழே நழுவுவதைக்கூட அவர் கவனிக்கவில்லை!


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கண்களுக்கு குளுமையூட்டும்
பருத்தி, மற்றும் பருத்தியில் அச்சிட்ட
சேலைகள்; கோடைக் காலத்திலும்
குளிர்காலத்தைக்காட்டும் பல
வண்ணச் சேலைகள். நீடித்து
உழைப்பவை.
கோ-ஆப்டெக்ஸ்

# மாவட்ட ஆட்சித் தலைவாகள் மாநாடு





மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் 14.7.'80ல் நடைபெற்றது. ஊராட்சி ஒன்றியங்களில் "தன்னிறைவுத் திட்டத்தைத்" தீவிரப்படுத்துவது குறித்து இம் மாநாட்டில் விவாதிக்கப் பெற்றது.